
# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி





சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம


அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 09

2010 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல், சமூகவிஞ்ஞானபீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கத்தோலிக்க திருமறை**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

**தரம் 9**

முதற் பதிப்பு - 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

**சமயக் கல்வித்துறை**
**மொழிகள், மானிடவியல், சமூகவிஞ்ஞானபீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
டிசைன் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடட்டில் அச்சகத்தினால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழிகாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகிறது. இன்றைய வகுப்பறைக்கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக்கற்றல் - கறிபித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையில் இருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகிறது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாயிரம் மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர்கள் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் அவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்படி வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக்கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயர்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக பாடநூல்களை வழங்கி வருகிறது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவு விருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரே ஆவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ்வெதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ்வறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு. எம். என். ஜே. புஸ்பகுமார**
**கல்வி** வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
**'இசுருபாய'**
**பத்தரமுல்ல**

12.11.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகம் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்நடைமுறைகள் காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிகமான விடயங்களைக் கற்று, அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள், இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விஷேட கவனமும் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி பகுதியில், புதியதொரு கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்தல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாச்சாரம் ஒன்றைக் காண முடியும். இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடநூலை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்காகவும், முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களின் பணியாகும், இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புத்தறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாகவும் மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும், இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக செயற்பட்டு, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுவர்களாகக் காணப்படுவர். அதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர் எதிர் கொள்ளும் கஷ்டங்கள், இடர்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிகளுக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்படும்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்த கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை, மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமானவாறு ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும், புதிய கற்றல் கலாச்சாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

*விமல் சியம்பலாகொட*
உதவிப் பணியாளர் நாயகம்,
மொழிகள், மானுவியல் சமூகவிஞ்ஞானபீடம்
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்

| | |
|---|---|
| ஆலோசனை : | *பேராசிரியர் லால் பெரேரா*<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்<br><br>*திரு விமல் சியம்பலாகொட*<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்,<br>மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு |
| மேற்பார்வை : | *கலாநிதி. மாவுல்கொட சுமணரத்ன தேரர்*<br>பணிப்பாளர், சமயக் கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| இணைப்பாளர் : | *முதுமாணி அருட்பணி. லொயிட் சாந்திகுமார்*<br>செயற்திட்ட அதிகாரி, சமயக் கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>*கலைமாணி அருட்பணி. கமுனு டயஸ் ஜயவர்தன*<br>உதவி செயற்திட்ட அதிகாரி, சமயக் கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| கிறிஸ்தவ ஆலோசனைக் குழு : | *மேதகு ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை*<br>தலைவர் - திருவிவிலிய, மறைக்கல்வி,<br>கல்வி பற்றிய தேசிய ஆணைக்குழு<br><br>*மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை*<br>உபதலைவர் - திருவிவிலிய, மறைக்கல்வி,<br>கல்வி பற்றிய தேசிய ஆணைக்குழு<br><br>*அருட்பணி. ஜவன் பெரேரா*<br>தேசிய பணிப்பாளர், கல்வி, கத்தோலிக்க பாடசாலைகள்.<br><br>*அருட்பணி. நிக்கிலஸ் லோவ்*<br>தேசிய பணிப்பாளர், திருவிவிலிய, மறைக்கல்வி.<br><br>*கலாநிதி அருட்பணி. ஞானமுத்து பிலேந்திரன்*<br>கிறிஸ்தவ, இஸ்லாம் நாகரீகம்,<br>யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.<br><br>*பேராசிரியர் ஷேலி விஜயசிங்க*<br>திணைக்களத் தலைவர், கிறிஸ்தவ நாகரீகம்,<br>களனிப் பல்கலைக்கழகம், களனி<br><br>*அருட்பணி. கிறகறி பர்னாந்து*<br>சமயப் பிரிவு, கல்வி அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கியோர் : *முதுமாணி அருட்பணி. எஸ். பீ. ஜெயந்தன் பச்சேக்*
பகுதி நேர விரிவுரையாளர்
கல்வியியற் கல்லூரி, வவுனியா

*கலைமாணி அருட்பணி. மால் வர்ணசாந்த பர்னாந்து*
இலங்கை கல்வி நிர்வாகச் சேவை III, அதிபர்,
மேமா/கள/ புனித அந்தோனியார் தேசியக் கல்லூரி,
வத்தளை

*முதுமாணி திருமதி. பயஸ் ரதி யுடொக்சியா பீரிஸ்*
ஆசிரிய ஆலோசகர், மன்னார்.

*கலைமாணி திருமதி. தி. ஜெ. போல் அன்ரனி*
ஓய்வு பெற்ற அதிபர்.

*செல்வி. டி.ஐ. யோசப்*
ஆசிரிய ஆலோசகர், கம்பஹா

*செல்வி. ஜே. பிலோமின்*
ஆசிரிய ஆலோசகர், மட்டக்களப்பு.

*கலைமாணி திரு. டபிள்யூ. டீ. குயின்றஸ் போல்*
ஆசிரிய ஆலோசகர, களனி.

*கலைமாணி திருமதி. பி.டி.எஸ். அயிரின்*
ஆசிரிய ஆலோசகர், ஜயவர்தன புர.

*திருமதி. டபிள்யூ. கே. எம். ஐ. எஸ். கே. பர்னாந்து*
ஆசிரிய ஆலோசகர்,
குளியாப்பிட்டிய.

*கணனி பதிப்பும் வடிவமைப்பு :* ஜோர்ச் ஒலிவர்
திருமதி. எப்.ஏ.எப். நிஸ்மியா

அட்டைப் படம் : திருமதி. அனூஷா மாரியன் திசேரா

அலுவலக உதவியாளர்கள்:
திருமதி. எஸ்.சி. பிரியதர்ஷினி
திரு. ஐ.ஜீ. போஜித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| விடயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| முகவுரை | | | iii |
| முன்னுரை | | | iv |
| ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும் | | | vii |
| **பகுதி I** | | | |
| 9.1.0 | : | விரிவான பாடத்திட்டம் | 1 |
| 9.1.1 | : | அறிமுகம் | 2 |
| 9.1.2 | : | பாடத்திட்டத்தின் நோக்கம் | 3 |
| 9.1.3 | : | வகுப்புக்குரிய தேர்ச்சி | 3 |
| 9.1.4 | : | பாடத்திட்டம் | 4 |
| 9.1.5 | : | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 9 |
| 9.1.6 | : | கணிப்பீடும் மதிப்பீடும் | 9 |
| **பகுதி II** | | | |
| 9.2.0 | : | பாடத்திட்டத்தின் தொடரகம் | 10 |
| 9.2.1 | : | கற்றல் கற்பித்தல் முறை விளக்கம் | 11 |
| 9.2.2 | : | தர விருத்தி உள்ளீடுகள் | 14 |
| 9.2.3 | : | செயற்பாட்டுத் தொடரகம் | 15 |
| **பகுதி III** | | | |
| 9.3.0 | : | கணிப்பீடும் மதிப்பீடும் | 111 |
| 9.3.1 | : | கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம் | 112 |
| 9.3.2 | : | கற்றல் கற்பித்தலை மேலும் விரிவு படுத்துவதற்கான மதிப்பீட்டுக் கருவிகள் | 114 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி I

9.1.0 விரிவான பாடத்திட்டம்

9.1.1 அறிமுகம்

9.1.2 பாடத்திட்டத்தின் நோக்கம்

9.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

9.1.4 பாடத்திட்டம்

9.1.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.1 அறிமுகம்

சமய நெறியைப் புறக்கணித்துவிட்டு ஒழுக்க விழுமியங்கள் நிறைந்ததொரு சமூகத்தை எதுவிதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே சமயவிளக்கம் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. இத்தகைய சமய விளக்கத்துடனான வாழ்வானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதனால் இயல்பாகவே ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமொன்று உருவாகும்.

கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் இதுவரைகாலமும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கலைத்திட்டமானது அத்தத்துவத்தைக் கடந்து தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்ட தத்துவத்துடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற்கிணங்க கிறிஸ்தவனொருவன் தனது சமயத்தின் வழியாக எத்தகைய சமயத் தேர்ச்சிகளை தனது வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. அவ்வவ் தேர்ச்சிகளின் விருத்தியுடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய விதம் கவனத்திற்குரிய தொன்றாகின்றது. இதற்காகப் பொருத்தமான கற்பித்தல் நுட்பமுறைகளை உறுதிப்படுத்துகின்ற வகுப்பறை செயன்முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் ஆறு தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புகளில் ஒரு அலகு அல்லது பல அலகுகளை அடிப்படையாகக்கொண்டு ஆறாம் தரத்தில் எளிமையான அறிமுகத்துக்கும் பதினொராம் தரத்தை அடையும் போது இவ்வலகுகளில் கற்பிக்கப்படுகின்றவை பற்றிய ஓரளவு படிமுறை வளர்ச்சியைக் கொண்டதான முறையில் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஆறாம் வகுப்பில் இருந்து பதினோறாம் வகுப்புவரை கத்தோலிக்க பாட நெறியின் அனைத்து பாடங்களும்.

1. விசுவாசம்
2. விசுவாச வாழ்விற்கு ஊட்டம். (அருளடையாளங்கள்).
3. கிறிஸ்தவ வாழ்வு.
4. செபவாழ்வு.

ஆகிய நான்கு தேர்ச்சிகளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஒவ்வொரு வகுப்பிலும் அவ் தேர்ச்சிகளை ஆழமாக கற்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்தும், இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எனும் பாப்பாண்டவரால் குறிப்பிட்ட விஷேட கமிட்டி ஒன்றின் மூலம் எழுதப்பட்ட" கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி" (Cathechism of the Catholic Church) எனும் நூலில் வரும் ஆய்வுப் பொருள்களுக்கமைய ஒருங்கமைந்துள்ளது.

மேற்கூறிய விடயங்களை நிறைவேற்றக் கூடிய விதத்தில் தரம் எட்டுக்குரிய பாடங்கள் தயாரிக்கப்படுள்ளன.

ஆசிரியராகிய உங்களிடம் எதிர்பார்ப்பது யாதெனில், வாழ்வில் ஒரு கட்டத்தை நிறைவு செய்து கொண்டு, மற்றொரு கட்டத்தில் காலடி வைக்கத் தயாராக இருக்கும் இம்மாணவச் செல்வங்களின் சமய வாழ்க்கையைச் சமய அனுபவங்களுடன் இணைத்துக்கொள்ளக் கூடிய விதத்தில் உங்களது கற்பித்தற் பணியை முழுமையான அர்ப்பணிப்புடனும், பொறுப்புணர்வுடனும் நிறைவேற்ற வேண்டும் என்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.2 பாடத்திட்டத்தின் நோக்கம்

1. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதன் தன்னைப் படைத்தவரை அறிந்து கொள்ளத் திட்டமிடுல்.

2. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக்கொண்டு முழுமையான கிறிஸ்தவனாக வாழ்வதற்குத் திட்டமிடல்.

3. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகரத் திட்டமிடல்.

4. அடிப்படைக் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்பும் இறைக் கட்டளைகளினதும், மலைப்பொழிவினதும் அடிப்படையில் மறையைக் கற்பித்தலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்ளச்செய்தல்.

5. செபத்தின வல்லமையால் ஆற்றல் பெற்று சமூகத்தை ஒளிரச் செய்யும் ஒளியாகச் செயலாற்றுவதற்கு வழிகாட்டல்.

6. கிறிஸ்துவின் அளவில்லாத அன்பினால் நிறைவடைந்து அவ்வன்பை சமூகத்திலே பரப்பும் படியாக திட்டமிடல்.

7. தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடையாகையால் அதனைப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்தல்.

8. ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்து மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புவதோடு கிறிஸ்வதன் என்ற உறுதியான அடையாளத்தோடு, உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் பங்காளிகளாக்குதல்.

9. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழக்குவித்தல்.

10. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தனது நாட்டின் மீது பற்றையும், மரியாதையையும் உருவாக்குதல்.

## 9.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. உலகத்தில் இறை செயற்பாடுகளை உணர்ந்து கொள்வார்.

2. இறைவனின் அருளைப் பெறுவதற்கான அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வார்.

3. இறைக் கட்டளைகளைக் கடைப்பிடித்து நீதியும் ஒழுக்கமும் நிறைந்து வாழ்வர்.

4. செப வாழ்வில் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.4 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| 9.1 இறைத்திட்டத்திற்கு அமைய வாழ்ந்து புதிய உலகைக் கட்டியெழுப்ப உதவுவர். | 9.1.1 திருத்தூதர்களின் அழைப்பின் வழியாக தாம் பெற்ற கிறிஸ்தவ அழைப்பை இனங்காண்பர். | ♦ இறை ஆட்சிக்கான அழைப்பு<br>திருத்தூதர்களின் அழைப்பு<br>மத். 4:18-22,<br>லூக். 5:1-11<br>மாற். 1:16-20 | 02 |
| | 9.1.2 புதிய உலகைக் கட்டியெழுப்புவதற்கான அடையாளங்களைத் தேடிப்பார்ப்பர். | ♦ நான்கு வகைப் புதுமைகள்<br>• இயற்கையைக் கட்டுப்படுத்தல்<br>மத். 14:22-33<br>• நோய்களைக் குணமாக்குதல்<br>மத். 12:9-14<br>• அசுத்த ஆவிகளை விரட்டுதல்.<br>லூக். 4:31-37<br>• மரணத்ததை வெற்றி கொள்ளல்.<br>யோவா 11:38-46 | 02 |
| | 9.1.3 புதிய உலகைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப நிகழ்வுகளை வரிசைப்படுத்துவர். | ♦ பெந்தகோஸ்து விழா<br>தி.ப. 2:1-4<br>• ஏழு திருத்தொண்டர்களை தேர்ந்தெடுத்தல்.<br>தி.ப. 6:1-6<br>• பவுலின் மனமாற்றமும் அழைப்பும்<br>தி.ப. 9:4-19 | 02 |
| | 9.1.4 புதிய கிறிஸ்தவ சமூகத்தின் கிரமமான வளர்ச்சியினை விளங்கிக் கொள்வர். | ♦ சபையின் வளர்ச்சி<br>• தொடக்கத் திருச்சபையின் பண்புகள்.<br>தி.ப. 2:42-47<br>• கொர்னேலியுவின் மனமாற்றம்<br>தி.ப. 10-41-48<br>• ஜெருசலேம் பொதுச்சங்கம்<br>தி.ப. 15:7-11, 19-21 | 02 |
| | 9.1.5 புதிய உலகைக் கட்டியெழுப்பும் இறைத் திட்டமானது முழுமை பெற்ற விதத்தினை விவரிப்பர். | • புதிய வானமும் புதிய பூமியும் பொதுத் தீர்வு<br>மத். 25:31-46<br>• புதிய வானம், புதிய பூமி<br>தி.வெ. 21:1-8 | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| 2.0 சமூகத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவர். | 9.2.1 கிறிஸ்துவின் மீட்பின் தூதுப் பணியை நிறைவேற்றுவர். | ♦ விடுதலை அளிப்பவர்<br>• பாஸ்கா விழா<br>வி.ப. 12:1-20<br>• பாஸ்கா விழா பற்றிய விபரங்கள்<br>வி.ப. 12:21-28<br>• கிறிஸ்துவின் பாஸ்கா உணவு<br>மத். 26:17-19<br>மத். 26:26-30<br>• இறுதி இராவுணவு<br>லூக். 22:17-20<br>• கிறிஸ்துவின் மரணம்<br>லூக். 23:44-47<br>• கிறிஸ்துவின் கீழ்படிதல்<br>எபி. 5:8-9 | 03 |
| | 9.2.2 நற்கருணை வழியாக கிறிஸ்தவ குழும ஒன்றிப்பில் வாழ்வர். | ♦ கிறிஸ்தவ குழும ஒன்றிப்பு வாழ்வின கடமைகளும் பொறுப்புகளும்.<br>• இறுதி இராவுணவில் தகுந்த முறையில் பங்குபெறுதல்.<br>1கொரி. 11:27-33<br>க.தி.ம. 787-799,793<br>''அகாபே" வாழ்க்கை முறை<br>தி.ப. 2:42-47 | 02 |
| | 9.2.3 நல்தொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுடன் செயற்படுவர். | ♦ கிறிஸ்தவ ஒருமைப்பாடு<br>உரோ. 12-4:8<br>• திராட்சைக்கொடி<br>யோவா. 15:4-5<br>• உன்னத குரு<br>யோவா 17:20-21<br>• தொடக்கத் திருச்சபையின் ஒருமைப்பாடு<br>தி.ப. 4:32-33<br>• கபன்மையில் ஒருமை<br>1கொரி. 12:12-30 | 03 |
| | 9.2.4 அர்பணிப்புடன் செயலாற்றி மனுக்குல மீட்புக்கு உதவுவர். | ♦ மனுக்குல மீட்பு (விடுதலை)<br>• செபக்கூடத்தில் இயேசுவின் உரை<br>லூக். 4:16-19<br>• நல்லாயன்<br>யோவா 10:14-16<br>• திருச்சட்டங்கள்<br>மத். 5:17-18<br>• சக்கேயு<br>லூக். 19:10 | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| 9.3.0 அன்பின் கட்டளைகளை தமது வாழ்வில் செயற்படுத்துவர். | 9.3.1 திருவிவிலிய அமைப்பை அறிவதன் மூலம் இறை அன்பை அனுபவித்து சமூகத்தில் பணியாற்றுவர். | ♦ திருவிவிலியம் என்றால் என்ன?<br>• பிரிவுகள்<br>• பழைய ஏற்பாடு<br>• புதிய ஏற்பாடு<br>• நூல்களின் எண்ணிக்கை<br>73 நூல்கள்<br>• நூலின் மூல மொழிகள்<br>பியிலோஸ், அரமெயிக், எபிரேயம், கிரேக்கம்.<br>• காலம்<br>கி.மு. 1950 - கி.பி. 100<br><br>♦ இறையூக்கம் இறை ஏவுதல்<br>• ஆசிரியம்<br><br>♦ பழைய ஏற்பாடு<br>• உடன்படிக்கை<br>• ஐந்நூல் (தோரா)<br>• வரலாற்று நூல்கள்<br>• ஞான நூல்கள்<br>• இறைவாக்கினர்கள்<br><br>♦ புதிய ஏற்பாடு<br>• இயேசுக்கிறிஸ்துவில் நிறைவு<br>• வரலாற்று நூல்கள்<br>- நற்செய்தி<br>- திருத்தூதர்பணி<br>• திருமுகங்கள்<br>- பவுல்<br>- ஏனைய<br>• இறைவாக்கு நூல்<br>- திருவெளிப்பாடு | 03 |
| | 9.3.2 இறைவனின் குரலுக்கு செவிமடுத்து அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர். | ♦ எமக்குள் இறைவனின் குரல்<br>• சாமுவேலின் அழைப்பு<br>1சாமு. 3:10<br>• மங்களவார்த்தை<br>லூக். 1:38<br>• யோசேப்பின் அழைப்பு<br>மத். 1:21-24<br>• எசாயாவின் அழைப்பு<br>எசா. 6:8-9 | 03 |
| | 9.3.3 இறைவனோடு இணைந்த வாழ்வை வளர்த்துக் கொள்வர். | ♦ இறைவனோடு இணைந்த வாழ்வு<br>• புனித மாட்டின் டி. போரஸ்<br>• புனித டொமினிக் சாவியோ<br>• புனித அலோசியஸ் கொன்சாகா<br>• புனிதை யூவ்றெசியா<br>• குழந்தை இயேசுவின் புனித தெரேசாள் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 9.3.4 கிறிஸ்தவ கண்ணோட்டத்திற்கமைய தமது சமூகத்தின் கடமைகளை நிறைவேற்றுவர் | ♦ சமூகத்துள் எமது கடமைகள்<br>• கருதினால் தோமஸ் கூரே<br>• பேராயர் ஒஸ்கார் றொமேறோ.<br>• ஆயர் டெஸ்மன் ரூரு<br>• அருட்திரு. பீற்றர் பிள்ளை<br>• கொட்வின் மென்டிஸ் | 03 |
| | 9.3.5 சமூக சவால்களை எதிர்நோக்குவதன் வழியாக உண்மைக்கு சான்று பகர்வர் | ♦ உண்மைக்குச் சான்று<br>• உண்மையில் செயற்படுவர்.<br>யோவா 8:31-32<br>• தூய ஆவி<br>யோவா 14:16-17a<br>யோவா 16:13<br>• பிலாத்தின் முன்னிலையில் இயேசு<br>யோவா 18:37<br>• மகாத்மா காந்தி<br>• புனித தோமஸ் மூர்<br>• அருட்திரு. மைக்கல் றொட்டிகோ<br>• ஆயர் லியோ நாணயக்கார<br>• ஆயர் தியோகுப்பிள்ளை | 03 |
| | 9.3.6 திருவிவிலியத்தின் படிப்பினைகளுக்கிணங்க முழுமையான மனிதத்துவத்தை நோக்கிச் செல்வர். | ♦ முழுமையான மனிதத்துவத்தை நோக்கி<br>• அன்பின் சட்டம்<br>மத். 22:37-39<br>• திராட்சைச் செடி<br>யோவா. 15:9-10<br>• அன்பின் மகத்துவம்<br>1கொரி. 13:1-13<br>• பகைவரை அன்புசெய்தல்<br>மத். 5:43-48, லூக். 23:34 | 03 |
| | 9.3.7 கிறிஸ்துவின் முன்மாதிரியான பண்புகளை தமதாக்கிக் கொள்வதன் வழியாக தமது வாழ்வில் அன்பை அனுபவிப்பர். | ♦ முன்மாதிரிகையான கிறிஸ்து<br>• கிறிஸ்துவின் தாழ்ச்சி<br>பிலி. 2:5-11<br>• கிறிஸ்துவின் தலைமைத்துவம்<br>கொலோ 1:19-20<br>• முழுமையான கிறிஸ்தவ வாழ்வு<br>கொலோ 2:6-7<br>• புதுவாழ்வு<br>கொலோ 3:12-15 | 03 |
| 9.4.0 திருவழிபாட்டின் வழியாக இறைமக்கள் இறைவனைப் புகழ்வர் | 9.4.1 பழைய ஏற்பாட்டுப் பலிகள் பற்றி ஆழமாகக் கற்பர். | ♦ பழைய ஏற்பாட்டின் பலிகள்<br>• மெல்கிசதேக்<br>தொ.நூ. 14:17-20<br>• காணிக்கை ஒப்புக்கொடுத்தல்<br>வி.ப. 29:10-18<br>• தினமும் ஒப்புக்கொடுக்கப்படும் பலி<br>வி.ப. 29:38-44 | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | | • பரிகாரப்பலி<br>லேவி. 16:20-22<br>• பத்திலொரு பங்கு<br>மலா 3:10-12<br>இ.ச. 14:22-23<br>• செக்கரியாவின் பணி<br>லூக். 1:8-10 | |
| | 9.4.2 கிறிஸ்துவின் பலி வழியாக மீட்புப் பணி முழுமையடைந்ததை ஆராய்வர். | ♦ புதிய ஏற்பாட்டின் பலிகள்<br>• பாவம் போக்கும் செம்மறி<br>யோவா 1:29<br>• இறுதி இராவுணவு<br>லூக். 22:14-20<br>• சிலுவையில் அறைப்படுதல்<br>லூக். 23:34-49<br>• பாதம் கழுவுதல்<br>யோவா 13:1-15<br>• புதிய உடன்படிக்கையின் இடைநிலையாளர்<br>எபி. 9:11-15<br>• கிறிஸ்துவின் வாழ்வுப்பலி<br>எபி. 10:11-14 | 03 |
| | 9.4.3 ஆரம்ப திருச்சபையில் திருவழிபாடு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட (முறை) விதம் பற்றிய காரணிகளை முன்வைப்பர். | ♦ அப்பம் பிட்கும் சடங்கு<br>• எம்மாவு சீடர்கள்<br>லூக். 24:30-31<br>• தொடக்கத் திருச்சபையின் பண்புகள்<br>தி.ப. 2:42-46<br>• யுதிக்கசுக்கு உயிரளித்தல்<br>தி.ப. 20:7<br>• இறுதி இராவுணவு<br>1கொரி. 11:23-26<br>• உயிருள்ள எதிர்நோக்கு<br>1பேதுரு 2:5<br>• க.தி.ம. 1066, 1330.<br>1350 - 1355 | 03 |
| | 9.4.4 திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டின் முக்கியத்துவத்தை விளங்கி வாழ்வை அமைத்துக் கொள்வர். | ♦ இறைவார்த்தை வழிபாடு<br>• செபக்கூடத்தில் இயேசுவின் உரை<br>லூக். 4:16-21<br>க.தி.ம. 1346, 1349<br>2ம் வத்திக்கான் சங்.<br>''திருவழிபாடு" இல. 24,25 | 03 |
| | 9.4.5 திருப்பலியில் நற்கருணை வழிபாட்டின் முக்கியத்துவத்தை விளங்கி பக்தியாக பங்குபற்றுவர். | ♦ நற்கருணை வழிபாடு<br>க.தி.ம. 1350-1355, 1391-1401<br>லூக். 22:19 | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.1.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

1. பாடசாலைத் தவணைகளில் ஆகக் குறைந்தபட்சம் ஒரு முறையாவது மாணவர்களைத் திருப்பலியில் வகுப்பு ரீதியாகப் பங்குபற்றச் செய்தல்.

2. மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகப் பங்குக்குருவானவரின் வழிகாட்டலை இயன்ற வகையில் பெற்றுக்கொள்ளல்.

3. திருவழிபாட்டு ஆண்டில் அந்தந்த காலங்களுக்கேற்ப பொதுவழிபாடுகளிலும் பக்தி முயற்சிகளிலும் மாணவர்கள் பங்குபற்றும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக குருவானவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

4. ஒற்றுமை, பொதுத்தன்மை, பொறுமை போன்ற மறை சார்ந்த எண்ணக்கருக்களின் விருத்திக்காகப் பயிற்சிச் செயல்முறைகளைப் பாடசாலையில் ஒழுங்கு செய்தல்.

5. கிறிஸ்தவ மாணவர்களுக்கான சிறுவர் கழகங்கள், சபைகள் ஆகியவற்றை ஆரம்பித்து நிறைவான கிறிஸ்தவர்களாக வாழ்வதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தலும் பழக்குதலும்.

6. பங்கிலுள்ள இரக்கப் பணிபுரியும் கழகங்களிலும், சபைகளிலும் இணைந்து கொள்ளப் பெற்றோருக்கு அறிவுரை வழங்கல்.

## 9.1.6 கணிப்பீடும் மதிப்பீடும்

- எல்லாப்பாடங்களின் முடிவிலும் எழுத்துப்பயிற்சிகள் ஒப்படைகள் வழியாக.
- தவணை இறுதியிலும், வருட இறுதியிலும் நடத்துகின்ற முறைசார் பரீட்சைகள் வழியாக.
- குறுகிய காலத்திட்டங்கள் வழியாக.
- வாசிப்பு, எழுத்து, கேட்டல் போன்றவற்றினால் மறை அறிவை வாய்மொழி மூலம் மதிப்பிடல்.
- மறைச் செயற்பாடுகளிலும், பொது நலப்பணிகளிலும் ஈடுபடுகின்றமையை மேற்பார்வை செய்வதன் வழியாக.
- பங்கிலுள்ள இரக்கப்பணியாற்றும் சபைகளில் சேர்ந்து புரியும் பணிகள் வழியாக
- பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள மறைசார்ந்த சபைகள், கழகங்களில் சேர்ந்து ஆற்றும் பணிகள் வழியாக.
- வகுப்பறையில் தலைமைத்துவத்தைப் பெற்று பொறுப்புபேற்றலை மேற்பார்வை செய்தல் வழியாக.
- பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை வழியாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

9.2.0 பாடத்திட்டத்தின் தொடரகம்

9.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

9.2.2 தர விருத்தி உள்ளீடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

இக்கற்கைநெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில், தேடியாய்தலை அடிப்படையாகக்கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சிசார் கல்விக்காக ஆயத்தமாகும்போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகம் (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction Role) என்பன எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத்திறன்கள் போன்றவையெல்லாம் சீர்க்குலைந்துள்ள நிலையில், கற்றல் - கற்பித்தல் முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், தாம் கற்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக் கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை - கற்பனையைத் தட்டியெழுப்புவதிலோ அவர்களது ஆளிடை மற்றும் சமூகத்திறன்களை விருத்தி செய்வதிலோ கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல் - வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியருக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றமும், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும், எளிமையானவற்றில் இருந்து சிக்கலானவற்றுக்கும் காட்சி (தூல) நிலையில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தேர்ச்சியில் குறைந்தபட்சம் அண்ணளவாகவும், பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு, வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய வசதிகளையும் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற்காக, பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை எல்லாம் ஆசிரயரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation) எனப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் உரையாடுவர். இது பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும், செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளுதல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case Study) போன்றவற்றை முன்வைத்தல், உரையாடல், போலச் செய்தல், படம், செய்துகாட்டல் (Demonstration) போன்றவற்றை முன்வைத்தல், ஒலி நாடாக்கள், ஒலி ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதைக் கருத்திற் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- வகுப்பின் கவனத்தைக் கவர்தல்.
- தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின் போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம் மாணவர்க்கு அறிமுகம் செய்தல்.

மாணவருக்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கபட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழுக் கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுத்தல் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிகைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக, மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும். இலைமறைகாயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின் போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு, முன்வைப்புக்களை வைப்பதற்கு மாணவரைத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவருக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துதல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவரின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றமை, மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Extension) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

இரண்டாம் படிமுறையில் கண்டறிந்தவற்றை விரிவுப்படுத்தும் (Elaboration) வாய்ப்பு மூன்றாம் படிமுறையின் போது வழங்கப்படும். ஒவ்வொரு குழுவும் தத்தமது முன்வைப்பை நிறைவு செய்த பின்னர், அது தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு முதலில் அந்தந்தக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் பின்னர் ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும். இறுதியில் முழுவதையும் மீட்டல் செய்யும் (Review) பொறுப்பு ஆசிரியரையே சாரும். மாணவரது கண்டறிகையில் அடக்கும் முக்கியமான சகல விடயங்களுக்கும் தெளிவுபடுத்தப்படும் வகையில் எண்ணக்கருக்களும் கொள்கைகள் கோட்பாடுகளும் மாணவரது மனதில் தெளிவாகப் பதியும் வகையிலும் மீட்டாய்வை முன்வைத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

வகுப்பறையில் கற்றல் கற்பித்தற் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட வகையில் வெற்றிகரமாக நிகழுகின்றன என்பதை இடையறாது தேடியறிதல் இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரின் பிரதான பொறுப்பாகும். இதற்காகக் கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும். திட்டமிடப்பட்ட செயற்பாடு தொடர்பாக, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது இதற்காகப் போதிய அவகாசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டின் இரண்டாவது படிமுறையின்போது மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபட்டிருக்கையில் கணிப்பீட்டையும் (Assessment) செயற்பாட்டின் மூன்றாவது படிமுறையின் போது மாணவர் தாம் கண்டறிந்தவற்றை விளக்குகையில் மதிப்பீட்டையும் (Evaluation) நடத்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கணிப்பீடு, மதிப்பீடு ஆகியன பற்றிய விரிவான விளக்கம் இவ்வாவணத்தில் பிறிதொரு இடத்தில் தரப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறையியல், நிலைமாற்ற வகிபாகத்தை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை ஆசிரியருக்கு வழங்குகின்றது. இச்செயல்முறையின் போது குழுநிலைக் கண்டறிகை முதலிடம் பெறுகின்றது. கொடுக்கல் வாங்கல், உரையாடல், சிற்றுரை போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. முதலாவது படிமுறையின்போது கொடுக்கல் வாங்கலுக்கும் உரையாடலுக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இறுதிப் படிமுறையின்போது மீட்டாய்வை நடத்துகையில் சிற்றுரை நடத்துதல், எண்ணக்கருக்களை வலியுறுத்திப் பதித்தல் ஆகியவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது கல்வி மறுசீரமைப்பிற்கு அமைவாக முன்வைக்கப்படும் இக்கலைத்திட்டத்துடன் தொடர்புடைய கற்றல் - கற்பித்தல் முறையியலை அபிவிருத்தி செய்யும் போது ஆசிரியரின் நிலைமாற்ற வகிபாகம் தொடர்பாக மட்டுமன்றி, கடத்தல் வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம் ஆகியவற்றின் குணாம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

திருமறையைப் பற்றிய அறிவு, திருமறையின்படி வாழ்தல் அவசியமாயினும் அறிவினால் மட்டும் திருமறையை ஒன்றிணைத்துக் கொள்ள முடியாது. திருமறையை வாழ்க்கையின் அனுபவமாக்கிக் கொள்ள வேண்டும். எனினும் இவ்வாறு செய்வதாயின் வகுப்பறையில் உபயோகிக்கப்படுகின்ற நுட்ப முறைகளைத் தவிர, வகுப்பறைக்கு வெளியே பரம்பிக்கிடக்கின்ற நுட்பமுறைகளையும் உபயோகிக்க வேண்டும். இதை எவ்வாறு செய்வது? உதாரணமாக நுட்பமுறைகளை உபயோகிக்கும் போது மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கும் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்துக்கும் உதவும் முகமாக வகுப்பறையில் கற்பிக்கப்படுகின்ற விடயங்களும் இந்நுட்பமுறைகளும் சமாந்தரமாகவும் இணைந்ததாகவும் அமைய வேண்டும்.

- செப வழிபாடொன்றை ஒழுங்கு செய்யும் போது அதில் செயற்பாட்டோடு பங்குபற்றல்.
- வருடத்தில் வருகின்ற பல்வேறுபட்ட விசேட தினங்களில் நடைபெறுகின்ற வழிபாடுகளில் (உ+ம் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்ப்பு ஞாயிறு, கிறிஸ்து பிறப்பு) பங்குபற்றல்.
- திருச்சபையின் இரக்கப்பணிகளில் பங்குபற்றல்.
- சபைகள், கழகங்களில் சேர்ந்து செயலாற்றல்.
- திருயாத்திரைத் தளங்களுக்குச்சென்று அங்கு இடம் பெறும் வழிபாடுகளில் பங்கு பற்றல். செபத்திலும், தியானங்களிலும் பங்குபற்றல்.
- இல்லத்தில் நடைபெறுகின்ற வழிபாடுகளில் பங்குபற்றல்.
- வயோதிபர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், அனாதை இல்லங்கள் போன்றவற்றில் சுயவிருப்புடன் பணியாற்றுதல்.

இவ்வாறான நுட்ப முறைகளினால் வகுப்பறையில் கிடைக்கின்ற அறிவை அனுபவமாக்கிக் கொள்ளவும், திருமறையோடு வாழ்க்கையையும் ஒன்றிணைத்துக் கட்டியெழுப்பவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மேற்கூறப்பட்ட உதாரணங்களான நுட்பமுறைகளைத் தவிர வேறு வகையான நுட்ப முறைகளாலும் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு மாணவர்களை ஈடுபடுத்தக் கூடிய வசதிகளைப் புதிய பாடத்திட்டம் ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளதென்பதை இங்கு குறிப்பிடலாம்.

## 9.2.2 தர விருத்தி உள்ளீடுகள்

- டிமை கடதாசிகள்
- பிளாற்றினம் பேனா
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் (கடதாசி) போர்ட்
- ஒலி ஒளிப்பதிவுக் கருவி
- ஒலிப்பதிவு நாடாக்கள்
- ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள்
- திருவிவிலியம்
- புதினப் பத்திரிகைகள்
- சஞ்சிகைகள்
- நாளிதழ்கள்
- கிறிஸ்தவ பாடல் நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : இறைத்திட்டத்திற்கு அமைய வாழ்ந்து புதிய உலகைக் கட்டி எழுப்ப உதவுவர். |
| தேர்ச்சிமட்டம் | 1.1 | : திருத்தூதர்களின் அழைப்பின் வழியாக தாம் பெற்ற கிறிஸ்தவ அழைப்பை இனங்காண்பர். |
| செயற்பாடு | 1.1 | : திருத்தூதர்களின் அழைப்பின் மூலம் எமது அழைப்பைக் கண்டுணர்வோம். |
| பாடவேளைகள் | | : 80 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடு | | : ❖ திருத்தூதர்களின் படங்கள் பல்வேறு நிலைகளில் அழைப்புப் பெற்றவர்களின் படங்கள்.<br>❖ லூக்.5:1-11, மத்.4:18-22, மாற்.1:16-20 டிமைன் பேப்பர், மாக்கர் பேனா.<br>❖ இணைப்பு 9.1.1 அறிவுறுத்தல்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.1.1**

- அழைத்தல் தொடர்பான பாடல் ஒன்றின் மூலம் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
- குடும்பத்தில் இருப்பவர்களின் பல்வேறுபட்ட அழைப்பு தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
  பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வண்ணம் மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

> ♦ முதல் சீடர்கள் கிறிஸ்துவால் அழைக்கப் பட்டனர்.
> ♦ இவர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா ஆகியோராவர்.
> ♦ கிறிஸ்துவின் விசேட அழைப்பைத் திருத்தூதர்கள் விளங்கிக் கொண்டனர்.
> ♦ கிறிஸ்து திருத்தூதர்களை தம்மோடு இருப்பதற்காக, தம் பணியைத் தொடர்ந்தாற்வதற்காக அழைத்தார்.
> ♦ திருத்தூதர் இறை வார்த்தையை ஆழமாக விளங்கிக் கொண்டனர்.
> ♦ திருத்தூதர் இறை வார்த்தைக்குக் கீழ்ப் படிந்தனர்.

(10 நிமிடங்கள்)

**படி 1.1.2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 9.1.1 இல் உள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகள். டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிருங்கள்.
- செயற்பாடுகளை கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 1.1.3

* குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
* மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
* ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- கிறிஸ்துவின் அழைப்பின் பேரில் திருத்தூதர் உலக செல்வங்களை விட்டு கிறிஸ்துவைப் பின் தொடர்ந்தனர்.
- முதல் சீடர்களை கிறிஸ்து அழைத்தது மக்களை இறைவன்பால் இட்டுச் செல்வதற்கே.
- திருத்தூதர் அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் அழைத்தலுக்கு நிபந்தனையற்ற முறையில் பதில் கொடுத்தனர்.
- திருமுழுக்கின் வழியாக நாம் கிறிஸ்துவின் சீடராக அழைக்கப்பட்டுள்ளோம்.
- உலகியல் வாழ்வில் இருந்து கொண்டே நாம் கிறிஸ்துவின் சீடராக இருக்கின்றோம்
- சிலர் விசேடமாக முழு நேர அழைப்பைப் பெற்றுள்ளனர்.
- எமது கிறிஸ்தவ அழைப்பின் பொறுப்பை உணர்ந்து செயற்பட எம் கடமைகளைச் செய்ய வேண்டும்.
- கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுத்து வாழும் போது கிறிஸ்துவின் ஏனையவரையும் இறைவனிடம் கூட்டிச் சேர்க்க முடியும்.
- நாம் வாழும் சூழலில் இறைவார்த்தைக்கு செவிமடுக்கும் போது இறை அழைப்பை உணரமுடியும்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- கிறிஸ்துவால் முதலில் அழைக்கப்பட்ட திருத்தூதர்களின் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- லூக். 5:1-11 பகுதியை வாசித்து முதல் சீடர்களை அழைத்த சம்பவத்தை சித்திரம் வரைந்து காட்டுவர்.
- தமது கிறிஸ்தவ அழைப்பை விளங்கிக் கொண்டு பாடசாலை வாழ்வில் செயற்படக்கூடிய ஐந்து சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவர்.
- இறைவார்த்தைக்கு செவிமடுத்து ஏனையவருக்கும் விளக்குவர்.
- கிறிஸ்துவுக்கு வாழ்க்கையில் முதலிடம் கொடுக்கும் சந்தர்ப்பங்களை எழுதுவர்.

**இணைப்பு 1.1.1**

## குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- அறிவுறுத்தல்களில் தரப்பட்ட விடயங்கள் பற்றி நன்கு கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக உங்கள் செயற்பாடுகளை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

குழு - 1 : மத். 4:18-22 பகுதியை வாசித்து கிறிஸ்து தம் முதல் சீடர்களை அழைத்த சம்பவத்தை நாடகம் ஒன்றின் மூலம் முன்வையுங்கள்.

குழு - 2 : திருத்தூதர்களும் பணிகளும் எனும் தலைப்பில் கவிதை ஒன்றை ஆக்குங்கள்.

குழு - 3 : திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவ அழைப்புப் பெற்ற எனது கடமைகளைப் பற்றிய அட்டவணை ஒன்று தயாரியுங்கள்.

குழு - 4 : மாற்கு 10:17-24, லூக். 5:1-11 காட்டப்பட்டிருக்கும், கிறிஸ்துவின் அழைத்தலுக்கு செவிமடுத்த விதங்களை வெவ்வேறாகப் பட்டியற் படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 1.0 : இறைத்திட்டத்திற்கு அமைய வாழ்ந்து புதிய உலகைக் கட்டி எழுப்ப உதவுவர்.

தேர்ச்சிமட்டம் 1.2 : புதிய உலகைக் கட்டி எழுப்புவதற்கான அடையாளங்களைத் தேடிப்பார்ப்பர்.

செயற்பாடு 1.2 : கிறிஸ்துவின் புதுமைகள் மூலம் நம்பிக்கையை வளர்ப்போம்.

பாடவேளைகள் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு :
- ❖ கிறிஸ்துவின் புதுமைகளைக் காட்டும் படங்கள்.
- ❖ கிறிஸ்துவின் புதுமைகள் அடங்கிய C.D.
- ❖ மத். 14:22-33, மத். 12:9-14, லூக். 4:31-37 யோவான் 11:38-46, அடங்கிய வசனங்கள்.
- ❖ டிமைன் தாள், மார்க்கர் பேனா.
- ❖ இணைப்பு 1.2.1 அறிவுறுத்தல் படிவம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 1.2.1

- ✸ புதிய ஏற்பாட்டில் புதுமைகள் அடங்கிய C.D. போட்டுக்காட்டுதல், அல்லது படம் வரைந்து கலந்துரையாடுதல்.
- ✸ பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வண்ணம் மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

> ♦ இறையரசை இவ்வுலகில் நிறுவுவதிலும், இதனால் பசாசின் ஆட்சியை அழிப்பதிலும் தான் இயேசுவின் மீட்புப் பணி அடங்கியுள்ளது.
> ♦ புதுமைகள் இறையாட்சியின் அடையாளங்களாகும்.
> ♦ இறையாட்சி மக்கள் மத்தியில் உள்ள தென்பதைக்காட்ட புதுமைகள் செய்யப்பட்டன.
> ♦ நான்கு வகையான புதுமைகளை கிறிஸ்து செய்தார்.
> ♦ **கிறிஸ்துவின் புதுமைகள் பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்ட நிகழ்வுகளே. (மத். 11:4-6, எசா. 61:1-3, 35:5-6, 26:9)**

(10 நிமிடங்கள்)

படி 1.2.2

- ✸ பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✸ இணைப்பு 9.1.2 இல் உள்ள அறிவுறுத்தல் பிரதிகள். டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செயற்பாடுகளை கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

படி 1.2.3

* குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
* மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
* ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- கிறிஸ்துவின் காலத்தில் மக்கள் மனிதருக்கு ஏற்படும் நோயிலும், இயற்கையின் சீற்றத்திலும் சாத்தானின் சக்தியைக் கண்டனர்.
- கிறிஸ்து நோயைக் குணமாக்குவதாலும் இயற்கையின் சக்தியை ஆட்கொள்வதாலும் சாத்தானின் ஆதிக்கத்தை வீழ்த்துகிறார். கடவுளின் ஆட்சியை நிறுவுகிறார் என நற்செய்தி யாளர் கருதினர்.
- கிறிஸ்துவுக்கு இயற்கையின் மேல் அதிகாரம் இருந்தது.
- கிறிஸ்து நோயாளரைக் குணப்படுத்தியன் மூலம் மக்களுக்கு ஆறுதல் அளித்து நம்பிக்கை வழங்கினார்.
- கிறிஸ்துவின் வல்லமையால் அசுத்த ஆவிகள் விரட்டப்பட்டன.
- மரணம் கிறிஸ்தவ வாழ்வின் முடிவல்ல என்பதும் கிறிஸ்துவுக்கு மரணத்தின் மீது அதிகாரம் இருந்தது என்பதும் தெளிவாகின்றது.
- புதுமைகளைக் கண்டுணர்வதன் மூலம் விசுவாசம் ஆழமாக்கப்படுகின்றது.
- இன்றும் எமது வாழ்வில் இறைவனின் வல்ல செயல்கள் வெளிப்படுகின்றன.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- புதுமைகளை நான்கு வகைப்படுத்தி எழுதுவர்.
- மாய வித்தைகளுக்கும் புதுமைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை முன்வைப்பர்.
- இறைவன் தமது வல்ல செயல்களினால் மக்களுக்கு நல்வாழ்வு வழங்குகிறார் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்வர்.
- புதுமைகள் இறையாட்சியின் வெளிப்பாடு எனும் தலைப்பில் கட்டுரை ஆக்குவர்.
- கிறிஸ்துவின் புதுமைகள் மூலம் இறைவல்லமையை நீர் உணர்ந்த சந்தர்ப்பங்களை முன்னிலைப் படுத்துவர்.

**இணைப்பு 1.2.1**

## குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- அறிவுறுத்தல்களில் தரப்பட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக உங்கள் செயற்பாடுகளை முன்வைப்பதற்குத் தயாராகுங்கள்.

குழு - 1 : புதுமைகள் இறையரசின் வெளிப்பாடு எனும் தலைப்பில் சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

குழு - 2 : நற்செய்திகளில் காணப்படும் புதுமைகளை அட்டவணைப்படுத்திக் காட்டுங்கள்.

குழு - 3 : குணமாக்கும் புதுமை ஒன்றினை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

குழு - 4 : மத். 14:22-33 பகுதியில் குறிப்பிடப்படும் புதுமையை மையமாக வைத்து கட்டுரை தயாரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 1.0 : இறைத்திட்டத்திற்கு அமைய வாழ்ந்து புதிய உலகைக் கட்டி எழுப்ப உதவுவர்.

தேர்ச்சிமட்டம் 1.3 : புதிய உலகைக் கட்டி எழுப்புவதற்கான ஆரம்ப நிகழ்வுகளை வரிசைப்படுத்துவர்.

செயற்பாடு 1.3 : தொடக்க திருச்சபையின் மறைப்பணிகளைப் பின்பற்றுவோம்.

பாடவேளைகள் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு :
- ❖ பிறரன்புப் பணிகளைக் காட்டும் படங்கள் (சிலவற்றை பிரதி செய்தல்) தி.ப. 2:1-4, 6:2-6, 9:4-19 அடங்கிய வசனங்கள்.
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா, Glue Tag
- ❖ இணைப்பு 1.3.1 அறிவுறுத்தல் படிவம்

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 1.3.1

- ✹ கண் தெரியாத வயோதிபர் ஒருவரை வீதியைக் கடக்க உதவும்செயலை நிகழ்திக் காட்டி மாணவர்களை ஒன்றிணைத்தல்.
- ✹ பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வண்ணம் மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

> - ♦ பெந்தக்கோஸ்தே தினத்தன்று பேதுருவின் முதலாவது உரையைக் கேட்ட 3000பேர் மனம் மாறி திருச்சபை ஆரம்பமாகிறது.
> - ♦ திருச்சபையின் முக்கிய பணிகள் செபித்தல், போதித்தல், பிறரன்புப் பணி செய்தல் ஆகும்.
> - ♦ செபிப்பதும், போதிப்பதும் திருத்தூதர்களின் முக்கிய கடமையாயிருந்தது.
> - ♦ திருச்சபையில் பணியாற்றத் திருத்தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(10 நிமிடங்கள்)

படி 1.3.2

- ✹ பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✹ இணைப்பு 9.1.3 இல் உள்ள அறிவுறுத்தல் பிரதிகள். டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிருங்கள்.
- ✹ செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- ✹ எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.3.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- அறப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவதற்காக ஏழு திருத்தொண்டர்கள் தெரிவு செய்யப் பட்டனர்.
- மக்களிடையே நற்சான்று பெற்றவரும், தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமாய் இத் தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
- திருத்தூதர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட தொண்டர் கள் மேல் கைகளை வைத்து செபித்து அவர் களைத் திருத் தொண்டர்களாக ஏற்படுத்தினார்.
- திருச்சபையின் ஆரம்ப கால நிகழ்வுகளில் பவுல் முக்கிய இடம் பெறுகிறார்.
- பவுல் தர்சு நகரைச் சேர்ந்த பென்ஜமின் குலத்தினன்.
- யூதசட்டங்கள் நன்கு கற்றறிந்த யூதன்.
- கலா. 1:13-14ல் குறிக்கப்பட்டது போல் திருச் சபையைத் துன்புறுத்தி புதிய நெறியை ஒழிக்க முயன்றவர்.
- தம் முதாதையர் மரபுகளில் ஆர்வம் மிக்கவராய் யூத நெறியில் சிறந்து விளங்கியவர்.
- ''நீ துன்புறுத்தும் கிறிஸ்து நானே'' என கிறிஸ்து பவுலுக்குத் தன்னை வெளிப்படுத்தினார்.
- துன்புறுத்தப்பட்ட மக்களோடு கிறிஸ்து ஒன்றித்திருந்தார்.
- புற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் பணி செய்வதற்கு பவுல் கருவியாகத் தெரிந்தெடுக்கப்படுகின்றார்.
- புற இனத்தாரின் திருத்தூதர் என பெயர் பெற்றார்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. பவுலின் மனமாற்ற நிகழ்வினை படம் வரைந்து காட்சிப்படுத்துவர்.
2. திருத்தொண்டர்களின் தகைமைகளையும் தெரிவு செய்யப்பட்ட எழுமரின் பெயர்களையும் எழுதி மனனம் செய்வர்.
3. திருப்பலியில் கிறிஸ்து வாழ்கிறார் என்பதை ஏற்றுக்கொள்வர்.
4. பவுலின் அழைப்பும் ஆரம்ப திருச்சபையும் எனும் தலைப்பில் கட்டுரை ஆக்குவர்.
5. உம்மால் ஆற்றக்கூடிய பிறரன்புப் பணிகள் பத்து எழுதுவர்.

**இணைப்பு 1.3.1**

### குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- அறிவுறுத்தல்களில் தரப்பட்ட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக உங்கள் செயற்பாடுகளை செயற்படுத்த தயாராகுங்கள்.

குழு - 1 : தமாஸ்கு நகர்ப்பயண நிகழ்வும் சவுலின் மனமாற்றமும் எனும் தலைப்பில் நாடகம் ஒன்றை ஆக்கி நடித்துக் காட்டுவர்.

குழு - 2 : திருச்சபை ஆற்றி வரும் பிறரன்புப் பணிகளை சுவரொட்டி வரைந்து காட்சிப் படுத்துவர்.

குழு - 3 : பவுலின் வாழ்க்கைச் சுருக்கம் எனும் தலைப்பில் கட்டுரை ஆக்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 1.0 : இறைத்திட்டத்திற்கு அமைய வாழ்ந்து புதிய உலகைக் கட்டி எழுப்ப உதவுவர்.

தேர்ச்சிமட்டம் 1.4 : புதிய கிறிஸ்தவ சமூகத்தின் கிரமான வளர்ச்சியினை விளங்கிக் கொள்வர்.

செயற்பாடு 1.4 : தொடக்க திருச்சபையின் வளர்ச்சியைப் பின்பற்றி இன்று செயல்படுவோம்.

பாடவேளைகள் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு :
- ❖ பேதுருவுக்கு வழங்கப்பட்ட காட்சியின் படம். தி.ப. 2:42-47, 10:41-48 15:7-11 இடங்கிய வசனங்கள்.
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா, மீளொட்டி (Glue Tag)
- ❖ இணைப்பு 1.4.1 அறிவுறுத்தல் படிவம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 1.4.1

- ஆதித் திருச்பையின் பண்புகள் பற்றிக் கலந்துரையாடி மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வண்ணம் மாணவர்களை ஊக்குவியுங்கள்.

> - ♦ சிறிய குழுவாக இருந்த திருச்சபை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தது.
> - ♦ அப்பம் பிட்குதல், செபித்தல், நட்புடன் உறவாடுதல், திருத்தூதர் படிப்பினையைக் கேட்டல் என்பன தொடக்க காலத் திருச்சபை யின் பண்புகளாக இருந்தன.
> - ♦ திருச்சயையில் இன,மத, மொழி பேதமின்ற அங்கத்துவம் பெறமுடியும்.
> - ♦ கிறிஸ்துவின் மீட்பு அனைவர்க்கும் பொது வானது.

(10 நிமிடங்கள்)

படி 1.4.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 9.1.4 இல் உள்ள அறிவுறுத்தல் பிரதிகள். டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக் களிடையே பகிருங்கள்.
- செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 1.4.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனையகுழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- கிறிஸ்தவம் அனைத்துலகின் மதம் என்பது கொர்னேலியு, பேதுரு ஆகியோரின் காட்சிகள் மூலம் தெளிவாகியது.
- கொர்னெலியுவின் மனமாற்றம் கிறிஸ்துவில் இறைவனின் மீட்புத் திட்டத்தை மக்களுக்கு விளக்கிற்று.
- கொர்னேலியு ஒரு யூத இனத்தவரல்ல. அவர் உரோமப் படையணியின் நூற்றுவத் தலைவர்.
- கொர்னேலியு இறைப்பற்றுள்ளவர்.
- கிறிஸ்துவில் தான் மீட்பு என்பது அனைவருக்கும் வெளிப்பட்டது.
- பேதுருவின் போதனைக்கு செவிமடுத்த அனைவரும் தூய ஆவியால் நிரம்பியவராக நீரினால் திருமுழுக்கு பெற்றனர்.
- யூத பழக்கத்திற்கு அமைவாக யூதரல்லாதவர்கள் விருத்தசேதனம் செய்த பின்பே திரு முழுக்கு பெற வேண்டும் என சிலர் கருதினர்.
- கிறிஸ்துவில் மீட்படைந்தவர்களுக்கு விருத்த சேதனம் தேவையில்லை என வேறு சிலர் கருத்து தெரிவித்தனர்.
- இக் கருத்து முரண்பாட்டுக்கு தீர்வு காண்பதற்காகவே ஜெருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது.
- இச் சங்கத்தில் திருச்சபையில் பிற இனத்தவர் இணைவதற்கு யூத சட்டமான விருத்தசேதனம் தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது.
- இவ்வாறு திருச்சபை அனைத்து இன மக்களையும் இணைத்து வளர்ந்தது.

(10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கிறிஸ்தவம் அனைத்துலகின் மதம் என்ற கருப்பொருளில் கவிதை ஆக்குவர்.
- கொர்னேலியுவின் காட்சியையும் பேதுருவின் காட்சியையும் வாசித்து தொகுத்து முன்வைப்பர்.
- தொடக்க திருச்சபையின் பண்புகள் எமது கிறிஸ்தவ வாழ்விற்கு இன்றியமையாதவை என ஏற்றுக்கொள்வர்.
- ஆதித் திருச்சபையின் பண்புகள் இன்று அன்பிய வாழ்வில் செயல்படும் முறையை உதாரணங்களுடன் எழுதுவர்.
- நீர் மறைபரப்பாளனாக செயற்படும் சந்தர்ப்பங்கள் ஐந்து முன்வைக்குக.

## இணைப்பு 1.4.1

### குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்கள்

- அறிவுறுத்தல்களில் தரப்பட்ட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக உங்கள் செயற்பாடுகளை செயற்படுத்த தயாராகுங்கள்.

குழு - 1 : திருச்சபையின் ஆரம்ப கால நிகழ்வுகளைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு - 2 : பேதுரு கண்ட காட்சியை படம் வரைந்து முன்வையுங்கள்.

குழு - 3 : அன்பிய வாழ்வு எனும் தலைப்பில் பேச்சு நடத்துங்கள்.

குழு - 4 : தொடக்க திருச்சபையின் நான்கு பண்புகளை ஒவ்வொன்றாக நடித்துக் காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : இறைத்திட்டத்திற்கு அமைய வாழ்ந்து புதிய உலகைக் கட்டி எழுப்ப உதவுவர். |
| தேர்ச்சி மட்டம் | 1.5 | : புதிய உலகைக் கட்டியெழுப்பும் இறைத்திட்டமானது முழுமை பெற்ற விதத்தினை விபரிப்பர். |
| செயர்பாடு | 1.5 | : புதிய வானமும், புதிய பூமியும் பற்றிய எண்ணக் கருவை விளங்கிக் கொள்வோம். |

பாடவேளைகள் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு : ❖ திருவிவிலியம், மத்தேயு 25:31-46. தி.வெ 21:1 8. பாடல் எழுதப்பட்ட அட்டை, டிமைன் பேப்பர், மாக்கர் பேனா நியதிகள் குழு இலக்கம்

❖ இணைப்பு 1.5.1 அறிவுறுத்தல் படிவம்
1.5.2 பாடல்

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 1.5.1

- "எனக்கே செய்தாய் உதவி எனக்கே செய்தாய்" என்ற பாடல் எழுதப்பட்ட அட்டையை மாணவர் அனைவரும் பார்க்க கூடியவாறு காட்சிப் படுத்துங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் பாடலை இராகத்துடன் பாடுங்கள்.
- பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> ◆ கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிச்சயமான தாகும்
> ◆ மக்களினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டு புதிய வானமும் புதிய பூமியும் நிலை நிறுத்தப்படும்.
> ◆ இறைவன் அனைத்தும் புதியனவாக்குவார்.
> ◆ முழுமை பெற்ற அந்த இறை ஆட்சியில் இறைச்சித்தமே செயலாற்றும்.
> ◆ இவ் இறை ஆட்சி நிலைத்திருக்கும்.
> ◆ படைப்பு அனைத்தும் மீட்புப் பெற வேண்டுமென்பது இறைவனின் திட்டமாகும்.

(10 நிமிடங்கள்)

படி 1.5.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- இணைப்பு 1.5.1 இல் உள்ள குழு அறிவுறுத்தல், பிரதிகள் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயற்பாடுகளை கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக்குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்

(30 நிமிடங்கள்)

படி 1.5.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவிற்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- வல்லமையும், இரக்கமும் உள்ள இறைவன் நீதியுள்ளவராக அனைவருக்கும் தீர்ப்பு வழங்குவார்.
- இறை ஆட்சி விழுமியங்களின்படி அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்படுவதோடு பாதுகாக்கப்படவும் வேண்டும்.
- திருவெளிப்பாடு 21:1:8 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தீமையானதை நாடும் போதும், அநீதிக்கு துணை போகும் போதும், நிதிக்காக குரல் கொடுக்காத போதும் தண்டனைத் தீர்பிற்கு உட்படுத்தப்படுவோம்.
- இறை ஆட்சிக்கு தகுதி பெறுவதற்காகவே இறைவன் எமக்கு காலத்தையும் சக்தியையும் சந்தர்ப்பத்தையும் தருகிறார்.
- நாம் செய்யும் நன்மைகளையும், தீமைகளையும் அளக்கின்ற அளவு கோலாக இறை ஆட்சி விழுமியங்களும், பிறர் செயல்களும் திகழ்கின்றன.
- இறை ஆட்சிவிழுமியங்களை அறிந்து மனிதத் தத்தவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- துன்புறுவோரிலும், உதவி தேவையானோரிலும் இறைப் பிரசன்னம் இருப்பதனால் இவ்வாறானவர்களுக்கு உதவ வேண்டும்.
- இறை ஆட்சி விழுமியங்களைக் கடைபிடித்து வாழ்வோமானால் இறை ஆட்சிக்குத் தகுதி உள்ளவர்களாவோம்.

(40 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஆன்மாவைச் சார்ந்த, உடலைச் சார்ந்த இரக்கச் செயல்களை எழுதுவர்.
- இறை ஆட்சி விழுமியங்களை எழுதி அவற்றைச் செயற்படுத்தி வாழும் முறையை விளக்குவர்.
- "அனைவரும் மீட்புப் பெறவேண்டும் என்பதே இறைச் சித்தம்" என்ற தலைப்பில் கட்டுரை வரைவர்.
- தாம் வாழும் சூழலில் அடுத்தவரை மகிழ்வித்து உறவை வளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களை எழுதுவர்.
- அடுத்தவருக்கு உதவுவதில் தாம் பெற்ற மகிழ்ச்சியான அனுபவத்தை முன் வைத்து காலைக் கூட்டத்தில் உரையொன்று ஆற்றுவர்.

**இணைப்பு 1.5.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ஆய்வுப் படிவத்தைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : உடலைச் சார்ந்த, ஆன்மாவைச் சார்ந்த இரக்கச் செயல்களைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு - 2 : இறை ஆட்சி விழுமியங்களின் படி வாழாமல் தான் தோன்றித்தனமாக வாழும் நண்பனுக்கு அதனை விளக்கி கடிதமொன்று எழுதுங்கள்.

குழு - 3 : துன்புறுவோருக்கும், உதவி தேவையானவர்க்கும் உதவும் முறையை சித்திரமாக வரையுங்கள்

குழு - 4 : இறை ஆட்சி விழுமியங்களின்படி வாழ இறைத் தந்தையின் உதவி வேண்டி செபம் ஒன்று எழுதுங்கள்.

குழு - 5 : இறை ஆசீர் பெற்று வாழ தரம் - 9 மாணவர்களாகிய நீங்கள் செய்யக்கூடிய நற்செயல்கள் ஐந்து எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 1.5.2

## எனக்கே செய்தாய்

எனக்கே செய்தாய் உதவி எனக்கே செய்தாய்
எனக்கே செய்தாய் உதவி எனக்கே செய்தாய்

I

பள்ளியிலே நண்பன் பசியுற்றிருந்த போது
பகிர்ந்திட்ட உணவை நீ எனக்கே தந்தாய்//

இன்னலுற்றோர்க்குச் செய்த உதவியெல்லாம்
இன்னதென்றறியாமல் எனக்கே செய்தாய்//

II

சிறையிலே நண்பன் சிறையுண்டிருக்கும் போது
அன்புடன் என்னை நீ பார்க்க வந்தாய்//

நோயுற்றோருக்கு செய்த உதவியெல்லாம்
இன்னதென்றறியாமல் எனக்கே செய்தாய்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | சமுகத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவர். |
| தேர்ச்சிமட்டம் | 2.1 | : | கிறிஸ்துவினுடைய மீட்பின் தூதுரைப் பணியை நிறைவேற்றுவர். |
| செயற்பாடு | 2.1 | : | எமது அழைப்பிற்கேற்ப தூதுரைப் பணியை நிறைவேற்றுவோம். |
| பாடவேளைகள் | | : | 120 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடு | | - | ❖ திருவிவிலியம், வி.ப. 12:1-20, 12:21-28, மத். 26:17-19, 26:26-30, லூக். 22:17-20, 23:44-47, எபி. 5:8-9 வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்<br>❖ மதுபோதைக்கு அடிமையாகி தனது குடும்ப அங்கத்தவர்களை துன்புறுத்தும் காட்சியை சித்தரிக்கும் சுவரொட்டி, டிமைன் பேப்பர், மாக்கர் பேனா<br>❖ இணைப்பு 2.1.1, 2.1.2, 2.1.3, க.தி.ம. # 616, # 617 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.1.1**

- மாணவர்கள் எல்லோரும் காணும் வண்ணம் சுவரொட்டியைக் காட்சிப்படுத்துங்கள்.
- அது தொடர்பாக கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறுங்கள்.
- மது, போதைவஸ்து, துன்புறுத்தல்கள் போன்ற பல்வேறு அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெறுதல் பற்றி கலந்துரையாடுங்கள்.
- திருவிவிலியத்தில் இஸ்ரயேல் மக்கள் அனுபவித்த அடிமைத்தனங்கள் பற்றிக் கலந்துரையாடி பின்வரும் விடயங்களை வெளிக்கொணர உதவுங்கள்.

> ♦ இஸ்ரயேலர் எகிப்து நாட்டில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்தனர்.
> ♦ எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற விருப்பங்கொண்டனர்.
> ♦ பாஸ்கா இரவில் எகிப்திய தலைச்சன் பிள்ளைகள் கொல்லப்பட்டதன் வழியாக இஸ்ரயேலரை எகிப்திய அரசன் விடுவித்தான்.
> ♦ பாஸ்கா ஆட்டுக்குட்டியின் இறைச்சி, புளியாத அப்பம், கசப்பான கீரை என்பன இஸ்ரயேலரின் பாஸ்கா உணவாக இருந்தன.
> ♦ இஸ்ரயேலரின் விடுதலைப் பயண நிகழ்வை வருடந்தோறும் வாய்மொழியாக எடுத்துச் சொல்லி நினைவு கூர்ந்து கொண்டாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ரயேல் மக்களுக்கு சமூக அரசியல் அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை அளித்தார்.

(12 நிமிடங்கள்)

படி 2.1.2

- ✹ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✹ இணைப்பு 2.1.1 இல் உள்ள குழு அறிவுறுத்தல் பிரதிகள். டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிருங்கள்.
- ✹ செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- ✹ எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 1.5.3

- ✹ குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- ✹ விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- ✹ மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ✹ ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ✹ பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- ♦ விடுதலைப் பயண நிகழ்வுகளான இஸ்ராயேலரின் மீட்பு நிகழ்வுகள் பழைய பாஸ்கா எனவும், கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு நிகழ்வுகள் புதிய பாஸ்கா எனவும் அழைக்கப்படுகின்றன.
- ♦

| | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| பலிப்பொருள் | ஆட்டுக் குட்டி | இயேசு |
| பலிநிறைவேற்றியவர் | குரு | இயேசு |

- ♦ ஆதாமின் கீழ்ப்படியாமையால் ஏற்பட்ட சென்ம பாவதோஷம் இயேசுவின் கீழ்படிவினால் எம்மை விட்டு நீங்கியது.
- ♦ பழைய ஏற்பாட்டுப் பாஸ்கா கிறிஸ்துவின் புதிய பாஸ்காவில் முழுமையடைகிறது.
- ♦ இயேசு அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணரானார். (உரோ.5:19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ இயேசு மரணம் வரை கீழ்ப்டிந்தமையால் எமக்கு மீட்புக் கிடைத்தது.
- ♦ உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாக பாஸ்காத்திரி பவனியாக எடுத்துவரப்பட்டு பீடத்தின் அருகில் ஏற்றி வைக்கப்பட்டபின் பாஸ்காப் புகழுரை பாடப்படுகின்றது.
- ♦ மனுக்குலம் பாவத்திலிருந்து விடுதலைபெற்ற வாழ்வாக அமைய ஆர்வத்தோடும் பக்திப் பரவசத்தோடும் பங்குபற்றி பேரொளியான, இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் மனநிலை எம்மில் உருவாக வேண்டும்.
- ♦ அன்று இஸ்ராயேல் மக்கள் விடுதலைபெற்று மகிழ்ச்சியுடன் இறைவனை ஆர்ப்பரித்து புகழ்ந்தது போல கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கு வழங்கும் விடுதலை, சமாதானம், மகிழ்ச்சி, ஒற்றுமையை அனுபவிக்க வழிவகுக்கின்றது.
- ♦ கிறிஸ்துவின் பாஸ்காவில் பங்குபற்றுவதன் வழியாக நாம் ஒவ்வொருவரும் மீட்புப் பணியில் பங்காளிகளாகிறோம்.
- ♦ எமது அழைப்பிற்கேற்ப எமது கடமைகளைச் சரிவரச் செய்வதோடு எமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதோடு அயலாரின் துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதன் வழியாக மீட்புப்பணியை நிறைவேற்ற முடியும்.

(60 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ✸ வி.ப. 12:1-28 வசனங்களைப் படித்து ''பாஸ்கா'' பற்றிய தகவல்களைத் திரட்டி காட்சிப்படுத்துவர்.
- ✸ பழைய, புதிய பாஸ்கா நிகழ்வுகளை தொகுத்து அட்டவணை தயாரிப்பர்.
- ✸ கிறிஸ்தவ மாணவராகிய தாம் கிறிஸ்துவின் தூதுரைப் பணியை நிறைவேற்ற உதவக் கூடிய சம்பவங்களை முன்வைப்பர்.
- ✸ பின்வரும் பொறுப்புக்களை தாம் சமூகத்தில் நிர்வகிக்கும் போது எவ்வாறு செயற்படுவர் என்பதை விளக்குவர்.
  - (i) ஆசிரியர்
  - (ii) வைத்தியம்
  - (iii) தாதி
  - (iv) நிர்வாகத் தலைவர்
  - (v) சாரதி
  - (vi) பலசரக்கு வியாபாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 2.1.1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவங்களை நன்கு வாசியுங்கள்.
- அவை பற்றிக் கலந்துரையாடி தகவல்களைத்திரட்டி ஒழுங்குபடுத்தி முன்வைப்புக்கு தயார்படுத்துங்கள்

குழு - 1 : திருவிவிலியத்தின் உதவியுடன் பாஸ்கா பற்றிய தகவல்களைத் திரட்டி சுவர்ப்பத்திரிகை ஒன்று தயாரித்து விளக்குங்கள்.

குழு - 2 : பழைய புதிய பாஸ்கா நிகழ்வுகளை ஒப்புநோக்கி தொகுத்து அட்டவணை தயாரித்துக் காட்சிப் படுத்துங்கள்.

குழு - 3 : எதிர்காலத்தில் பின்வரும் பொறுப்புக்களை ஏற்று கிறிஸ்துவின் மீட்புப்பணியை எவ்வாறு நிறைவேற்றுவீர் என்பதைச் செய்து காட்டுங்கள்.
(i) வியாபாரி (ii) தாதி (iii) பொலிஸ் (iv) ஆசிரியர்

குழு - 4 : ''பாஸ்கா'' புகழுரையை அழகாக எழுதி அதன் பொருளை விளக்கி எல்லோரது பார்வைக்காக காட்சிப்படுத்துங்கள்.

## இணைப்பு 2.1.2

இறுதிவரையும் இயேசு அன்பு செலுத்தினார் என்பதே அவரது மரணத்திற்கு அதன் மீட்பு, பரிகாரம் எனும் தன்மைகளை வழங்குகின்றது. தமது வாழ்வைப் பலியாக்கும் போது அவர் எம் எல்லோரையும் அறிந்து அன்பு செய்தார். கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது. ஏனெனில் ஒருவர் அனைவருக்காகவும் இறந்தார். அனைவரும் அவரோடு இறந்தனர். அனைவரும் அவரோடு இறந்தனர் (2கொரி.5:14). எந்தவொரு மனிதனும், மிகப் புனிதமானவரும் கூட, அனைவரது பாவங்களையும் தம்மேல் ஏற்று, அனைவருக்காகவும் தம்மைப் பலியாக்கவில்லை. இறைமகன் கிறிஸ்து அனைவரையும் கடந்த நிலையில் அனைவரையும் தம்முள் இணைத்து, மனுக்குலத்தின் தலையாக நம்மை ஏற்படுத்தியதால் அனைவரது மீட்பின் பலியாக தம்மை ஒப்புக்கொடுக்கிறார்.

(க.தி.ம. # 616)

திரிதெந்தின் பொதுச்சங்கம் ''முடிவில்லா மீட்பின் கூற்று'' என கிறிஸ்துவின் பலியின் தனித்துவமான தன்மையை வலியுறுத்தி சிலுவைமரத்தில் தாம் அனுபவித்த பாடுகளால் எம்மை நீதிமான்களாக்கினார். எனக் கற்பிக்கின்றது. எனவே, திருச்சபை திருச்சிலுவையைப் பின்வருமாறு புகழ்ந்து பாடி வணக்கம் செலுத்துகிறது.

(க.தி.ம. # 617)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 2.1.3**

## பாஸ்காப் புகழுரை : குறுகிய பாடம்

வானகத் தூதர் அணி மகிழ்வதாக;
இத்திருச்சடங்கிலே பெருமகிழ்ச்சி பொங்குவதாக;
மாண்புமிக்க மன்னரது வெற்றிக்காக
எக்காளம் தொனித்து மீட்பை அறிவிப்பதாக.
இப்பெருஞ் சுடர்களால் ஒளிவீசப்பெற்று
இவ்வுலகம் பெருமகிழ்ச்சி கொள்வதாக:
முடிவில்லா மன்னரது பேரொளியால்
உலகெல்லாம் துலங்கி, தன்னைச் சூழ்ந்த
இருளனைத்தும் ஒழிந்ததென உணர்வதாக.
திருவிளக்கின் பெருஞ்சுடரால் அழகுபெற்று
அன்னையாம் திருச்சபையும் களிகூர்வதாக.
இறைமக்கள் அனைவரது பேரோலியால்
இக்கோயில் எதிரொலித்து முழங்குவதாக.

(முன்மொழி : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
பதில் : உம்மோடும் இருப்பாராக)
முன்மொழி : இதயங்களை ஆண்டவரிடம் எழுப்புங்கள்.
பதில் : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.
முன்மொழி : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.
பதில் : அது தகுதியும் நீதியுமானதே.

கண்ணுக்குப் புலப்படாத இறைவனாகிய எல்லாம் வல்ல தந்தையையும்,
அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும்,
இதயப் பற்றுதலோடு வாயாரப் பாடிப் புகழ்வது
மெய்யாகவே தகுதியும் நீதியுமாகும்.

கிறிஸ்துவே ஆதாமினால் வந்த கடனை
நமது பெயரால் என்றும் வாழும் தந்தைக்குச் செலுத்தி,
பாவத்துக்குரிய கடன்சீட்டைத் தம் திரு இரத்தத்தால் அழித்துவிட்டார்.

ஏனெனில், பாஸ்கா விழா இதுவே;
இதில், மெய்யான செம்மறியாகிய கிறிஸ்து கொலையுண்டார்;
இவரது இரத்தத்தால் விசுவாசிகளின் கதவுநிலைகள் அர்ச்சிக்கப்படுகின்றன.

முற்காலத்தில் நம் முன்னோரான இஸ்ராயேல் மக்களை
எகிப்திலிருந்து விடுவித்து, அவர்கள் பாதம் நனையாமல்
செங்கடலைக் கடக்கச் செய்தது இந்த இரவிலேதான்.

நெருப்புத் தூணின் வெளிச்சத்தால்
பாவத்தின் இருளை அகற்றிய இரவும் இதுவே.
பூவுலகெங்கும் இன்று கிறிஸ்துவில் விசுவாசங்கொண்டவர்களை
உலகின் தீய வழிகளிலிருந்தும் பாவ இருளிலிருந்தும் பிரித்து,
அருள்வாழ்வில் மீண்டும் சேர்த்துத் தூயவராக்கியதும்
இந்த இரவிலேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவின் தளைகளைத் தகர்த்தெறிந்து,
கிறிஸ்து பாதாளத்திலிருந்து வெற்றி வீரராய் எழுந்ததும்
இந்த இரவிலேதான்.

நீர் எம்மீது தயைகூர்ந்து காட்டிய இரக்கம்
எத்துணை வியப்புக்குரியது!
அடிமையை மீட்குமாறு மகனையே கையளித்த
அளவில்லா அன்புப்பெருக்கே!

ஓ ஆதாமின் பாவமே! உன்னை அழிக்க
கிறிஸ்துவின் மரணம் திண்ணமாய்த் தேவைப்பட்டது!
இத்துணை மாண்புமிக்க மீட்பரை அடையப் பேறுபெற்றதால்
பாக்கியமான குற்றமே!

எனவே, புனிதப்படுத்தும் இவ்விரவின் திருநிகழ்ச்சி
அக்கிரமங்களை ஒழிக்கின்றது, குற்றங்களைக் கழுவிப் போக்குகின்றது;
தவறினோர்க்கு மாசின்மையையும்
துயருற்றோருக்கு மகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

ஆகவே, தூயதந்தையே, இப்புனிதமான இரவில்
நாங்கள் உமது புகழ்ச்சிக்காக அளிக்கும் மாலைப் பலியை ஏற்றருளும்.

தேனீக்களின் உழைப்பாலான மெழுகிலிருந்து உருவான இத்திரியைப்
புனித திருச்சபை தன் பணியாளரின் கையால்
பக்திச் சிறப்புடன் உமக்கு ஒப்புக்கொடுத்து
மாலைப் பலி செலுத்துகின்றது.

விண்ணுக்குரியவை மண்ணுக்குரியவையோடும்,
கடவுளுக்குரியவை மனிதனுக்குரியவையோடும் இணைந்தது
மெய்யாகவே பாக்கியமான இந்த இரவிலேதான்.

ஆகவே ஆண்டவரே, உம்மை வேண்டுகிறோம்;
உமது திருப்பெயரின் மகிமைக்காக அர்ச்சிக்கப்பெற்ற
இந்த மெழுகுதிரி, இவ்விரவின் இருளை ஒழிக்குமாறு,
குறைவுபடாமல் நின்று எரிவதாக.

இது இனிமைதரும் நறுமணமாக ஏற்கப்பட்டு
விண்ணக விளக்குகளுடன் கலந்துகொள்வதாக.
விடிவெள்ளி எழும்போது இது சுடர்விட்டு எரிவதாக.
ஒருபோதும் மறையாத இந்த விடிவெள்ளி
உம் திருமகன் கிறிஸ்துவேதான்;
பாதாளத்திலிருந்து திரும்பிவந்து,
மனித இனத்தின்மீது அமைதியாக ஒளிவீசி,
என்றென்றும் வாழ்ந்து ஆட்சிசெய்கின்றர் அவரே!
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 2.0 : சமுகத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவர்.

தேர்ச்சிமட்டம் 2.2 : நற்கருணை வழியாக கிறிஸ்தவ குழும ஒன்றிப்பில் வாழ்வர்.

செயற்பாடு 2.2 : நற்கருணையை எமது வாழ்வின் மையமாகக் கொண்டு சகோதரத்துவத்தில் வாழ்வோம்.

பாடவேளைகள் : 120 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு -
- ❖ திருவிவிலியம், தி.ப. 12:42-47, 1கொரி.11:27-33 வசனங்கள் அடங்கிய அட்டைகள்.
- ❖ க.தி.ம. # 787, # 799, # 793
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ இணைப்புகள் 2.2.1, 2.2.2, 2.2.3
- ❖ பல்வேறு விதமான வேலைகளில் ஈடுபடுவோர் உள்ளடங்கிய படம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.2.1**

- ✹ மேற்படி படத்தை அனைத்து மாணவர்களும் காணும்படியாக காட்சிப்படுத்துங்கள்.
- ✹ பல்வேறு விதமான தொழில்களும் அதில் ஈடுபடு வோரின் செயல்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- ✹ அர்ப்பணிப்போடு செய்யும் வேலைகள், சேவைகள், அத்தொழில் புரிவோரின் மனப்பாங்குகள் தொடர்பாக கலந்துரையாடி பின்வரும் விடயங்களை வெளிக்கொணர உதவுங்கள்.

| |
|---|
| ♦ வளர்ச்சியடைதல், விருத்திசெய்தல் இலாபம் ஈட்டுதல், பணம் சம்பாதித்தல் போன்றவற்றிற்காக மனிதன் உழைப்பில் ஈடுபடுகின்றான். |
| ♦ தொடக்க திருச்சபையினரிடம் காணப்பட்ட பண்புகளை அறிவர். |
| ♦ நற்கருணை அவர்கள் வாழ்வின் மையமாக காணப்பட்டது. |
| ♦ ஆரம்ப திருச்சபையில் ''அப்பம் பிட்டல்'' திருவிருந்து ஆண்டவரின் திருவிருந்து என அழைக்கப்பட்டது. |
| ♦ ஆலயங்கள் இல்லாத தொடக்க காலத்திருச்சபையில் இயேசுவின் திருவிருந்தைக் கொண்டாட கிறிஸ்தவர்கள் வீடுகளில் கூடினார்கள். |
| ♦ இத்திருவிருந்தில் பங்குகொள்ளுதல் கிறிஸ்துவோடு உள்ள உறவின் கிறிஸ்தவர்களுக்கிடையே உள்ள உறவின் வெளிப்பாடாக அமைகிறது. |

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2.2.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 2.2.1 இல் உள்ள குழு அறிவுறுத்தல் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 2.2.3

- குழுக்களைக் கலைத்து ஒவ்வொரு குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- ♦ நற்கருணை விருந்து ஒற்றுமையின் பகிர்ந்து வாழ்தலின் உச்சமாகும்.
- ♦ நற்கருணை குறித்துக் காட்டும் ஒருமைப்பாடு தொடக்க திருச்சபையின் வாழ்வாக இருந்தது.
- ♦ இயேசு தன்னையே வழங்கிய சுயநலமற்ற தியாகச் செயலே திருவிருந்து.
- ♦ இவ்விருந்தில் பங்குகொள்பவர்கள் இயேசுவைப் போன்று தன்னலமற்றவர்களாக, எவ்வித வேறுபாடுமின்றி ஒற்றுமையாக ஓருடலாக மாறவேண்டும்.
- ♦ நற்கருணைக் கொண்டாட்டம் வெறும் வழிபாடல்ல, வாழ்வாக அமைய வேண்டும்.
- ♦ ஒரே கிண்ணத்தில் பருகி நாம் ஒவ்வொருவரும் ஒருமித்து வாழ வேண்டியிருக்கிறது.
- ♦ கிறிஸ்தவ சமூகத்தின் ஒற்றுமையின் ஊற்றாக அப்பத்தின் கிண்ணத்தின் ஒருமைப்பாட்டை தூய பவுல் வலியுறுத்துகிறார்.
- ♦ விருந்தென்பது நம் நாளாந்த வாழ்வின் ஒன்றினைப்பின் அன்புறவின் அடையாளமாக இருப்பது போல நற்கருணை விருந்தும் கிறிஸ்தவ வாழ்வின் ஒன்றினைப்பை வெளிக்காட்டும் அடையாளமாக உள்ளது.
- ♦ ஒவ்வொரு கிறிஸ்தவனும் தகுதியான முறையில் நற்கருணை விருந்தில் பங்குபற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ தகுதியின்றித் திருப்பந்தியில் பங்குபற்றி நற்கருணை உட்கொள்ளும் போது கிறிஸ்தவ தனிப்பட்ட, குழு வாழ்வை நேரடியாகப் பாதிக்கின்றது.
- ♦ உள்ளார்ந்த வெளியார்ந்த ரீதியாக தகுதியற்ற தன்மைகள் இரு விதமாக காணப்படுகின்றன.
- ♦ உள்ளரங்க ரீதியாக பாவமற்ற நிலையும் வெளியரங்க ரீதியாக சீரிய நடத்தை, ஒழுக்கமான வாழ்வு, நற்கருணை உபவாசம் என்பன குறிப்பிடப்படுகின்றன.
- ♦ தகுதியான முறையில் நற்கருணை விருந்தில் பங்குபற்றி எம்மைப் பிறருக்கு பகிர்ந்தளிப்பதன் வழி கிறிஸ்தவ குழும ஒன்றிப்பில் வாழ வேண்டும்.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ✸ நற்கருணைத் திருவிருந்தில் பங்கு பற்றுவதன் வழி "எம்மைப் பிறருக்காக பிட்டுக் கொடுத்து இலட்சிய மனிதராவோம்" என்ற தலைப்பில் சிறு கட்டுரை எழுதுவர்.
- ✸ "நற்கருணை வழி சகோதரத்துவத்தை வளர்ப்போம்" என்னும் மையப் பொருளில் நாடகம் ஒன்று தயாரித்து நடிப்பர்.
- ✸ தகுதியின்றி நற்கருணை உட்கொள்ளும் நிலையில் தனிப்பட்ட குழும வாழ்வை எவ்வாறு பாதிக்கும் என்பதை தமது நண்பருக்கு விளக்குவர்.
- ✸ தொடக்க திருச்சபையிடம் காணப்பட்ட "அப்பம் பிட்குதல்" நிகழ்வு, அகாப்பே போன்றவை பற்றிய விபரங்களைத் தேடிப் பார்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 2.2.1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ♦ உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவங்களை நன்கு வாசியுங்கள்.
- ♦ அவை பற்றிக் கலந்துரையாடி தகவல்களைத் திரட்டி ஒழுங்குபடுத்தி முன்வைப்புக்கு தயார்படுத்துங்கள்

குழு - 1 : ''நற்கருணை வழி சகோதரத்துவத்தை வளர்ப்போம்'' என்ற தலைப்பில் சஞ்சிகை ஒன்றுக்கு ஆக்கம் எழுதுங்கள்.

குழு - 2 : உங்கள் சமுதாயத்தில் பசி பட்டினியோடு வாழும் சகோதரர்கள் மட்டில் நீங்கள் செய்யக்கூடிய செயற்பாடுகளை முன்வையுங்கள்.

குழு - 3 : நற்கருணையை தகுதியோடு உட்கொள்வதன் அவசியத்தையும் தகுதியின்றி உட்கொள்ளும் போது ஏற்படும் விளைவுகளையும் திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து விளங்குங்கள்.

## இணைப்பு 2.2.2

### அகாப்பே

அன்பு என்ற சொல்லைக் குறிக்கும் கிரேக்க மொழிச் சொற்களில் ஒன்றான இது பின்னர் கிறிஸ்தவப் பின்புலத்தில் மானிடருக்கான மற்றும் உலகப் படைப்புகளுக்குமான கடவுளின் அருளன்பு மற்றும் உலகப் படைப்புகளுக்குமான கடவுளின் அருளன்பு மற்றும் பிறர்மைய சுயகையளிப்பு என்னும் மேலதிக சிறப்பு அர்த்தங்களை உள்வாங்கியது. நற்செய்தி கிரேக்கத் தளத்திற்கு விரிவானபோது இறையியலாளர்கள் கிரேக்க மொழியில் அன்பைக் குறிப்பிடும் அகாப்பே, ஈரோஸ், பிலோ என்ற மூன்று சொற்களையும் தனித்தனியாக அன்பின் வகையை வேறுபடுத்தி எடுத்தாண்டனர். ஈரோஸ் சுயமையமான கவருதல் என்ற அர்தத்ததோடும், பிலோ சமமான நட்புறவு எனவும் வேறுபடுத்தி விளக்கினர். புதிய ஏற்பாடு அகாப்பே என்ற சொல்லையே எடுத்தாண்டது. கடவுள் அன்பாயிருக்கிறார் (1யோவா 4:8). இச்சொல்லை பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையான என்றென்றும் உள்ள எதிர்நோக்கு என்ற விவிலியக் கருத்தோடு பார்க்க வேண்டுமேயன்றி வேறுபட்டதாக அர்த்தப்படுத்த முடியாது (யோவான் 3:16).

தூய யூதாவின் மடலில் இது அன்பு விருந்து (யூதா. 12) எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விருந்து பற்றிய விபரத்தை தூய பவுலின் கொரிந்தியருக்கான 1வது மடலின் 11ம் அதிகாரத்தில் பார்க்கலாம். ஒவ்வொருவரின் பங்களிப்போடு நடத்தப்பட்ட அகாப்பே என்ற கிரேக்க விருந்துமுறை கிறிஸ்தவ நம்பிக்கை நிலைப்பாட்டில் தழுவியமைக்கப்பட்டு நற்கருணை அடையாளத்தோடு இணைந்த சடங்காக்கப்பட்டது. இப் பின்புலத்தில் திருத்தூதர் பணிநூல் நற்கருணையை ஆண்டவரின் விருந்து எனக் குறிப்பிடுவதை அவதானிக்கலாம். கொரிந்திய இறைமக்களின் நற்கருணை ஒன்று கூடலில் ஏழைகள் புறக்கணிக்கப்பட்ட தவறான செயற்பாடுகளை தூய பவுல் கண்டிக்கிறார். ஹிப்போ ஆயர் தூய அகுஸ்தீன் இதைப்பற்றி எழுந்த குறையைக் குறிப்பிடுகிறார். 4வது நூற்றாண்டின் பின் கூற்றில் லவேடேசியாப் பேரவை ஆண்டவரின் இல்லத்தில் உணவு சாப்பிடுதலைத் தடை செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 2.2.3

திருச்சபையை ஒரு உடலுக்கு ஒப்பிடுவதன் வழியாக கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவு வெளிப்படுத்தப்படுகிறது. திருச்சபை அவரைச் சுற்றி இருப்பது மட்டுமல்ல அவரது உடலில் அவரோடு இணைந்துள்ளது. திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல் என்பதன் மூன்று பண்புகளைச் சிறப்பாக குறிப்பிடவேண்டும்.

- கிறிஸ்துவோடு தமது ஒன்றிப்பின் பயனாக உறுப்பினர்கள் மத்தியில் ஏற்படும் ஒற்றுமை
- கிறிஸ்து உடலின் தலையாக இருத்தல்
- திருச்சபை கிறிஸ்துவின் மணவாட்டி

(க.தி.ம. # 789)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | : | சமூகத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவர். |
| **தேர்ச்சிமட்டம்** | **2.3** | : | நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுடன் செயற்படுவர். |
| **செயற்பாடு** | **2.3** | : | கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுடன் நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவோம். |
| **பாடவேளைகள்** | | : | 120 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடு** | | - | ❖ மனித உடலைக் காட்டும் படம்<br>❖ திருவிவிலியம்<br>❖ உரோ. 12:408, யோவா. 15:4-5, யோவா 17:20-21, வசனங்கள் அடங்கிய அட்டைகள்.<br>❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா<br>❖ மீளொட்டி (Glue tag)<br>❖ இணைப்புகள் 2.3.1 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.3.1**

- ஒரு மனிதனின் (மனித உடல்) படத்தைக் காண்பித்து அது இயங்கும் முறை உறுப்புக்களின் செயற்பாடு, அவை ஒவ்வொன்றும் செய்யும் ஒவ்வொரு தொழில்கள் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- உடலின் எல்லா உறுப்புக்களும் ஒருமித்து இயங்கும் போதுதான் பலம் கிடைக்கின்றது. அதன் வழி முழுமையான பயனையும் பெறமுடியும் என்பது பற்றிக் கலந்துரையாடி பின்வரும் விடயங்களை வெளிக்கொணருங்கள்.

> ♦ எமது உடலில் உறுப்புக்கள் ஒருங்கே இணைந்து செயற்படுவது போல திருச்சபை உறுப்பினர்கள் கிறிஸ்துவோடு இணைந்திருக் கின்றனர்.
> ♦ உண்மையான திராட்சைச் செடி நானே என கிறிஸ்து கூறுகிறார்.
> ♦ திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் அதன் கிளைகளாகும்.
> ♦ மிகுந்த கனி தரும்படி கிளைகள் கத்தரிக்கப் படுவதும் கனி கொடாத கிளைகள் வெட்டிய கற்றப்பட்டு திராட்சைச் செடி பராமரிக்கப்படுவது போல கிறிஸ்துவோடு இணைந்துள்ள எம் ஒவ்வொருவரையும் இறைத்தந்தை கரிசனை யோடு நோக்குகிறார்.
> ♦ கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபை கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருக்க வேண்டும்.
> ♦ தொடக்க கிறிஸ்தவர்கள் தம்மிடையே அன்புற வில் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்தார்கள்.

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2.3.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 2.3.1 இல் உள்ள குழு அறிவுறுத்தல் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 2.3.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கச் செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- திராட்சைச் செடியும் கிளைகளும் போல கிறிஸ்துவுக்குள் ஒரே உடலின் உறுப்புகளாக இருக்கும் நாம் எமக்குள் ஒருமைப்பாட்டின் வழியாக கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறோம்.
- கிறிஸ்துவோடு ஒன்றித்திருந்தாலொழிய பலன் தரமுடியாது.
- கிறிஸ்துவோடு ஒன்றித்திருத்தல் என்பது அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதாகும்.
- திராட்சைச் செடியோடு இணைந்திருக்கின்ற கிறிஸ்தவர்களாகிய நாம் மிகுந்த கனிதரும்படியாக கத்தரிக்கப்படவேண்டும்.
- கிறிஸ்து தந்தையின் அன்பில் ஒன்றித்திருப்பது போல நாமும் கிறிஸ்துவின் அன்பில் ஒன்றித்திருக்க அழைக்கப்படுகிறோம்.
- தொடக்க கிறிஸ்தவர்கள் அன்புறவில் வாழ்ந்தது போல நாமும் எம்மிடையே அன்புறவுடன் வாழ வேண்டும்.
- இதுவே இயேசு எமக்காகச் செபித்த கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுச் செபமாகும். (இன்று இதையே நாம் திருச்சபை ஒற்றுமைச் செபம் என்கிறோம்.)
- கிறிஸ்துவின் மறையுடல் ஒற்றுமையின் அடையாளமாக இருக்கிறது. பன்மையில் ஒருமை, வேறுபாடுகள் மத்தியிலும் ஒற்றுமையை காணும் அடையாளமாக இருக்கிறது. எம்மிடம் உள்ள வேறுபாடுகள் ஒற்றுமைக்கு தடைக்கல்லாக அமைய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ எம்மிடையேயுள்ள பல்வேறு விதமான பண்புகள் சமூக வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படவேண்டும்.
- ♦ நாம் பல்வேறுவிதமாக அழைப்பினைப் பெற்றாலும் எம்மிடையே பல்வேறு ஆற்றல்கள் இருப்பினும் நாம் பொது நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
- ♦ ஆளாளுக்குள்ள வேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதும் மதிப்பதும் பொது நன்மைக்காகப் பயன்படுத்துவதுமே வளர்ச்சியைத் தரும்.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ✹ திராட்சைச் செடி உவமை மூலம் தமக்குக் கிடைக்கும் செய்திகளை வரிசைப்படுத்துவர்.
- ✹ ''கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனிதருமாறு கழித்து விடுவார்". இக்கூற்றை தமது சொந்த மொழிநடையில் விளக்குவர்.
- ✹ வகுப்பில் இருக்கும் மாணவர்களின் வெவ்வேறு விதமான ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை எவ்வாறு பொது நன்மைக்காக பயன்படுத்தமுடியும் என்பது பற்றி கலந்துரையாடி அட்டவணை தயாரிப்பர்.
- ✹ ஒற்றுமைக்காக செபிக்கவேண்டும் என்பதை ஏற்று ஒற்றுமைக்கான செபம் ஒன்றை தயாரிப்பர்.

**இணைப்பு 2.3.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ♦ செயற்பாட்டுப் படிவங்களை நன்கு வாசியுங்கள்.
- ♦ அவை தொடர்பான விபரங்களைத்தேடி குழுவாக செயற்படத் தயாராகுங்கள்.
- ♦ குழுக்களாக தயாராகுங்கள்.

குழு - 1 : ''திராட்சைச்செடி" உவமையைச் சித்தரிக்கும் படம் வரைந்து அது வெளிப்படுத்தும் செய்திகளையும் தொகுத்து காட்சிப்படுத்துங்கள்.

குழு - 2 : ஆதிக்கிறிஸ்தவர்கள் அன்புறவுடன் வாழ்ந்த முறையைக் குறிப்பிட்டு இன்று எமது சமுதாயத்தில் எவ்வாறு அன்புறவுடன் வாழமுடியும் என்பதை எடுத்துக்கூறுங்கள்.

குழு - 3 : உங்கள் குழுவினரிடையே காணப்படும் வெவ்வேறுவிதமான ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை எவ்வாறு பொது நன்மைக்காக பயன்படுத்தி சமூகவளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதை வெளிப்படுத்துங்கள்.

குழு - 4 : ஒற்றுமைக்காக செபிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து யோவானின் குருத்துவ செபத்தின் அடிப்படையில் இறைமக்களின் ஒற்றுமைக்கான செபம் ஒன்றைத் தயாரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 2.0 : சமுகத்தில் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவர்.

தேர்ச்சிமட்டம் 2.4 : அர்ப்பணிப்புடன் செயலாற்றி மனுக்குல மீட்புக்கு உதவுவர்.

செயற்பாடு 2.4 : முழு மனித விடுதலைக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

பாடவேளைகள் : 120 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு -
- ❖ திருவிவிலியம்
- ❖ லூக். 4:16-19, யோவா 10:14-16, மத். 5:17-18, லூக். 19:10 ஆகிய திருவிவிலிய வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.
- ❖ ஒலிநாடா - நல்லாயன் பாடல்
- ❖ நல்லாயன் படம்
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ இணைப்புகள் 2.4.1
- ❖ ஒலிக்கருவி / வானொலிப்பெட்டி

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.4.1

- நல்லாயன் படம் ஒன்றைக் காட்சிப்படுத்தி நல்லாயன் பாடல் ஒன்றை ஒலிக்கச் செய்தல் / அல்லது இணைப்பு 2.4.2ல் தரப்பட்ட பாடலைக் காட்சிப்படுத்தி எல்லோரும் சேர்ந்து பாடுதல்.
- சிறிது நேரம் அந்தப் பாடலில் உள்ளடங்கிய விடயங்கள் பற்றிச் சிந்தித்தல்.
- நல்லாயன் இயேசு எம்மைத் தேடி என் பெயர் சொல்லி எம்மைப் பராமரித்து வருகிறார் என்பது பற்றியும் பின்வரும் கருத்துக்கள் வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- ♦ நல்லாயன் பற்றிய பாடல்கள் திருவழிபாட்டில் பாடப்படுகின்றன.
- ♦ நல்லாயனாகிய இயேசு நம்மைப் பெயர் சொல்லி அழைக்கிறார்.
- ♦ எம்மைத் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறார்.
- ♦ நசரேத்தூர் செபக்கூடத்தில் இயேசு ஏழைகளுக்கும் கைவிடப்பட்டவர்களுக்கும் நற்செய்தியை அறிவிக்கவே வந்தார்.
- ♦ திருச்சட்டங்களையும் இறைவாக்குகளையும் நிறைவேற்றவே இயேசு வந்தார்.
- ♦ பாவத்தினால் இழந்துபோன உறவைக் கட்டியெழுப்பவே இயேசு வந்தார்.

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2.4.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 2.4.1 இல் உள்ள குழு அறிவுறுத்தல் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 2.4.3

- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- இயேசு நல்ல மேய்ப்பனாக தன்னை வெளிப்படுத்தினார்.
- நல்ல மந்தையின் பண்பு ஆயனின் குரலுக்கு செவிசாய்க்கும் தன்மை.
- குறித்த இனம் மட்டுமல்ல எல்லோரையும் அவருடைய மந்தையில் சேர்ப்பதே அவரது பணி.
- இதற்காகவே தம் உயிரையும் பலியாக்கினார்.
- நசரேத்தூர் செபக்கூடத்தில் மீட்புப் பணிபற்றிய எசாயாவின் இறைவாக்கு கிறிஸ்துவில் நிறைவேறிற்று. (எசா. 61:1-2)
- இறைவாக்கினர் வழியாகவும் திருச்சட்டம் வழியாகவும் முன்னறிவிக்கப்பட்ட மீட்புச் செயல் கிறிஸ்துவில் நிறைவேறுவதைக் காண்கின்றோம்.
- தன் வாழ்க்கை மாற்றத்தை வெளிப்படுத்திய சக்கேயுவுக்கு மீட்பு உண்டு என்பதை இயேசு வெளிப்படுத்தினார்.
- ஆயர்கள் மந்தைக்கு முன் மாதிரியாக இருந்து அவர்களது மீட்புக்கு அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும்.
- நல்ல ஆயனுக்கும் மந்தைக்குமிடையே மிக நெருக்கமான உறவு இருக்கும்.
- நல்லாயனாகிய கிறிஸ்துவோடு நாமும் அன்புறவு வைத்திருக்க வேண்டும்.
- நாம் வாழ்வு பெறவும் அதை நிறைவாகப் பெறவுமே இயேசு தமது இன்னுயிரைக் கொடுத்தார்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நல்லாயன் இயேசு பசும்புற்றரையில் எம்மை வழிநடத்தும் முறையை எண்ணி மகிழ்ந்து பாடல் ஒன்று ஆக்குவர்.
- இறைவாக்கினர் வழியாக முன்னறிவிக்கப்பட்ட மீட்புச் செயல் இயேசுவில் நிறைவேறியமை தொடர்பாக திருவிவிலியத்திலிருந்து அட்டவணை ஒன்று தயாரிப்பர்.
- ''மீட்புக்கு அவசியமானது மனமாற்றம்'' என்பதை சக்கேயுவின் வாழ்வை ஆதாரமாகக் கொண்டு விளக்குவர்.
- பிறருடைய மீட்புச் செயலுக்கு எவ்வாறு அர்ப்பணிப் புடன் செயற்படுவர் என்பதை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுவர்.

**இணைப்பு 2.4.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவங்களை நன்கு வாசியுங்கள்.
- அவை பற்றிக் கலந்துரையாடி தகவல்களைத் திரட்டி ஒழுங்கமைத்து முன்வைப்புக்குத் தயார்ப்படுத்துங்கள்

குழு - 1 : யோவா 10:14-16 பகுதியை நன்கு வாசித்து நல்ல ஆயன் ஒருவனுக்கும் கூலிக்கு மேய்ப்பவனுக்கும் உள்ள வேறுபாடுகளை அட்டவணை தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள்.

குழு - 2 : பின்வரும் நிலையில் இருப்போர் மட்டில் நீர் எவ்வாறு செயற்படுவீர் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.
(i) பெற்றோரை இழந்து துன்பத்துடன் வாடும் உமது நண்பர்.
(ii) நோய் நொடியில் துன்பப்படும் அயலவர்.
(iii) பாடசாலை செல்ல வாய்ப்பின்றி வாழும் கிராமத்து சிறார்கள்.

குழு - 3 : ''சக்கேயுவின் மனமாற்றம்'' என்ற தலைப்பில் கவிதை / புதுக்கவிதை ஒன்று வரையுங்கள்.

குழு - 4 : ஆயனின் பணி பற்றியும் அதன் வழி எமது இறைவாக்குப் பணி பற்றியும் விளக்கி கட்டுரை ஒன்று எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 2.2.2

என் ஆயன் இயேசு என்னுள்ளம் தேடி
வருகின்ற வேளையிது
என் ஆன்மா அவரை ஏற்றிப் போற்றி
மகிழும் வேளையிது

என் தவம் நான் செய்வேன்
என் நன்றி நான் சொல்வேன்

I

பசியால் வாடும் ஏழையின் நிலையில்
பாவி நான் நின்றிருந்தேன்
பரமன் இயேசு என் பாவத்தை அகற்றி
அருளமுதை ஈந்தார்

II

ஆயிரம் குறைகள் என்னிடம் கண்டும்
அணைத்திடவே வந்தார்
ஆண்டவர் இயேசு அன்பினால் என்னை
மாற்றிடவே வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 3.0 | : | அன்பின் கட்டளைகளைத் தமது வாழ்வில் செயற்படுத்துவர். |
| **தேர்ச்சிமட்டம்** | 3.1 | : | திருவிவிலிய அமைப்பை அறிவதன் மூலம் இறை அன்பை அனுபவித்து சமூகத்தில் பணியாற்றுவர். |
| **செயற்பாடு** | 3.1 | : | திருவிவிலியம் வழியாக வெளிப்படுத்தப்படும் இறைவார்த்தையின் வல்லமையையும், அன்பையும் பெற்று சமூகத்தில் பணி செய்ய முன்வருவோம். |
| **பாடவேளைகள்** | | : | 120 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடு** -

- ❖ திருவிவிலியம்
- ❖ 2தீமோத்தேயு 3:16, 2பேதுரு 1:21, லூக். 24:44 ஆகிய திருவிவிலிய வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.
- ❖ ஒலிநாடா - இறைவார்த்தை பாடல்
- ❖ பாடல் எழுதிய அட்டை
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ இணைப்புகள் 3.1.1, 3.1.2, 3.1.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.1.1**

- திருவிவியத்தைக் காட்சிப்படுத்தி அதைப் பற்றி விளக்குங்கள்.
- இணைப்பு 3.1.2லுள்ள இறைவார்த்தைப் பாடலை ஒலிக்கச் செய்யுங்கள்.
- பாடலைக் காட்சிப்படுத்தி எல்லோரும் சேர்ந்து பாடுதல்.
- 3.1.3லுள்ள தகவல் கோவையை ஓரிரு முறைகள் மாணவர் விளங்கும் வண்ணம் வாசிக்கச் செய்யுங்கள்.
- திருவிவிலியம் வாழ்வின் சிறப்புக்குப் பயன்படும் விதத்தை மாணவரின் சம்பவங்கள் சிந்தனைகள் வழியாக வெளிக்கொணர இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

> - ♦ திருவிவிலியம் இறைவார்த்தைகள் அடங்கிய புனித நூல்.
> - ♦ திருவிவிலியத்திலுள்ள இறைவார்த்தைகள் வழியாக இறைவன் தம்மை வெளிப்படுத்தி மனிதரோடு பேசுகின்றார். உரையாடுகின்றார்.
> - ♦ திருவிவிலியத்தின் வழியாக இறைவன் மனிதருக்கு வெளிப்படுத்திய மீட்புத்திட்டம் எமக்கு வழங்கப்படுகிறது.
> - ♦ பழைய ஏற்பாடானது இறைவனுக்கும் இஸ்ராயேலருக்கும் உள்ள உறவு பற்றிப் பேசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருவிவிலியத்திலே கிறிஸ்துவில் வெளிப்பட்ட முழு உலகுக்குமான மீட்பு உடன்படிக்கை விளக்கப்பட்டுள்ளது.
- பழைய ஏற்பாடு எபிரேயம், அரமயிக் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டது. பின்னர் புதிய ஏற்பாடானது கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

(12 நிமிடங்கள்)

படி 3.1.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 3.1.1 இல் உள்ள குழு அறிவுறுத்தல் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 2.4.3

- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுவினரின் ஆக்க பூர்வமான கருத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- ''பிபிலோஸ்'' என்பது எழுதப் பயன்படுத்தப்பட்ட புல்தண்டின் பெயர். பிபிலோஸ் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து ''பைபிள்'' என்ற ஆங்கிலச் சொல் வந்தது.
- கடவுளின் வெளிப்பாட்டை தவறின்றி மனித வார்த்தையில் கொடுப்பதற்கான இறைவனின் தூண்டுதல் **இறையூக்கம்** என அழைக்கப்படுகிறது.
- திருவிவலியத்தின் மூல ஆசிரியர் இறைவன். துணை ஆசிரியர் மனிதன். வேதாகமத்தை எழுத இவ்விருவரும் கருவிகளாக அமைந்தனர்.
- திருவிவிலியம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- பழைய ஏற்பாட்டில் 46 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பழைய ஏற்பாடு பின்வருமாறு பிரிக்கப் பட்டுள்ளது.
    - ஐந்நூல் (சட்டநூல், தோரா, பஞ்சாகமம்)
    - வரலாற்று நூல்கள்
    - ஞான நூல்கள்
    - இறைவாக்கினர் நூல்கள்
- புதிய ஏற்பாடு பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.
    - வரலாற்று நூல்கள்
    - சுற்றுமடல்கள்
    - திருவெளிப்பாடு
- இன்று நடைபெறும் நிகழ்ச்சிகளினூடாக இறைவனின் சித்தத்தைப் புரிந்து கொண்டு, அவரது அன்பைப் பெற்று, சமூகத்தில் பணி செய்ய முன்வரவேண்டும்.
- திருவிவிலியத்தை வாசித்து விளங்க ஆவியாரின் வழிகாட்டலைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- திருச்சபையானது இறையன்பின் அடையாள மாகத் திகழும் திருவிவிலியத்தை தினமும் வாசித்து இறையன்பில் வளர்வதற்கு விசுவாசிகளைத் தூண்டுகிறது.

(60 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருவிவிலியத்தின் பயன்பாட்டை 2 தீமோத்தேயு 3:16 ன் அடிப்படையில் விளக்குவர்.
- பழைய, புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ள பிரிவுகளையும், அவற்றிலுள்ள நூல்களையும் பட்டியல் படுத்துவர்.
- இறைவார்த்தையை மற்றவர்களுக்கு அறிவிக்கக் கூடிய சில வழிமுறைகளை எழுதிக் காண்பிப்பர்.
- இறைவார்த்தையைத் தினமும் வாசிப்பதால் தாம் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்களை (நன்மைகளை) விளக்கிக் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 3.1.1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவங்களை நன்கு வாசியுங்கள்.
- அவை பற்றிக் கலந்துரையாடி தகவல்களைத் திரட்டி ஒழுங்கமைத்து முன்வைப்புக்குத் தயார்ப்படுத்துங்கள்

குழு - 1 : இணைப்பு 3.1.3ஐ நன்கு விளங்கி வாசித்து அதன் பயன்பாட்டை எழுதிக் காண்பியுங்கள்.

குழு - 2 : திருவிவிலியத்தின் இரு பிரிவுகளிலுமுள்ள நூல்களை பட்டியல்படுத்தி போஸ்டர் தயாரியுங்கள்
திருவிவிலியத்திலே இறையன்பு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களையும், இறைவல்லமையைப் பெற்றுக் கொண்டவர்களின் செயற்பாடுகளையும் காண்பியுங்கள்.

குழு - 3 : இறைவார்த்தையை அறிவிக்கக் கூடிய வழிமுறைகளை எழுதிக் காண்பியுங்கள்.

குழு - 4 : இறைவார்த்தையைத் தினமும் வாசிப்பதால், பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளை எழுதிக் காட்டுங்கள்.

## இணைப்பு 3.1.2

### (இறைவார்த்தைப் பாடல்)

ஐயா உம் பிரசன்னம் அண்டி வந்தோம்
அழியா உம் வார்த்தைகள் வாழ்வாகனும்

I

உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது
வாளிலும் கூர்மையானது
சிந்தனையை சீர்தூக்கிப் பார்க்க வல்லது
உம் வார்த்தையே, உம் வார்த்தையே

II

விண்ணும் அழியலாம், மண்ணும் மறையலாம்
வாழ்வின் செல்வம் எல்லாம் அழியலாம்
ஆன்மாவை ஆட்கொள்ளுமே
உம் வார்த்தையே, உம் வார்த்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 3.1.3

திருவிவிலியம் இறை ஏவுதலின் படி எழுதப்பட்டது. இதனை ஏனையோருக்கும் அறிவிக்க வேண்டியது எமது கடமையாகும். இறைவிருப்பத்தை அறிந்து, கற்பிக்கவும், மனிதரது தவறுகளைக் கண்டிக்கவும், தவறுகளைக் களைந்து மனுக்குல வாழ்வை சீராக்கவும், அவர்களை நேர்மையுடன் வாழ பயிற்றுவிக்கவும், திருவிவிலியம் பயன்படுத்தப்பட வேண்டும். (2திமோ. 3:16)

## இணைப்பு 3.1.4

- **இணைத்திருமறை நூல்களை புரட்டஸ்தாந்து சமயத்தினர் ஏற்றுக் கொள்ளாததன் காரணங்கள்.**
    - எபிரேய மொழியில் எழுதப்படாமை.
    - பலஸ்தீனத்துக்கு வெளியே எழுதப்பட்டமை.
    - பபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பிறகு எழுதப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | அன்பின் கட்டளைகளைத் தமது வாழ்வில் செயற்படுத்துவர். |
| தேர்ச்சிமட்டம் | 3.2 | : | இறைவனின் குரலுக்கு செவிமடுத்து அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக்கொள்வர். |
| செயற்பாடு | 3.2 | : | இறைவனின் குரலுக்கு செவிமடுப்பதன் வழியாக நமது வாழ்வை வளமாக்கிக்கொள்வோம். |
| பாடவேளைகள் | | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடு -
- ❖ திருவிவிலியம்
- ❖ 1சாமுவேல் 3:10, லூக். 1:38, மத். 1:21-24 எசாயா 6:8-9 வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ இணைப்புகள் 3.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.2.1**

- ✸ பாடசாலை நிர்வாக அமைப்பும் அதன் உறுப்பினரது அழைப்பும் பணிகளும் பற்றியும் விளக்குங்கள்.
- ✸ கீழ்க்காணும் விடயங்கள் பற்றி பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

> ♦ பாடசாலையில் பல்வேறு விதமான அழைப்பை பெற்றவர்கள் செயற்படுகிறார்கள்.
> ♦ மாணவர்களாகிய எமக்கும் பல்வேறு விதமான அழைப்புக்கள் கிடைத்திருக்கின்றன.
> ♦ சாமுவேல், எசாயா, மரியா, சூசை போன்றோர் இறைவனின் அழைப்பைப் பெற்ற முறையை அறிந்து கொள்வோம்.
> ♦ பலவீனர்களும் இறைவனால் தெரிந்தெடுக்கப் பட்டு, அவரால் வலுப்படுத்தப்பட்டு இறைபணி யாற்றுகின்றனர்.

(12 நிமிடங்கள்)

**படி 3.2.2**

- ✸ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✸ இணைப்பு 3.2.1 லுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- ✸ செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- ✸ எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.2.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள். அதே குழுவினரை ஊக்கு வியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்கு வியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக் களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- ♦ பெயர் சொல்லி அழைத்தல், காட்சி அல்லது விசேட அனுபவம், தயக்கம் காட்டல், திடப்படுத் தல், அனுப்பப்படுதல் இவை அழைத்தலில் காணப்படும் பண்புகளாகும்.
- ♦ சாமுவேல் ஏலியின் வழிநடத்தலால் இறைவனின் குரலொலியை விளங்கிக் கொண்டார்.
- ♦ இறைவனது அழைப்பை ஏற்ற எசாயா தனது பலவீனத்தை உணர்ந்து கொண்டார்.
- ♦ இறையருளை மரியாள் பெற்றிருந்ததாலேயே, இறைவனின் மீட்புத் திட்டத்துக்கு தன்னை முழுமையாகக் கையளித்து, இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்.
- ♦ மரியாவைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ளத் தயங்கிய சூசை கலக்கமுற்றிருந்த நிலையில், இறை குரலுக்குச் செவிமடுத்து, அதற்கேற்ப தனது வாழ்வை மாற்றிக் கொண்டார்.
- ♦ இறைவனின் மீட்புத்திட்டத்தை நிறைவேற்ற சூசை தன் குடும்ப வாழ்வைத் தியாகம் செய்தார்.
- ♦ இறைவன் தனது பணிக்காக வயது வேறு பாடின்றி தமக்கு விரும்பியவர்களைத் தெரிந் தெடுக்கிறார்.
- ♦ பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இறை குரலுக்குச் செவிமடுக்க நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.
- ♦ எமக்குள் இருந்து செயற்படும் இறைவனின் குரலான மனச்சாட்சிக்கு செவிமடுத்து அதற் கேற்ப நல்லவர்களாக வாழ வேண்டும்.
- ♦ நல்ல புத்தகங்கள், நல்ல நண்பர்கள் மனச் சான்று, ஆன்மீக உரை கேட்டல், பெற்றோர், பெரியோரின் அறிவுரைகள் ஆசிரியர்களின் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிதல் இவற்றின் வழியாக இறைவன் எம்மோடு பேசுவதை உணரலாம்.
- ♦ இல்லறம், துறவறம், தனிவாழ்வில் இருந்து கொண்டே வாழ்வைச் சிறப்பாக அமைத்துக் கொள்ள ஆவியானவரின் அருளைக் கேட்டு மன்றாட வேண்டும்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- இறைவனின் குரலுக்கு செவிமடுத்ததால் தமது வாழ்வை வளமாக்கிக் கொண்டவர்கள் பற்றி விளக்குவர்.
- சாமுவேல், எசாயா, மரியா, யோசேப்பு ஆகியோரின் அழைப்பிலே காணப்பட்ட பண்புகளையும் அழைப் பின் போது, இறைவனுக்கு அவர்கள் அளித்த பதிலையும் அட்டவணைப்படுத்துவர்.
- அழைப்பைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களிலே செயற்பட்ட முறைகளை தங்களது வாழ்க்கை அனுபவங்களினூடாக விளங்கிக் கூறுவர்.
- விசுவாச வாழ்வை வளமாக்கிக் கொள்ள செய்யக் கூடிய செயற்பாடுகளை வரிசைப்படுத்துவர்.

## இணைப்பு 3.2.1

### குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- செயற்பாட்டுப் படிவங்களை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : பல்வேறு சந்தர்ப்பங்களில் இறைகுரலுக்குச் செவிமடுத்து பணியாற்றியவர்களின் பெயர்களையும், அவர்கள் எவ்வாறு சேவை செய்தனர் என்பதையும் எழுதி பட்டடியல்படுத்துவர்.

குழு - 2 : சாமுவேல், எசாயா, மரியாள், யோசேப்பு ஆகியோர் அழைப்புப் பெற்ற விதத்தை நடித்துக் காட்டுங்கள். (ஒலிப்பதிவு செய்து மீண்டும் போட்டுக் காட்டுங்கள்)

குழு - 3 : மரியாளும், யோசேப்பும் மீட்புச் செயற்பாட்டுக்கு தம்மை அர்ப்பணித்த விதத்தை எழுதிக் காட்டுங்கள்.

குழு - 4 : எமக்குள் ஒலிக்கும் இறைவனின் குரலை இனம் காணும் விதத்தினையும், அதற்கேற்ப செயற்படும் முறையினையும் பற்றிய சுவரொட்டி ஒன்று தயாரியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | அன்பின் கட்டளைகளைத் தமது வாழ்வில் செயற் படுத்துவர். |
| தேர்ச்சிமட்டம் | 3.3 | : | இறைவனோடு இணைந்த வாழ்வை வளர்த்துக் கொள்வர். |
| செயற்பாடு | 3.3 | : | இறைவனோடு இணைந்து விசுவாச வாழ்வை வளர்த்துக் கொள்வோம். |
| பாடவேளைகள் | | : | 120 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடு** -

- ❖ திராட்டசைச் செடியோடு கிளைகள் இணைந் துள்ள படம்.
- ❖ கலாத். 3:28, மத். 11:25, மத். 10:37, லூக். 12:32
  திருவசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ இணைப்புகள் 3.3.1. 3.3.2, 3.3.3, 3.3.4, 3.3.5, 3.3.6

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.3.1**

- ✸ திராட்சைச் செடியோடு கிளைகள் இணைந்த படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- ✸ கீழ்க்காணும் கருத்துக்கள் வெளிப்பட கலந்துரை யாடலில் ஈடுபடுத்துங்கள்.

> - ♦ திராட்சைசெடியிலிருந்து கிளைகளுக்கு சாரம் செல்கிறது.
> - ♦ செடியில் கிளைகள் நிலைத்திருப்பதாலே பயன் கிடைக்கிறது.
> - ♦ இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதாலேயே நாம் அவரது சீடர்களாக விளங்க முடியும்.
> - ♦ இயேசுவின் குரலுக்கு கீழ்ப்படிந்தாலேயே அவரது சீடர்கள் அநேகரை மனம் மாற்றினார்.
> - ♦ தன்னோடு ஒன்றித்து, நிலைத்திருக்க வேண்டுமென்பதே இயேசுவின் விருப்பம்.
> - ♦ திராட்சை செடியில் கிளைகள் நிலைத்திருந்து கனி தருவதைப் போன்று, திருச்சபையில் பலர் கிறிஸ்துவோடு இணைந்து நிலைத்திருந்து புனிதர்களாக வாழ்ந்திருக்கின்றனர்.
> - ♦ மனிதன் எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும் இறை அழைப்பபை ஏற்று அவரோடு இணைந்து வாழும் போது அவன் புனிதனாக மாற முடியும்.

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.3.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 3.3.1 லுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 3.3.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள். அதே குழுவினரை ஊக்கு வியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக் களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- ♦ புனிதர்கள் என்போர் இவ்வுலகில் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து, மற்றவர்களுக்கு இறைவனைக் காண்பித்து, இன்றும் இறைவனோடு வாழ்கின்றனர்.
- ♦ இறைவனுடன் ஒன்றித்து புனிதத்துவம் அடைந்த சிலரைப் பற்றிய குறிப்புகள்.
- ♦ ''இவ்வுலகிலே பாகுபாடுகள் ஏதும் இன்றி அனைவரையும் சமமாக கருதி ஏழைகளுக்கான இரக்கச் செயல்களில் ஈடுபட்டு ''சமாதானத்தூதர், இரக்கத்தின் சம்மனசு" என பெயர்பெற்று இறைபார்வையிலே புனிதராக மார்டீன் போரஸ் வாழ்க்கை நடத்தினார்.
- ♦ தினமும் ஆர்வத்துடன் திருப்பலியில் பங்குபற்றி, பீடப்பணியாளராக குருவானவருக்கு உதவி, தூய்மை, பக்தி, ஆர்வம் ஆகிய பண்புகளில் வளர்ந்து, நற்கருணையால் போஷிக்கப்பட்டு புனிதரானவர் டொமினிக் சாவியோ.
- ♦ செல்வம் நிறைந்த மாளிகையில் பிறந்தும் சுகபோக வாழ்வை நாடாது, சிறுவயதிலேயே செப, தவ, பக்தி முயற்சிகளில் ஈடுபட்டு, கன்னி மையைப் பாதுகாக்க மரியாளிடம் மன்றாடியும், விசேட விதமாக இளைஞருக்காக மன்றாடியும் வாழ்ந்ததால் புனிதரானவர் அலோஷியஸ் கொன்சாகா (ஞானப்பிரகாசியார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரச குடும்பத்தைச் சேர்ந்த இவள் அரச சுகபோக அந்தஸ்துக்களை முற்றிலும் வெறுத்து சிறுவயது முதல் கடுந்தவ வாழ்வு நடாத்திய கன்னியர் சபையில் சேர்ந்து தாழ்ச்சியுடன் கடவுளுக்குச் சேவை செய்த புனிதை மாறி யூப்றேஷியா ஆவார்.
- அன்புக்கு சிறந்த பதில் அன்பே என்பதை தனது விருதுவாக்காகக் கொண்டு வாழ்ந்த குழந்தை இயேசுவின் புனித திரேசா, தந்தையாம் கடவுளின் கைப்பந்து போல் துன்பங்களைச் சுமந்து பாவங்களின் மனமாற்றத்துக்காக. அயராது செபித்து புனிதையானாள்.
- புனிதர்கள் பிறரன்புச் சேவையிலும் வேதபோதக அலுவலர்களிலும், இளைஞர்களின் கல்வி வளர்ச்சிப் பணியிலும் தமது பணியினை இவ்வுலகிலே செய்திருக்கின்றனர். சிலர் இரத்த சாட்சிகளாகக்கூட தம் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர்.
- திராட்சைச் செடியின் கொடிகள் போன்று இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்து மிகுந்த கனி கொடுத்த புனிதர்கள் போன்று நாமும் இறைவனோடு ஒன்றித்து, வாழ்வதன் மூலம் மிகுந்த கனி கொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம்.
- இறையன்புக்குப் பிரதிபலனாக செப, தவ, ஒறுத்தல் செயல்களினால் தமது வாழ்வைப் புனிதப்படுத்தி எல்லாச் செயல்களிலும் இறை விருப்பத்தை நிறைவேற்றி வாழ்ந்த புனிதர்களின் வாழ்க்கை முன்மாதிரிகையில் எமது வாழ்வும் அமைதல் வேண்டும்.
- புனிதர்கள் சவால்களை வெற்றி கொண்டு எப்படி சான்றுவாழ்வு வாழ்ந்தார்களோ அதே போல் நாமும் இறைவல்லமையால் விசுவாச வாழ்வுக்கெதிரான சவால்களை வெற்றி கொள்ள வேண்டும்.
- திருச்சபையின் வளர்ச்சிக்காகத் தம்மையே அர்ப்பணித்து சான்று பகர்ந்த புனிதர்கள் இன்றும் திருச்சபைக்காகப் பரிந்து பேசுவதை எம்மால் காண முடியும்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- புனிதர்களின் வாழ்க்கை மாற்றத்துக்கு ஏதுவாக இருந்த திருவிவிலிய வசனங்களை தேடியறிந்து அவற்றைத் தொகுத்து காட்சிப்படுத்துவர்.
- இளைஞர்கள் யுவதிகள் எதிர்கொள்ளும் சவால் களை வெற்றி கொள்ளும் வகையில் தமது வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்த புனித அலோஷியஸ் கொன்சாகா , புனிதை யூப்றேஷியா இவர்கள் வாழ்விலிருந்து கற்றுக்கொள்ளும் படிப்பினையை முன்வைப்பர்.
- ''கடவுள் முன்னிலையில் எல்லோரும் சமம்'' என்ற மார்டீன் தே போரசின் விருது வாக்குக்கு ஒப்ப அவரின் வாழ்க்கை மாதிரியைப் பற்றி ஒரு கட்டுரை (கத்தோலிக்க சஞ்சிகைக்கு) வரைவர்.
- எந்த ஒரு மனிதனும் புனிதனாகலாம். அவன் புனித னாக வேண்டுமானால் எவ்வாறான செயல்களை அவன் தன் வாழ்வில் செய்யமுடியும் என்பதை விதந்துரைப்பர்.

**இணைப்பு 3.3.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவங்களை நன்றாக வாசியுங்கள்.
- அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்தைக் குறித்துக்கொள்ளுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : பின்வரும் புனிதர்கள் புனிதர்களாவதற்கு அவர்களிடம் மிளிர்ந்த பண்புகள் செயல்களை தேடி ஆய்ந்து ஒப்படை தயாரியுங்கள்

1. புனித மாட்டீன் தே போரஸ்
2. குழந்தை யேசுவின் புனித திரேசா

குழு - 2 : புனித அலோஷியஸ் கொன்சாகா இன்றைய இளைஞர்களுக்கு பெரும் சவாலாக விளங்குகின்றார். அவர்வழி வெற்றி கொள்ளக்கூடிய வழி முறைகளை முன் வையுங்கள்.

குழு - 3 : இரக்கப் பணிகளுக்காகத் தம்மையே அர்ப்பணித்த புனிதர்களது படங்களை சேகரித்து அவர்களது விருது வாக்கியங்களுடன் காட்சிப்படுத்துங்கள்.

குழு - 4 : இன்றைய காலகட்டத்தில் ஏற்படும் சவால்கள் மத்தியில் புனிதர்களின் முன்மாதிரிகைகள் எமக்கு நன்மையைத் தரமுடியும், தரமுடியாது என்ற தலைப்புகளில் விவாதியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 3.3.2**

## புனித மாட்டின் தே போரஸ்

தென் அமெரிக்காவிலுள்ள பேரு நாட்டின் லீமா என்னும் இடத்தில் உயர்குடியைச் சேர்ந்த தொன் ஜீவான் தே போரஸ் என்ற ஸ்பெயின் நாட்டுப் போர் வீரனுக்கும் பனாமாவிலிருந்து விடுதலை பெற்ற அன்னா வெனாங்குயஸ் என்ற நீக்ரோ இனப் பெண்மணிக்கும் மகனாக மாட்டின் தெ போரஸ் 1579.12.09 அன்று பிறந்தார். தாயின் கறுப்பு நிறத்தையும் நீக்ரோ உருவத்தையும் கொண்டிருந்ததால் ஸ்பானிய இனத்திற்கு பெரும் அவமானமாக இருந்தது. இவருக்கு ஒரு சகோதரி பிறந்ததும் இருபிள்ளைகளையும் தாயின் பொறுப்பில் விட்டுவிட்டு தந்தை பிரிந்து சென்றுவிட்டார். தாயின் குறைந்த வருமானம் இருபிள்ளைகளையும் வளர்ப்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை. மிகவும் வறிய நிலையில் அவர்கள் இருந்ததால் அயலவர்களும் அவர்களை வெறுத்தனர். இத்தகைய துன்பங்கள் மத்தியில் வாழ்ந்தாலும் கசப்புணர்வோ வெறுப்புணர்வோ அவரிடம் காணப்பட்டதில்லை. சிறுவனாக இருந்த காலமுதல் ஏழைகளுக்கும் உடைமைகளைக் கொடுத்து வாழ்ந்தார். பல தடவைகள் தாயார் உணவு வாங்கி வரும்படி கொடுத்த பணத்தை வழியில் காணப்படும் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு தாயிடம் மன்னிப்புக் கேட்பார். ஒருமுறை இரவுணவு வாங்கி வரும்படி தாயார் கொடுத்த பணத்தை ஏழை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு தாயாரின் தண்டனைக்குப் பயந்து வரும் வழியில் உள்ள தேவாலயத்திற்குள் சென்று தங்களுக்கு இரவுணவு தருமாறு செபித்துவிட்டு வீடு திரும்பினார். வறுமையின் பிடியில் வாழ்ந்து கொண்டிருந்த மாட்டினுக்கு மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இவர்களது தந்தை அவர்கள் மாமனாரிடம் ஒப்படைத்தார்.

மாமனாரின் வீட்டிலிருந்து ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட மார்டின் கற்றலில் மிகவும் திறமைசாலியாகத் துலுங்கினார். சிறுவனாக இருக்கும் போதே ஒரு வைத்தியருக்கு உதவியாகக் கடமையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இப்பணி மூலம் ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு வாய்ப்பாக இருந்ததை எண்ணி மகிழ்ச்சியடைந்தார். ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குச் சென்று வீதி வழியாக நடந்து செல்வார். வீதி வழியே இருக்கும் ஏழைகளின் புண்களுக்கு மருந்திட்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார். நோயினால் வருந்தும் நோயாளிக்கு உதவியாக இரவு முழுவதும் அவரோடு இருந்து அவருக்கு தைரியமூட்டுவார். அவரது விசுவாசத்தை வளர்க்க உதவி, அவருக்காகச் செபிப்பார்.

டொமினிக் துறவற சபையில் இணைந்து ஒரு தொண்டனாக (Lay Helper) பணியாற்றுவது அவரது விருப்பாக இருந்தது. ஆனால் அவர் ஒரு துறவியாக வரவேண்டுமென்பதே தாயாரின் விருப்பம். அத்தகைய பதவிகளையோ பெருமையையோ அவர் விரும்பவில்லை. அமைதியான முறையில் ஏழைகளுக்கு உதவுவதே அவரது அவா. டொமினிக் சபை அருட்தந்தையால் அவர் ஏற்றுக் கொள்ளளப்பட்டார். நோயாளர்களைப் பராமரிப்பது, ஏழைகளுக்கு உதவுவது போன்ற பாரிய பொறுப்புக்கள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டாலும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அவற்றைச் செய்து முடித்தார். இவரது வழிகாட்டலின் கீழ் வைத்தியசாலை, சிறுவர் இல்லம், இரக்கப்பணி செய்யும் நிலையம், தான தருமம் செய்யும் வேலைத்திட்டம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவரது காலத்தில் ஆபிரிக்காவிலிருந்து பேரு நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட அடிமைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்களைப் பாதுகாக்க முன் வந்தார். பிற்காலத்தில் வேறு நாடுகளுக்குச் சென்று மறை பரப்பாளராக பணியாற்றவும் வேத சாட்சியாக மரிக்கவும் விரும்பினார். அது நிறைவேறாமையால் தன்னைத்தானே வருத்தி, உணவு உண்ணாமல் வாழ்ந்தார். ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் அவரை அருட்சகோதராக ஏற்றுக்கொள்ள சபை விரும்பினாலும், அதற்கு தான் தகுதியில்லை என்று அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக அருட் சகோதரரான இவர் மக்கள் புனிதராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். செபத்திலும் பக்தி முயற்சிகளிலும் ஆன்மீக செயல்களிலும் ஈடுபட்டு, நோய்களைக் குணமாக்கும் வரம், தீர்க்க தரிசனம் கூறும் வரம், ஒரே நேரத்தில் இரு இடங்களில் இருக்கும் வல்லமை, வெகு தொலைவில் இருக்கும் ஒருவரின் உள்ளக்கிடக்கையைக் கூறும் ஆற்றல் உடையவராகக் காணப்பட்டார்.

தன் முன்மாதிரிகையாலும் நன்மை புரிவதாலும் இனிய சொற்களாலும் மக்களை இறைவன் பால் கவர்ந்த இவர் தமது அறுபதாவது வயதில் 1639.11.03 அன்று இறைவனடி சேர்ந்தார். 1962.05.06 அன்று திருத்தந்தை 23ஆம் அருளப்பரால் இவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது.

''சமூக நீதியின் புனிதர்'' என மாட்டின் தே போரஸ் அழைக்கப்படுகின்றார்.

**இணைப்பு 3.3.3**

## டொமினிக் சாவியோ

வட இத்தாலியாவின் முரியோல்டாவில் சார்லஸ் சாவியோ, பிரிட்ஜி என்போரின் மகனாக 1842ல் பிறந்தார். மூத்த மகன் இறந்ததால் இளைய மகனாகிய இவர்மேல் பெற்றோர் அதிகளவு அன்பைப் பொழிந்தனர். கிறிஸ்தவக் கடமைகளைத் தாயிடமிருந்தும், மரியன்னைப் பக்தியைப் பங்குக் குருவிடமிருந்தும் சாவியோ கற்றுக்கொண்டார்.

குளிர்கொட்டும் அதிகாலையில் எழுந்து தந்தை வயலுக்குச் செல்ல, ஐந்து வயதுச் சிறுவனான மகன் டொமினிக் ஆலயம் செல்வார். ஆலயக் கதவு திறக்கப்படும் வரை வாசலில் குளிரில் நடுங்கிக் கொண்டிருப்பார்.

உரிய பருவத்தில் தகுந்த ஆயத்தத்துடன் புதுநன்மை உட்கொண்டார். இவரைக் குறித்துத் தாயும் பங்குக்குருவும் ஆலயத்தில் உரையாடிக் கொண்டிருக்கும் போது திடீரென அவர்கள் மத்தியில் வந்து நின்று, ''சுவாமி, இயேசுவைத் தந்த உங்களுக்கு நன்றி, இயேசுவும் மரியன்னையும் இனி என் பாதுகாவலர்கள். பாவத்தை விட சாவை ஏற்கிறேன் என்று இயேசுவிடம் தீர்மானம் கொடுத்தேன்'' என்றெல்லாம் கூற அவர்கள் மனம் மகிழ்ந்தனர்.

ஒரு சமயம் மதிய உணவு உண்ண மறுத்தார். காரணத்தை வினவியதும், மிருகங்களை விட கேவலமானவர்கள்போல செபம் செய்யாது உணவுண்பவர்களுடன் சேர்ந்து உணவு உண்ண எனக்கு விருப்பமில்லை என்றார்.

சகமாணவர்களுடன் ஒரு முறை குளிக்கச் சென்ற சாவியோ, தண்ணீர்போல சரளமாக கெட்ட வார்த்தைகளைப் பேசிய சகமாணவர்களைக் கண்டித்தார். அவர்கள், அவர் கூறியதைக் கேட்காமல் கதைத்தபோது இவர்களுடன் குளிக்காமல் கோபத்துடன் வீட்டுக்கு வந்து தாயிடம் தனது மனத்துயரை வெளிப்படுத்தினார். ''நீ ஒரு பாவமும் செய்யவில்லைத் தானே'' என்று தாய் அவரை ஆறுதல் படுத்தினாள்.

புனித பொஸ்கோவின் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படமுன் அவரைப் பரீட்சிப்பதற்காக மனனம் செய்து ஒப்புவிக்கும்படி கொடுக்கப்பட்ட பகுதியை அடி பிறழாமல் ஒப்புவித்து பொஸ்கோவின் பராட்டைப் பெற்றதோடு அவரது கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பொஸ்கோவின் கண்காணிப்பில் வந்தபின் **''தந்தையே என் ஆன்மாவைக் காத்து விரைவில் என்னைப் புனிதராக்குங்கள்''** என்று கேட்டுச் செபிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தில் வாழ்ந்த வேளையில் மரியன்னையின் புண்ணியங்களைப் பின்பற்ற அமல உற்பவக்குழு ஒன்றை மாணவர்களுக்கு ஏற்படுத்தி அதற்குரிய ஒழுங்குமுறைகளுக்கான அனுமதியையும் பொஸ்கோவிடம் பெற்றார். இக்குழு வழியாக, மரியாயின் பக்தி இன்றும் சலேசிய சபையில் வளர்ந்து கொண்டே வருகிறது.

அவருடைய இறுதி நாட்களில் அநேக தடவை பரவசக் காட்சிகள் அவருக்கு அருளப்பட்டன. ஒரு முறை தொடர்ந்து ஆறுமணிநேரம் நற்கருணைப் பேழைமுன் பரவசத்தில் மூழ்கினார்.

காது, நாக்கு, சிந்தனை போன்றவற்றை தன்னடக்கத்துக்குக் கொண்டு வாழ்வதே புனிதவழி என்று புனித பொஸ்கோ கூறியபடியும், அதற்குமேல் ஒறுத்தல்கள், விரதம், கடின உடல் உபாதைகள் இவற்றை மேற்கொண்டும் புனித நிலையை விரைவில் எட்டிப்பிடிக்க முயன்றார். மிதமிஞ்சிய ஒறுத்தல் வாழ்வினால் இவரை நோய் பற்றியது. வீட்டில் தங்கினால் ஆரோக்கியம் கிடைக்கும் என பொஸ்கோ இவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

ஒன்பது நாட்கள் படுக்கையில் இருந்தார். பாவ மன்னிப்புப் பெற்று நற்கருணையை உட்கொண்டார். **என் கால்கள் மரித்து எனக்கு மரண வேளையை நினைவுறுத்தும் போது இரக்கமுள்ள இயேசுவே என்மேல் இரங்கும்** என்ற செபம் வாசிக்கப்பட்டபோது, அச்செபத்தை அமைதியில் ஆழ்ந்து தன்மயமாக்கினார். 1857.03.09 அன்று தாய், தந்தை, கழகம் அனைவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

1954.03.05 அன்று திருத்தந்தை 12ஆம் பக்திநாதரால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

## இணைப்பு 3.3.4

## புனித அலோசியஸ் கொன்சாகா (ஞானப்பிரகாசியார்)

பெர்னான்ட், மார்த்தா என்ற அரச பரம்பரையினருக்கு வட இத்தாலியில் 1568.03.09 அன்று அலோசியஸ் கொன்சாகா மகனாகப் பிறந்தார் அவர் தாயிடம் பெற்ற பயிற்சியால் சிறுவயதிலிருந்தே அரச தோரணையை ஒதுக்கி கற்பு நெறியில் கருத்தாகவும் இறைபற்றுடையவராகவும் வாழத் தலைப்பட்டார். ஆனால் இவரது தந்தை தன்னைப்போல் மகனும் வீரமிக்க அரசனாக விளங்கவேண்டுமெனப் பெரிதும் விரும்பினார்.

இளவரசன் என்பதால் சில காலம் சிப்பாய்களுடன் தங்கிக் பயிற்சி பெற்றார். அத்துடன் கெட்ட வார்த்தைகளையும் தெரியாமல் கற்றுக் கொண்டார். தனது இருப்பிடமான காஸ்டிகிளியோனிக்குத் திரும்பி வந்து தான் சிப்பாய்களுடன் கற்றது கெட்ட வார்த்தைகள் என அறிந்து அதிக வேதனைப்பட்டார். தனது மாணவப் பராயத்தில் கருத்துடன் கற்பதிலும் ஏனைய மாணவர்களுக்கு உதவுதிலும் சிறந்து விளங்கினார். ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்தினார். கெட்ட மாணவர்களைப் பார்த்தும் பிறர் பாதிக்கப்படாமலிருக்க விழிப்புடன் இருந்தார். இவ்வாறு சகோதர மாணவர்களுக்கு காவலனாக இருந்தார்.

அலோசியஸ் தனது 10வது வயதில் மங்கள வார்த்தை மரியின் திருப்படத்தின் முன் நித்திய கன்னிமையில் வாழப் போவதாக வார்த்தைப்பாடு கொடுத்தார். 12 வயதானபோது தனக்குக் கிடைக்கவிருந்த குடும்பச் சொத்தினை தன் அண்ணனுக்குக் கொடுத்துவிட்டு காட்சித் தியான சபையில் சேர தீர்மாணித்தார். இவ்வுலக மகிமையைத் துரும்பாக மதித்ததால், ''இளவரசரே'' ''பெருமதிப்புக்குரியவர்களே'' என்று தன்னை யாரும் அழைப்பதைத் தடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நற்கருணை பெற்ற நாளிலிருந்து நற்கருணை பெற முன் உள்ள நேரத்தை தகுந்த ஆயத்தத்திற்கும், பின்னுள்ள நேரத்தை நன்றி செலுத்துவதற்கும் பயன்படுத்தினார்.

உலகத்தாரும் ஏன் துறவிகளுங்கூட அழைத்தலுக்கேற்ற வாழ்வு வாழாததை அறிந்து பரிகாரம் செய்யும் விருப்போடு இயேசு சபையில் சேர ஏற்பாடு செய்தார். தாய் அனுமதி கொடுத்தார். தந்தையோ கடுகாக வெடித்தார். தந்தையின் முயற்சி பயனின்றிப் போனது. 1588.08.15 அன்று உரோமிலுள்ள யேசு சபை நவத் துறவற இல்லத்தில் சேர்ந்தார். அங்கிருந்து ''அப்பா உங்களுக்குப் பணியக் கடமைப்பட்டவன் நான், கடவுள் என்னை சபைக்கு அழைக்கிறார். அதை நீங்கள் தடுத்தால் அவரையே எதிர்ப்பதற்கு ஒப்பாகுமல்லவா?" என்று தந்தைக்கு கருத்தாழமிக்க மடல் ஒன்று எழுதினார்.

சில நாட்களில் தந்தை இறந்து விட்டதாகச் செய்தி கிடைத்தது. தாய்க்கு ஆறுதலாக இரு மடல்கள் எழுதினார். தனது பயிற்சிக்காலங்களில் மருத்துவமனை சென்று நோயாளிகளைக் கழுவும் பணியைச் செய்தார். அப்போது **''மரியன்னை மடியில் வளர்த்தப்பட்ட இயேசுவையே கழுவித் துடைக்கிறேன்"** என்று சொல்வார்.

ஒரு சமயம் அவரது சகோதரன் அக்கால பிரபுக்களின் வழக்கப்படி ஹெலனா என்ற இளம் பெண்ணுடன் முறையற்ற விதத்தில் வாழ்ந்ததைக் கேள்வியுற்று ''நீ அவளைவிட்டு ஒழுக்கமாக வாழவில்லையெனில் என் உடன்பிறந்தவனாக இருக்க முடியாது. **''இறைவனது வலிய கரம் உன்னை தாக்காதிருக்க செபிக்கிறேன்; திருந்திவிடு"** என்று கண்டிப்புக் கடிதம் எழுதினார்.

குடும்பத்தில் சொத்துப் பிரித்தல் குறித்து இல்லம் சென்று திரும்பி வந்தபோது **''மரித்தோரை அடக்கம் செய்து விட்டேன். அவர்களைப் பற்றி திரும்ப நினைப்பதில்லை. மறு வாழ்வு பற்றியே இனி நினைக்க வேண்டும்.''** என்று கூறினார்.

இவர் இளமையிலே செப தபத்தில் இறைவனோடு ஒன்றித்திருந்தார். நிறை கற்பு என்னும் புண்ணியத்தைக் கண்மணி போல் காப்பதில் கருத்தாய் இருந்தார். நாள் முழுவதும் இறை பிரசன்னத்தில் தூய வாழ்வு நடாத்தினார். இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். ஏழைகளிடம் பரிவோடும் பணிவோடும் பழகுவார்.

1590/91 காலப்பகுதியில் கொள்ளை நோய், காய்ச்சல், பஞ்சம் பரவியது. 24 வயதுடைய இறையியல் மாணவரான அலோசியஸ் தாமே விரும்பி தலைவர்களின் அனுமதியுடன் பாதிக்கப்பட்டோருக்காக நன்கொடைகள் பெறல், ஆடைகள் சேகரித்தல், பிச்சை எடுத்தல் போன்ற பணிகளைச் செய்தார்.

1591.03.03 அன்று கொள்ளை நோய் காய்ச்சலுக்குள்ளான அலோசியஸ் ஏழு நாட்கள் நோயின் பிடியில் இருந்தார். ஒரு சகோதரர் மூலமாக தாய்க்கு எழுத வேண்டியதை கடித மூலம் எழுதினார். நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்தபின் ஜுன் 21இல் நற்கருணையைப் பெற்று நல் மரணம் அடைந்தார்.

1726.12.03 அன்று மாணவர்களின் பாதுகாவலராக இப்புனிதர் உயர்த்தப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 3.3.5**

## புனித மாறி யூப்ரேஷியா பெலமியர்

புனித யூப்ரேஷியா பிரான்சிலுள்ள நோவா முட்டியர் எனும் சிறிய தீவில் 1796ஆம் ஆண்டு யூலை மாதம் 31ஆம் திகதி பிறந்தார். இவர் நல்லாயன் கன்னியர் சபையின் ஸ்தாபகியாவார். இவரது தந்தை யூலியன் பெலமியர் எனும் வைத்தியராவார். பிரான்சியப் புரட்சியின் இறுதிக் காலகட்டத்தில் குருக்கள் அருகிய காலாமாயிருந்தமையால் தந்தையே யூப்ரேஷியாவுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்.

சிறுவயதில் இத்தீவிலே யூப்ரேஷியா விளையாடிக் கொண்டிருக்கும் போது ஆபிரிக்காவைச் சேர்ந்த கறுப்பு இனப் பெண்களை அடிமைகளாக விற்பதைக் கேள்விப்பட்டார். எப்போதாவது ஒரு நாள் இவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, அவர்களுக்குரிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென உறுதி பூண்டார்.

இறையன்பு நிறைந்த பக்தியான பெற்றோரினால் வளர்க்கப்பட்ட இவர் முதல் நன்மை பெறுவதற்கு முன் இவரது தந்தை இறந்தார். எனினும் முதல் நன்மை பெறுவதற்கான ஆயத்தங்களைத் தாயார் நன்முறையில் மேற்கொண்டார். நற்கருணை பெற்ற அன்றே இறைவனின் பணிக்காகத் தன்னை அர்ப்பணிப்பதாகத் தீர்மானம் எடுத்தார்.

பின்னர் உறுதிப்பூசுதலைப் பெற்ற தினத்தில் இறைவனின் குரலுக்கு நிரந்தரமாகப் பதிலளித்த இவர் ஒரு துறவற வாழ்க்கையை மேற்கொள்ளவதாகத் திட சங்கற்பம் கொண்டார்.

விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றமையால் தாயின் இறந்த உடலைக் கூட காணமுடியாமல் போயிற்று. விடுதியிலிருந்து வெளியேற நினைத்த போதிலும் ஆசிரியையின் அன்பாலும் வழிகாட்டலாலும் தைரியமடைந்து அங்கேயே தங்கியிருந்தார். (Our Lady of Refuge) அடைக்கல அன்னை துறவறசபையில் 1814 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி மாறி யுப்ரேஷியா எனும் பெயரில் துறவற வாழ்வில் இணைத்து கொண்டார். 1817 செப்டெம்பர் 09ஆம் திகதி முதலாவது வார்த்தைப்பாட்டை நிறைவேற்றினார்.

குற்றம் புரிந்து வழிதவறிய யுவதிகளையும் பெண்களையும் நல்வழிப்படுத்துவதும் அவர்களை இறைவன்பால் திருப்புவதுமே இத்துறவற சபையின் கடமையாகும். இத்துறவற சபையின் கடமைகளை அர்ப்பணிப்போடும் நிறைவேற்றினார். இதற்காக அவர்களோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கட்டியெழுப்பியதால் அவர்கள் மனமாற்றம் பெற்று துறவற வாழ்வில் இணைய அனுமதி கோரினார். இக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லதாத போதிலும் அவர் உயர் பதவியினை வகித்த போது இதனை நிறைவேற்றினார். மதலேன் சகோதரிகள் எனும் பெயரில் 1829இல் துறவற சபையை ஆரம்பித்தார். இது நல்லாயன் கன்னியர் சபையின் தியான சகோதரிகள் எனும் பெயரில் இன்று இயங்கி வருகிறது. இச் சபையினை உலகம் முழுவதும் பரப்புவதற்காக திருத்தந்தையின் அனுமதியைப் பெற்று 1835இல் பிரான்சில் ''ஆன்ஜே" எனும் நகரில் நல்லாயன் கன்னியர் சபை ஆரம்பிக்கப்பட்டது. 1868ஆம் ஆண்டு ஏப்ரல் 24அன்று அவர் இறக்கும் போது உலகம் முழுவதிலும் 110 துறவிகளின் மடங்கள் நிறுவப்பட்டிருந்தன.

நல்லாயனான இயேசுவைப் பின்பற்றியதோடு, அவருடைய மனப்பாங்குகளைத் தமதாக்கிக் கொண்டு உண்மையான நல்லாயன் பணியில் ஈடுபடத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். திருச்சபையில் பற்றுள்ள யுப்ரேஷியா ஆன்மாக்களை மீட்பதில் முன்மாதிரிகையோடும் அர்ப்பணிப்போடும், ஒளிமயமாகத் திகழ்ந்தமையால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். நல்லாயனின் ஆடுகளை அதிக அன்புடனும் ஆத்ம தாகத்தோடும் பராமரிக்க வேண்டும் என்னும் முன்மாதிரிகையான விருதுவாக்குக்கிணங்க ஒளிமயமான வார்த்தைப்பாடுகளையும் கொடுத்து வேகமாக மாற்றமடையும் உலகில் பிரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களிலும் நொறுங்குண்ட உள்ளங்களிலும் கிறிஸ்துவின் அமைதியையும், அன்பையும் பெற்றுக் கொடுக்கவும், அவர்களை ஊட்டம் பெறச் செய்யவும், சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவும். இளம் பெண்களுக்கு புனர்வாழ்வளிக்கவும், திருமணம் செய்யாத அன்னையருக்கு பாதுகாப்பையும் வழிகாட்டலையும், அனாதைச் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும், வயோதிபர்களை பராமரிப்பத்திற்கும், கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பங்கின் அபிவிருத்தி வேலைகளில் உதவி செய்யவும், மறைசார்ந்த அறிவுரை வழங்குவதற்குமாக பல்வேறு பணிகளில் தற்போதைய நல்லாயன் கன்னியர் சகோதரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

**இணைப்பு 3.3.6**

## குழந்தை இயேசுவின் புனித தெரேசா

பிரான்ஸ் நாட்டில் அலென்கன் என்னும் இடத்தில், லூயிஸ், செலி என்பவர்களுக்கு ஐந்தாவது பெண்குழந்தையாக பிறந்தவள் திரேசா. பெற்றோர் துறவற வாழ்வுக்கு முயற்சித்து தமக்குப் பலன் கிட்டாததால் தமது பிள்ளைகள் ஐவரையும் இறைபக்தியோடு வளர்த்து இறை பணிக்குத் தயார் செய்தனர். திரேசா நான்கு வயதாக இருக்கும் போது தன் தாயை இழந்தார். அதனைத் தொடர்ந்து லிசிசி என்ற நகரத்திற்கு குடும்பமாக இடம்பெயர்ந்தனர். அங்குள்ள ஆசீர்வாதப்பர் சபைப் பாடசாலையில் திரேசா தனது கல்வியை ஆரம்பித்தாள். அன்பையும் அரவணைப்பையும் தனது சகோதரிகளிடம் பெற்றுக் கொண்ட திரேசா ஆன்மீகம் தொடர்பான அறிவையும் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டாள். அதன்வழி இயேசுவின் அன்பைப் பெறவும் அவரை அன்பு செய்யவும் அவளுக்கு அதிக காலம் தேவைப்படவில்லை.

திரேசாவின் 9 வயதிலும் 14 வயதிலும் அவரது மூத்த சகோதரிகள் இருவரும் பயிற்சி பெறுவதற்காக துறவற மடத்திற்கு சென்றனர். சிறுவயதிலிருந்து தானும் துறவற சபையில் இணைந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தினால் தனது பதினைந்து வயதில் திருத்தந்தை 13ம் சிங்கராயரின் விஷேட அனுமதியுடன் கன்னியர் மடத்திற்குள் கால்பதித்தாள். இறைவன் மேல் கொண்ட விசுவாசமும், ஒழுக்கமுள்ள நடத்தையும் ஏனைய கன்னியர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது. பாவிகளை மனந்திருப்பி அவர்களை இறைவன்பால் அழைத்துச் செல்வது அவளின் குறிக்கோளாக இருந்தது. அதற்காக உபவாசம் இருந்து இறைவனை வேண்டுவாள். அவளது பக்தி முயற்சிகளை எவரும் அறிந்திருக்கவில்லை. உடல் சோர்ந்து நோயினால் பீடிக்கப்பட்டிருந்த போதும் பாவிகளின் மீட்புக்காக அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டாள்.

ஒன்பது வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அவளது துறவற வாழ்வு உண்மையாகவே இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வாக இருந்தது. தனது நோயின் வேதனை மத்தியிலும் அதனைப் பொருட்படுத்தாமல் புன்சிரிப்புடன் அதை மறக்க முயற்சிசெய்தாள். இறுதியாக தனது 24வது வயதில் 1897 செப்ரம்பர் 30 அன்று இறைவனடி சேர்ந்தாள். அவளது மரணத்தின் பின் சில வருடங்களுக்குள் அவள் புகழ் உலகெங்கும் பரவியது. புதுமைகளும் நடந்தன.

1924ம் ஆண்டு திரேசாவுக்கு புனிதைப்பட்டம் வழங்கப்பட்டது. தொடர்ந்து ஈராண்டுகளுக்குள்

**''அனைத்துலக மறைபரப்பாளர்களின் பாதுகாவலர்''** என அறிமுகப்படுத்தப்பட்டாள்.

இயேசுவின் சிறிய புஷ்பம் என அழைக்கப்படும் திரேசாவின் ஆன்மீக வாழ்வு, அவரது சுயசரிதை, அவரது வாழ்க்கை வரலாறு எமது வாழ்வுக்கு முன்மாதிரியாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | அன்பின் கட்டளைகளை தமது வாழ்வில் செயற்படுத்துவர். |
| தேர்ச்சிமட்டம் | 3.4 | : | கிறிஸ்தவ கண்ணோட்டத்திற்கமைய தமது சமூகத்தின் கட்மைகளை நிறைவேற்றுவர். |
| செயற்பாடு | 3.4 | : | கிறிஸ்தவ கண்ணோட்டத்திற்கமைய சமூகக் கடமைகளை நிறைவேற்றுவோம். |
| பாடவேளைகள் | | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடு -

- ❖ இன்றைய சமூக அநீதிகளைச் சுட்டிக் காட்டும் சுலோகங்கள்.
- ❖ கருதினால் தோமஸ் கூரே, அருட்பணி. பீற்றர் பிள்ளை. பேராயர் ஒஸ்கர் றொமேறோ, ஆயர் டெஸ்மன் டுட்டு, திரு. கொட்வின் மென்டிஸ் ஆகியோரது படங்கள்.
- ❖ அவர்கள் பணிகள் அடங்கிய நூல்கள்
- ❖ திருவிவிலியம்
- ❖ இணைப்புகள் 3.4.1, 3.4.2, 3.4.3, 3.4.4, 3.4.5, 3.4.6

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.4.1**

- ✸ சமூக அநீதிகள் தொடர்பான சுலோகங்களைக் காண்பித்து அவை தொடர்பாகக் கலந்துரையாடி, இத்தகைய சமூக அநீதிகளைக் களைந்து மனுக்குலத்தை மீட்கவே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். இயேசுவின் மீட்புப்பணியை தொடர்ந்து அர்ப்பணிப்போடு மேற்கொண்ட சிலரது பணிகளை வெளிக் கொணரும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- ✸ பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரை யாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்

> - ♦ எமது சமூகத்தில் வன்முறைகளும் அடக்கு முறைகளும் இன, மத, மொழி வேறுபாடுகளும் காணப்படுவதை நாம் கண்டுணர முடியும்.
> - ♦ எமது சமூகத்தில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் எல்லாச் சமூகங்கள் மத்தியிலும் இத்த கைய பிளவுகள், பிரச்சனைகள், காணப்படு வதை அவதானிக்க முடிகிறது.
> - ♦ இன, மத, மொழி, நிற பேதங்கள், பொருளா தார ரீதியான ஏற்றத் தாழ்வுகள் சமூகத்தில் வன்முறைகளாக உருவெடுத்துள்ளன.
> - ♦ இவ்வாறான சூழ்நிலைகளின் மத்தியில் கிறிஸ்தவத் தலைவர்கள் சிலர் சமூகத்தில் தோன்றிய பேதங்கள் பிளவுகள், அடிமைத்தனங் களை நீக்க தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றி யுள்ளனர்.

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.4.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 3.4.1 ீலுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 3.4.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள். அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- ♦ இலங்கையின் முதலாவது பேராயரும் முதலாவது கருதினாலுமாக **தோமஸ் கூறே** நியமிக்கப்பட்டார்.
- ♦ சுதேச குருக்களையும் துறவிகளையும் உருவாக்குவதில் அரும்பணியாற்றினார்.
- ♦ பாவிகளை இரக்கத்துடன் அரவணைத்து வழிநடத்தினார்.
- ♦ மக்களின் ஆன்மீக வாழ்வில் அக்கறை கொண்ட இவரது பணிகள் கல்வி, மறைக்கல்வி, சமூகம் என்று பரந்து காணப்பட்டன.
- ♦ சிறந்த கிறிஸ்தவப் பின்னணியில் உதித்த **அருட்பணி. பீற்றர் பிள்ளை,** கல்வியை மேலோங்கி பொதுநலவாய நாடுகளிலே மிகச் சிறந்த பேரறிஞரான துறவி என்ற புகழுடன் வாழ்ந்தார்.
- ♦ தாம் பெற்ற பயனை அனைவரும் பெற வேண்டும் என்ற பேரவாவினால் தாய் நாட்டின் உயர் கல்வி வளர்ச்சிக்காக அக்குவினாஸ் கல்லூரியை நிறுவிய பெருமைக்குரியவர்.
- ♦ சமூக அநீதிகளை வன்மையாகக் கண்டித்த இவர், சமூகநீதி என்ற வெளியீட்டின் ஆசிரியராக இருந்ததோடு சமூக சேவை ஆணைக்குழு, கல்விச் சேவை ஆணைக் குழு என்பவற்றில் பதவிவகித்து அரிய ஆலோசனைகளை வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்சல்வடோர் நாட்டின் அதி உயர் பேராயராக இருந்த **ஒஸ்கர் றோமேறோ,** சமூக நீதிகளை முன்னெடுத்து மனித உரிமைகளுக்குக் குரல் கொடுத்த உத்தமராவார்.
- மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டால் சமூக நீதியையும் சுதந்திரத்தையும் வென்றெடுக்க முடியும் என்பதில் உறுதியுடன் செயற்பட்டார்.
- உலக மக்களை விடுவிக்கும் அருட்சாதனமாக திருச்சபை செயற்பட வேண்டும் என்பது இவரது அவா.
- திருமுழுக்கு யோவானைப் போல் அஞ்சா நெஞ்சத்துடன் ஆயுதப் படையினரின் துன்புறுத்தல்களை வண்மையாகக் கண்டித்தார்.
- நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் அவாவினால் தனது உயிரையும் இழக்கத் தயாரானார்.
- நிற ரீதியான பேதமையில் ஏற்பட்ட சமூக அடிமைத்தனத்துக்காக குரல் கொடுத்தவர் அங்கிலிக்கன் **ஆயர் டெஸ்மன் டுட்டு.**
- அனைவரும் சுதந்ததிரமாக வாழ்வதே கடவுளின் விருப்பம் என்றும் அகிம்சை வழியில் சமூக நீதியை நிலைநாட்ட முடியும் என்றும் மாணவர்களுக்குக் கற்பித்தார்.
- பொது நிலையாளராக வாழ்ந்த திரு. **கொட்வின் மென்டிஸ்** மக்களின் ஆன்மீக, சமூக நலப் பணிகளில் அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார்.
- மன அழுத்தம், மனத்தகராறு கொண்ட இல்லற துறவறத்தோருக்கு மனோதத்துவ அறிவுரைகளை வழங்கி நல்வழிப்படுத்தினார்.
- மரியாயின் சேனையின் ஆரம்பப் பணிகளிலும் ஈடுபட்டு இலங்கையின் தேசியத் தலைவராகவும் செயற்பட்டார்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- கருதினால் தோமஸ் கூறே ஆற்றிய பணிகளைத் தொகுத்து ஒப்படை ஒன்று தயாரிப்பர்.
- அருட்பணி. பீற்றர் பிள்ளை அடிகளார் மேற்கொண்ட பணிகளை விபரித்து உமது மறைமாவட்ட சஞ்சிகைக்கு ஆக்கம் ஒன்று எழுதுவர்.
- பேராயர் ஒஸ்கார் றொமேறோ தமது பணியை மேற்கொண்ட முறையையும் அவர் எதிர் கொண்ட சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றை வெற்றி கொண்ட வழிகளையும் தொகுத்து கட்டுரை ஒன்று எழுதுவர்.
- அங்கிலிக்கன் ஆயர் டெஸ்மன் டுட்டு மேற்கொண்ட பணிகளையும், அதன் மூலம் இன்றைய சமூகம் கற்றுக்கொள்ளும் படிப்பினைகளையும் குறிப்பிட்டு விளக்குவர்.
- பொது நிலையாளராகிய திரு. கொட்வின் மென்டிஸ் மேற்கொண்ட சமூக நலப் பணிகள் தொடர்பான படங்களைச் சேகரித்து சுவரொட்டி ஒன்று தயாரிப்பர்.

### இணைப்பு 3.4.1

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவங்களை நன்றாக வாசியுங்கள்.
- அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்தைக் குறித்துக்கொள்ளுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : கருதினால் தோமஸ் கூறே ஆற்றிய பணிகளைத் தொகுத்து ஒப்படை ஒன்று தயாரியுங்கள்.

குழு - 2 : அருட்பணி. பீற்றர் பிள்ளை அடிகளாரின் பணி வாழ்வு மூலம் மாணவர்களாகிய நீங்கள் பின்பற்றக்கூடிய படிப்பினைகளைத் தொகுத்து வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

குழு - 3 : பேராயர் ஒஸ்கார் றொமேறோ விளக்கிய திருச்சபையின் பணியின் அடிப்படையில் இன்றைய உலகில் எமது திருச்சபையால் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளை முன்வைப்புச் செய்யுங்கள்.

குழு - 4 : இன்றைய சமூகம் எதிர்கொள்ளும் சமூக அநீதிகளைக் குறிப்பிட்டு ஆயர் டெஸ்மன் டுட்டு காட்டிய வழிகளில் எவ்வாறு செயற்பட வேண்டும்? உங்கள் கருத்துக்களைத் தொகுத்து வெளியிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 3.4.2

### அதி வண. கருதினால் தோமஸ் கூரே

1901.12.28 அன்று நீர்கொழும்பு பெரியமுல்லைப் பங்கில் தோமஸ் பெஞ்சமின் கூறே என்ற பெயரில் பிறந்தார். தளுப்பொத்த றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்ற இவர் 1913இல் பொரல்லை புனித அலோசியஸ் குருமடத்தில் சேர்ந்தார். அங்கிருந்து மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் இடைநிலைக்கல்வியைக் கற்ற தோமஸ் அமல மரித்தியாகிகள் துறவற சபையில் இணைந்து உரோமாபுரியில் உயர் கல்வியைக் கற்றார்.

1928.01.25 அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இறையியல் கல்வியைக் கற்று இரு பட்டபடிப்புகளையும் மேற்கொண்டார். பின் நாடு திரும்பி மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் உயர் பதவி வகித்ததோடு திருச்சபையில் பல பதவிகளையும் ஏற்று நிர்வகித்தார். 1946.03.04 அன்று கொழும்பு மறைமாவட்ட துணை ஆயராக நியமனம் பெற்ற இவர் 1947 ஆடித் திங்கள் 28ல் இலங்கைப் பேராயராக நியமனம் பெற்றார்.

பேராயர் அவர்கள் இம் மறைமாவட்டத்தில் தமது மறைத்தூதுப் பணியை மிகச் சரியாக வழிகாட்டி இலகுவான முறையில் செயற்படுத்தினார். குருமடங்கள், துறவற சபைகளையும் பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்து, அதன் மூலம் ஏழைகளுக்கு உதவ பல்வேறு செயல் முறைகளைக் கையாண்டார்.

மறைமாவட்டத்தில் குருத்துவ பயிற்சியை மட்டுமன்று பங்குகளைத் தரிசித்தல், கல்வி அறிவை வளர்த்தல் போன்றவற்றிலும் தனது கவனத்தைச் செலுத்தினார். இலங்கை மக்களுக்கு மட்டுமல்ல உலகரீதியாக பல பதவிகளை ஏற்று மக்களுக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவர் ஆற்றிய சேவையின் நிமித்தம் அப்போது இருந்த திருந்தந்தை 6வது சின்னப்பர் 1965.02.25 அன்று இவரை கருதினால் பதவிக்கு உயர்த்தினார். நீண்ட காலம் சேவையாற்றிய இவர் 87வது வயதில் 1988.10.29 அன்று இறைவனடி சேர்ந்தார். கொழும்பு மறை மாவட்டத்தின் நிகழ்கால வளர்ச்சிக்கு துணை செய்தவரும் அதன் வழியாக இறை மகிமையை வெளிப்படுத்தவும் அவர் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது.

தேவத்தையில் அமைந்துள்ள பெசிலிக்காவும் அவர் எடுத்த முயற்சியே, அவரின் நல்லடக்கமும் அவ்வாலயத்திலேயே நடைபெற்றது. பரிசுத்த திருச்சபைக்கு புதிய கொள்ளைகளை முன்வைத்து முன்மாதிரியாக வீரத்துடன் செயற்பட்ட இவரை நினைவுகூர்ந்து இறை மகிமையை வேண்டுகின்றோம்.

## இணைப்பு 3.4.3

### பேராயர் ஒஸ்கார் றொமேறோ (Oscar Romero)

மத்திய அமெரிக்காவிலுள்ள எல் சல்வடோர் நாட்டில் 1917.08.15 அன்று ஒஸ்கார் றொமேறோ பிறந்தார். ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து குருத்துவக் கல்வியை முடித்தபின் 1942.04.04ல் உரோமையில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். எல் சல்வடோருக்குத் திரும்பி அருட்பணியாற்றிய ஒஸ்கார் 1970 மே மாதம் சான் சல்வடோரின் துணை பேராயராக்கப்பட்டார். 1977.02.22 அன்று சான் சல்வடோரின் பேராயர் ஆக்கப்பட்டார். (Archbishop)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொமேறோ ஆழ்ந்த பற்றுதியுடைய அன்பு நிறைந்த ஆயர். உறுதியான சுய கட்டுப்பாட்டு ஒழுங்கை கடைப்பிடித்த ஒருவர். ஏழையாக ஒரு கிராமப் பின்னணியில் வளர்ந்தவரென்பதால் தாழ்மையானவராகவும் உணர்வுகளைப் புரிந்து கொள்பவராகவும் வாழ்ந்தார். இரண்டாம் வத்தின்கான் சங்க சிந்தனைகளோடு மக்களுக்கான ஒரு நல்ல ஆயராக செயற்பட்டார். நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டமைந்த அவரது ஞாயிறு அருளுரைகள் சமூக அநீதிகள் மீதான கண்டனங்களாகின. திருச்சபையை மனமாற்றத்துக்காக அழைத்தது மட்டுமல்ல, உண்மை, நேர்மை, ஆழ்சிந்தனை என்பவற்றைக் கடைப்பிடித்து மனமாற்றத்தின் பாதையில் அவரும் பயணித்தார். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதே இவர் பணியில் முக்கியத்துவம் பெற்றது.

ஒஸ்காரின் நெருங்கிய நண்பரான இயேசு சபைக் குரு றுடிலியோ கிராண்டியின் கொலை அவரது வாழ்வில் பாரியதொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இறையாட்சிக்கெதிரானவற்றைக் கண்டித்து இறையாட்சிக்காக வாழ்ந்து உறுதியுடன் அதனை அறிவித்தார்.

19ம் நூற்றாண்டில் இராணுவ ஆட்சியினால் எல் சல்வடோர் மக்கள் ஒடுக்கப்பட்டனர். வறுமையினால் இன்னலப்பட்டனர். அந்நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் ஆறு குடும்பங்களின் கைகளில் இருந்தது. இத்தகைய சமூக பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் மக்களின் குரலுக்கு செவிமடுத்து, ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்காக செபித்து தீர்மானங்களை எடுத்து ஒரு ஆயராக ஒஸ்கார் செயற்பட்டார்.

பேராயர் ஒஸ்காரின் ஆன்மீக வாழ்வு தூய்மையான மனப்பாங்கு, திருச்சபையுடனான இணைப்பு என்பன அவரை புனிதமாக்கின. இவர் துன்புறும் சல்வடோர் மக்களுடன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். ஒவ்வொரு மனித இதயங்களின் மாற்றமே திருச்சபையின் அழைப்பு என நம்பினார். ஒடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் நீதியையும் அன்பையும் காட்டுவதே இறையாட்சி அறிவிப்பு என ஆயர் கடிதத்தில் வலியுறுத்தினார். திருச்சபை உலகின் விடுதலையின் திருவருட் சாதனமாக மாற வேண்டும் என வலியுறுத்தினார். ஆயர் அவர்கள் அந்த நாட்டு மக்களிடம் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்கள் தம்மை ஒரு அமைப்பாக்கி சமூக நீதியையும் சுதந்திரத்தையும் பெறமுடியும் என நம்பினார். ''மக்கள் சக்தி'' இவரால் வலியுறுத்தப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன்னை இழக்கத் தயாரானார்.

இவருடைய அர்ப்பணிப்பின் ஆழத்தை பின்வரும் வரிகள் உறுதி செய்கின்றன.

**''ஒரு பேராயராக என் வாழ்வை சல்வடோர் மக்களுக்காக கொடுக்கத் தயார். என்னை கொல்ல இருக்கிறவர்களுக்காகவும் கூட என்னைக் கொடுக்கத் தயார். எனது இரத்தத்தை எல் சல்வடோரின் விடுதலைக்காகவும் உயிர்ப்புக்காகவும் கடவுளுக்குப் படைக்கிறேன். எனது இரத்தம் சுதந்திரத்தின் வித்தாகட்டும். கடவுள் ஏற்றுக்கொண்டால் என் சாவு என் மக்களின் விடுதலைக்கான எதிர்கால நம்பிக்கையாகட்டும். ஒரு பேராயர் சாகலாம். ஆனால் இறைவனின் திருச்சபை ஒரு நாளும் அழியாது.''**

பேராயர் அவர்கள் 1980.03.24 அன்று திருப்பலி நடத்திக் கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்டார். இறுதி வேளையிலும் ஒடுக்குமுறைகளை நிறுத்தும்படி இராணுவத்திடம் பல முறை கேட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடவளின் திருப்பெயரால் விண்ணையெட்டும் புலம்பல்களுடன் வாழும் துன்புறும் மக்களின் திருப்பெயரால் உங்களிடம் இரந்து நிற்கிறேன். கெஞ்சுகிறேன். அடக்கு முறைகளை நிறுத்தும்படி கடவுளின் பெயரால் ஆணையிடுகிறேன்'' என்று கேட்டிருந்தார்.

பயமுறுத்தல், எச்சரிக்கை, மிரட்டல் போன்றவற்றுக்கு மத்தியில் வாழ்ந்த பேராயர் ரொமேறோ சாவைக் கடந்து மக்களுடன் வாழ்ந்தார் என்பதை அவருடைய பின்வரும் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன.

''ஒரு கிறிஸ்தவனாக, உயிர்ப்பற்ற சாவை நான் நம்பவில்லை. நான் கொலை செய்யப்பட்டால் சல்வடோர் மக்களில் எழுவேன். இதனைப் பெருமையுடனல்ல, தாழ்மையுடன் கூறுகிறேன்''

அவரது இறுதி அருளுரையிலிருந்து சில வரிகள்:-

மனம் மாறி இறைவனிடம் திரும்புங்கள் நான். ஒரு பாலைவனக்குரல். உடலைவிட்டு என் உயிர்மூச்சுப் பிரியும் வரை திருமுழுக்கு யோவான் போல குரல் எழுப்பிக் கொண்டே இருப்பேன். ஒழுக்கப்பட்டோருக்கும் ஏழைகளுக்குமாக வாழும் வாழ்வு எனக்குத் தரப்பட்டுள்ளது. இறைவன் விரும்பும்போது இதனைத் திரும்பவும் எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பைத்தியக் காரத்தனமான பகைமையை விட்டுவிடும்படி மேட்டிமையான ஆட்சியைப் புரியும் சகோதரர்களிடம் விண்ணப்பிக்கிறேன். கொடூரமாக துன்புறுத்துவதை நிறுத்தும்படி உங்களிடம் கெஞ்சுகிறேன். ஆயுதப்படை சகோதர்களே, அழிவிலும் இரத்த வெறியிலும் உங்களுக்குள்ள இந்த அறிவற்ற மோகத்தை விட்டுவிடும்படி நான் கடவுளின் பெயரால் உங்களிடம் விண்ணப்பிக்கிறேன், கெஞ்சுகிறேன், கட்டளையிடுகிறேன்.''

**இணைப்பு 3.4.4**

## அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன் டுட்டு

டெஸ்மன் டுட்டு 1931.10.07 அன்று சக்கரியா, அலிட்டா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். தென்னாபிரிக்காவில் ட்ரான்ஸ்வால் நகரின் கிளர்க்டோர்ப் எனுமிடத்தில் வாழ்ந்தனர். வெள்ளை இனச் சிறுவர்கள் போல் கறுப்பினச் சிறுவர்கள் கல்வி கற்கும் சூழல் இருக்கவில்லை. டெஸ்மன் 12 வயதாக இருந்தபோது தனது பெற்றோருடன் ஜொகன்ஸ்பேர்க் என்னும் இடத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. தந்தை ஆசிரியராகக் கடமையாற்றினார். தாயார் பார்வையற்றோருக்கான ஒரு பாடசாலையில் சமையலாளராகப் பணி புரிந்தார்.

கறுப்பினத்தவர்கள் வாழும் ஜொகன்ஸ்பேர்க்கில் ஒரு வெள்ளை இன அங்கிலிக்கன் குரு தனது தொப்பியைக் கழற்றி தனது தாயாருக்கு வணக்கம் செலுத்திய நிகழ்ச்சி இவரிடமிருந்த தாழ்வுச் சிக்கலைக் களைந்தது. சிறந்த ஞாபகசக்தியை கொண்டிருந்த டுட்டு பாடசாலைக் கல்வியில் சிறந்து விளங்கினார். தந்தையைப் போல் தானும் ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்னும் ஆசையினால் குறுஜர்டோர்ப் உயிர் கல்லூரியில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். 1955இல் லீயா என்பவரை திருமணம் செய்து பிரபல்யமான ஆசிரியராகப் பணி புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957இல் அரசு கறுப்பினத்தவரின் கல்வி வாழ்வைச் சீரழிக்கத் தொடங்கியது. வெள்ளையருக்கு மட்டும் நன்கு கற்க வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டதோடு **கறுப்பினத்தவர்கள்** விவசாயம், கைவேலை முதலியவற்றை மட்டும் கற்பதற்கு சட்ட அந்தஸ்து கிடைத்தது. இந்தச்சட்டத்தைக் கடைப்பிடிக்காத ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர். துன்புற்றோரை கவனிப்பதில் டெஸ்மன் இறைபற்றுறுதியுடன் ஈடுபட்டார்.

1961இல் அங்கிலிக்கன் சபையின் குருத்துவப் பணிக்காக அருட்பொழிவு செய்யப்பட்டார். 1962இல் தென்னாபிரிக்காவிலிருந்து இங்கிலாந்து சென்று இலண்டன் கிங்ஸ் கல்லூரியில் கற்றார். பல சபைகளில் பணியாற்றினார். 1967இல் தாயகம் திரும்பிய டெஸ்மன் குருத்துவ இறையியல் கல்லூரியிலும், லெசோதா தேசிய பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார்.

கறுப்பு வெள்ளை என்ற நிறபேதமின்றி அனைவரும் நண்பர்களாக வாழும் காலம் விரைவில் வரவேண்டும் என்பதற்காய் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நல்ல தலைமைத்துவத்தை வழங்கினார். ஒடுக்கப்படும் கறுப்பினத்தவர்கள் தமது அனுபவங்களின் மத்தியில் எவ்வாறு கிறிஸ்தவ போதனைகளை நோக்க வேண்டும் என்பதில் தமது சிந்தனைகளை முன்வைத்தார். வெள்ளையர் கறுப்பர் என்ற அநீதிகள் நீங்கி சமத்துவத்துடன் சுதந்திரமாக வாழ்வதே கடவுளின் விருப்பம். எனவே இயேசுவின் சிந்தனைகளின் அடிப்படையில் அகிம்சைப் போராட்டத்தின் வழியாக நல் மாற்றங்களை ஏற்படுத்த உழைப்பதே கிறிஸ்தவ பார்வையில் மனுக்குலத்தின் பொறுப்பு என உறுதியுடன் நம்பினார்.

1972இல் உலக திருச்சபை மன்ற தொடர்புடன் பணியாற்ற இங்கிலாந்து சென்றார். ஜொகன்ஸ்பேர்க் பேராலய பொறுப்பாளரானார். இத்தகைய தமைத்துவத்தை ஏற்று வழிநடத்தும் முதல் கறுப்பின குரு இவராவர். பல்வேறு சவால்களை எதிர்கொண்டு நாடுதிரும்பிய அருட்பணி. டெஸ்மன் வழிபாட்டில் பல மாற்றங்களைக் கொணர்ந்தார். திறந்த மனதுடன் இவர் முன்வைத்த கை குலுக்குதல், முத்தமிடல், கட்டியணைத்தல் போன்ற அன்புமையச் செயல்கள் பலரைக் கவர்ந்தன. பெண்குருத்துவத்தை அங்கீகரித்தார். ஆணாதிக்கத்தை தகர்த்தெறிந்தார். மன்றாட்டுக்கும் வழிபாட்டுக்கும் நாளாந்த வாழ்வில் முக்கியத்துவம் அளித்தார்.

1976இல் லெசோதாவின் பேராயரான டெஸ்மன் தென்னாபிரிக்க கிறிஸ்தவ மன்ற செயலாளருமானார். கறுப்பின மக்களின் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடினார். அகிம்சை ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக 1984 ஒக்டோபர் 16 அன்று நோபல் பரிசு பெற்றார். 1986இல் கேப் ரவுணில் பேராயராக்கப்பட்டார். மேலும் பல சவால்களைச் சந்தித்தும் அகிம்சை வழியில் போராடினார். தென்னாபிரிக்க தலைமைத்துவத்திலும் மாற்றம் ஏற்பட நெல்சன் மண்டேலா விடுதலை பெற்றார். 1993இல் வெள்ளையரின் ஆட்சியும் முடிவுக்கு வந்தது. நெல்சன் மண்டேலாவின் தலைமைத்துவத்தில் இனச் சமத்துவத்திற்கும் அமைதிக்குமான சட்டம் கொண்டுவரப்பட்டது.

உண்மைக்கும் ஒப்புரவுக்குமான ஆணைக்குழுவின் ஊடாக அமைதியும் நல்லுறவும் ஏற்பட பேராயர் டெஸ்மன் டூட்டு அரும்பணியாற்றினார். இவரது மனித உரிமைகளுக்கான பணி உலகளாவிய ரீதியில் தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 3.4.5

## அருட்தந்தை பீற்றர்பிள்ளை

1904.08.19 அன்று சிலாபம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த வென்னப்புவப் பங்கின் உல்ஹிடியாவ கிராமத்தில் யாக்கோபு, அனா பிள்ளை தம்பதியினரின் ஆறாவது புதல்வனாக பீற்றர் அல்கன்றோ பிறந்தார். இவரது பெற்றோர் யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்கள். தந்தையார் வென்னப்புவ றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடைமையாற்றியதால் அவர்கள் இப் பிரதேசத்தில் தங்கியிருந்தார்கள். யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் பணிபுரிந்த ஆயர் அதி. வண. எமிலியானுஸ்பிள்ளை, அருட்தந்தை ஜோசப் கைதான்பிள்ளை, அருட்சகோதரர் கிறகரி ஆகியோர் இவரது மூத்த சகோதரர்கள் ஆவர்.

வென்னப்புவ றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், கொழும்பு கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் இடை நிலைக் கல்வியையும் கற்ற பீற்றர்பிள்ளை தனது பதின்நான்காவது வயதில் கேம்பிறிஜ் கனிஷ்ட பரீட்சையிலும் பதினாறாவது வயதில் கேம்பிறிஜ் சிரேஷ்ட பரிட்சையிலும் திறமையாகச் சித்தியடைந்து, ஐக்கிய இராட்சிய நாடுகள் அனைத்திலும் கணித பிரிவில் மிகத் திறமையாகச் சித்திபெற்று பட்டங்கள் பல பெற்றார். இதனால் உலகம் முழுவதும் புகழ் பெற்றவராக இருந்தார்.

உலகம் முழுவதும் அவரின் மேன்மையை எடுத்தக்காட்டிய இவர் உயர்பதவியையும் அதிக வேதனத்தையும் பெற்று சுகபோகத்துடன் வாழ்வார் என அநேகமானோர் எதிர்பார்திருக்கலாம். ஆனால் இறைவனின் குரலுக்குச் செவிமடுத்த பீற்றர் பிள்ளை உலக வாழ்வையும் செல்வத்தையும் உதறித்தள்ளிவிட்டு 1928 ஆனித் திங்கள் பெல்ஜியாவில் அமல மரித்தியாகிகள் குருமடத்திற்குச் சென்றார். அங்கு இரண்டு பட்டப்படிப்புக்களையும் பத்து மொழிகளைப் பேசும் ஆற்றலையும் பெற்று 1936 ஆடித்திங்கள் 7ஆம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

துறவறப் பணிக்காக தாய்நாடு திரும்பிய இவர், இலங்கைத் திருச்சபையின் புதிய வளர்ச்சிக்காக பல்வேறு சபைகள், சங்கங்களை ஆரம்பித்து சேவையாற்றினார். 1940இல் மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் பணிப்பாளராக 21 வருடங்கள் மிகச் சிறந்த முறையில் பணிபுரிந்தார். உயர்கல்வியின் தாகத்திற்காக பொரல்லையில் அக்குவையினாஸ் உயர் கல்வி நிறுவனத்தை நிறுவினார்.

இலங்கை முழுவதும் இராஜதந்திர அரசியல் பிரிவில் மாத்திரமல்ல, கிறிஸ்தவர், கிறிஸ்தவரல்லாத அனைவரினதும் பெயருக்கும் புகழுக்கும் பாத்திரமானார். பேரறிவும் ஆற்றலும் நிறைந்த சேவையால் மட்டுமல்ல இவரிடம் காணப்பட்ட எளிமை, அமைதி, ஏற்றுக்கொள்ளல் போன்ற சிறந்த பண்புகளாலும் பாராட்டுக்களைப் பெற்றார். இலங்கையர் என்ற வகையில் திருச்சபைக்கு மட்டுமல்ல முழு உலகினதும் புகழைப் பெற்ற அருட்பணி. பீற்றர் பிள்ளை அடிகள் தமது அறுபதாவது வயதில் 1964.09.27 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அனைவருக்கும் நன்மை செய்வதே இறைத்திட்டம் என்பதை உணர்ந்த இவர் அறிவாற்றலோடும் சிறந்த குறிக்கோளோடும் திட்டமிட்டு ஆரம்பித்ததை நிகழ்காலம் எதிர்காலம் வரையும் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது. இதனால் இவரது அறிவு எவ்வித பேதமுமின்றி எந்நாளும் பணிபுரிய அனைவரினதும் மதிப்பைப் பெற்ற அழியாத நாமமாகத் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 3.4.6

## திரு. கொட்வின் மெண்டிஸ்

கொட்வின் மெண்டிஸ் அவர்கள் ஜோண் மெண்டிஸ், யூஜினியா மெண்டிஸ் தம்பதிகளின் மூத்த புதல்வராக 1928 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி கந்தானையைச் சேர்ந்த நாகொட எனும் ஊரில் பிறந்தார். இவர் கந்தானை டீ மெசனட் கல்லூரியில் கல்வி கற்றார். தாயின் கருப்பையிலிருக்கும் போதே பொதுநிலைத் தலைமைத்துவத்துக்காக இறைவன் இவரைத் தேர்ந்தெடுத்தார். அக்காலத்துக்குரிய உண்மையான இறைவாக்கினராகத் திகழ்ந்தார். சமூகத்தில் ஆன்மீகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், கைவிடப்பட்டோருக்கும் துன்புறுவோருக்கும் பணியாற்ற முற்பட்டார்.

மரியாயின் சேனையின் ஸ்தாபனரான பிராங்க் டக்றி என்பவரை அயர்லாந்து நாட்டில் சந்தித்ததன் பயனாக மறைமாவட்டங்கள், பங்குகள் அனைத்திலும் மரியாயின் சேனையை உருவாக்குவதில் அரும்பாடுபட்டார். இலங்கையில் பிராங்க் டக்றி எனும் பெயரைச் சூடிக் கொண்ட இவர் ஆற்றிய முக்கிய பணிகளில் மரியாயின் சேனைக்கு மிக உயர்ந்த இடத்தைக் கொடுத்தார். இலங்கையில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தனது வாலிப வயதில் இவர் மரியாயின் சேனையில் இணைந்து கொண்டார்.

செடெக் நிறுவனத்தின் உதவியோடு மகுல் பொக்குன எனும் கிராமத்தில் 100 வீடுகளை நிர்மாணித்தார். மரியாயின் சேனையின் 25வது ஆண்டு ஞாபகார்த்தமாக அனாதைச் சிறுவர்களின் பராமரிப்புக்கும், கல்விக்குமாக மட்டக்குளியில் ''மவ்செவன'' எனும் பெயரில் ஓர் இல்லத்தை ஆரம்பிப்பதற்காக இவர் முதன்மை வகித்தார்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் இலங்கையின் பொதுநிலையினரின் தலைவராகப் பங்கு பற்றும் பாக்கியம் இவருக்கே கிடைக்கப்பெற்றது. அங்கு முக்கிய விடயமாக நவீன சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடலில் பங்கேற்றார். பின்னர் 1972இல் அருட்பணி. கலாநிதி மேவின் பர்ணாந்து அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட பிரிந்து சிதறி வாழ்ந்த குடும்பங்களின் ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்பும் குடும்ப நலப்பணி நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றினார். தபால் திணைக்களத்தில் பணிபுரிந்த இவர் தமது 49வது வயதில் ஓய்வுபெற்றார். சுமார் 20 வருட காலம் குடும்ப நலப்பணி நிறுவனத்தில் பணியாற்றினார். தனது குடும்பத்தையும் ஏனைய குடும்பங்களையும் மென்மேலும் கட்டியெழுப்புவதோடு, இந்நிறுவனத்தின் பணியை மேலும் விரிவுபடுத்தினார்.

1974இல் அனைத்துலக குடும்ப அமைப்பிலும் 1976இல் குடும்ப வாழ்வின் ஊட்டத்திற்கான அனைத்துலக சம்மேளனத்திலும் கலந்து கொண்டார். 1978இல் ஆசிய அமைப்பில் அங்கத்துவமும் பெற்றார். இவர் மிகவும் அன்னியோன்னியமான முறையில் தனது பணியை ஊட்டம் பெறச் செய்தார். காலத்தின் தேவைக்கேற்ப பாடசாலை, வீடு, குடும்பங்களுக்கிடையிலான தொடர்புகள் என்பனவற்றைக் கட்டியெழுப்புவதற்காகப் பல்வேறு கருத்தரங்குகளையும் நடத்தினார்.

இவர் ஒரு சிந்தனையாளராக, ஆய்வாளராக, படைப்பாளராக, ஆலோசகராக, விரிவுரையாளராக, எழுத்தாளராக, மொழிப்பெயர்ப்பாளராக திகழ்ந்தார். இறைவன் அவருக்குக் கொடுத்த ஆற்றல்களை இறைவனின் பணிக்காக உச்ச நிலையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தமது வாழ்வில் அதி உயர் பயனைப் பெற்று 1991ஆம் ஆண்டு பங்குனி மாதம் 7ஆம் நாள் தமது 71வது வயதில் இறைபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 3.0 : அன்பின் கட்டளைகளை தமது வாழ்வில் செயற்படுத்துவர்.

தேர்ச்சிமட்டம் 3.5 : சமூக சவால்களை எதிர் நோக்குவதன் வழியாக உண்மைக்கு சான்று பகர்ந்து வாழ்வோம்.

செயற்பாடு 3.5 : கிறிஸ்தவ கண்ணோட்டத்திற்கமைய சமூகக் கடமைகளை நிறைவேற்றுவோம்.

பாடவேளைகள் : 120 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு

- ❖ திருவிவிலியம் யோவா. 8:31-32, 14:16-17a, 16:13, யோவா. 18:37 ஆகிய திருவிவிலிய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள். மகாத்தாகாந்தி, புனித தோமஸ் மூர், அருட் திரு.மைக்கல் றொட்றிகோ, மேதகு ஆயர் லியோ நாணயக்காரா, மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆகியோர் பற்றிய தொகுப்பு
- ❖ இணைப்புகள் 3.5.1 3.5.2, 3.5.3, 3.5.4, 3.5.5, 3.5.6, 3.5.7

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 3.5.1**

- ✸ இணைப்பு 3.5.2 இல் உள்ள கதையை மாணவருக்குச் சொல்லுங்கள்.
- ✸ பின்வரும் கருத்துக்கள் வெளிக் கொணரக் கூடிய வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| ♦ இறைவன் உண்மையே உருவானவர்.<br>♦ இறைவன் தனது செயற்பாடுகளில் உண்மை யாகவும் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவராக வும் இருக்கின்றார்.<br>♦ இறைவன் தனது வாக்குறுதிகளை கிறிஸ்துவில் நிறைவேற்றுவதன் வழியாக தாம் உண்மை யுள்ளவர் என்பதை வெளிப்படுத்தினார்.<br>♦ கிறிஸ்து தம் வார்த்தையில் நிலைத்திருந்து உண்மையை அறிவதற்குச் சீடரை அழைத்தார்.<br>♦ உண்மையின் ஆவியானவர் எம்மை நிறை உண்மையை நோக்கி வழிநடத்துவார். |

(12 நிமிடங்கள்)

**படி 3.5.2**

- ✸ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✸ இணைப்பு 3.5.1 லுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- ✸ செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- ✸ எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.5.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள். அதே குழுவினரை ஊக்கு வியுங்கள்.
- மேலதிக விளக்கமளிக்க அதே குழுவினரை ஊக்கு வியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

> ♦ கிறிஸ்து பிலாத்துவின் முன் உண்மைக்குச் சான்று பகர்ந்தார்.
> ♦ கிறிஸ்துவின் சீடராகிய நாம் வாக்குறுதிக ளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.
> ♦ உண்மைக்குச் சான்று பகரும் போது நாம் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற் படுகின்றது.
> ♦ தூய ஆவியானவர் துணிவோடு இச்சவால் களுக்கு முகங்கொடுக்க எமக்கு வலுவூட்டு கிறார்.
> ♦ எமது உள்ளத்திலிருந்து வெளிவருகின்ற எண்ணங்களும், எமது செயல்களும் ஒன்றை யொன்று ஒத்திருந்தால், சமூகத்தில் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களாக இருப்போம்.
> ♦ நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும் போது, சமூகம் எம்மை மதிப்பதோடு, நாம் ஒற்றுமை யையும், ஏற்படுத்துகிறோம்.
> ♦ உலகில் உண்மைக்குச் சான்று பகர்ந்தவர்கள் பலருளர்.
>
> உ+ம்:
> ♦ மகாத்மா காந்தி அடிகள்
> ♦ புனித தோமஸ் மூர்
> ♦ அருட்திரு. மைக்கல் றொட்றிகோ
> ♦ மேதகு ஆயர் லியோ நாணயக்கார
> ♦ மேதகு ஆயர் வ. தியோகுப்பிள்ளை
>
> என்பவர்கள் சிலவராவர்.
> ♦ இவர்கள் பலவிதமான சவால்கள், துன்பங்கள், உயிர் அச்சுறுத்தல்கள் மத்தியிலும் உண்மைக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்தனர்.
> ♦ சமூகத்தில் உண்மைக்குச் சான்று பகர வேண்டிய சந்தர்ப்பங்களில் நாம் துணிவோடு செயலாற்ற வேண்டும்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- கிறிஸ்து உண்மைக்குச் சான்று பகர்ந்த விதத்தை நற்செய்தியிலிருந்து பட்டியற்படுத்துவர்.
- உண்மையைக் கடைப்பிடித்து வாழ்வதன் வழியாக சமூகத்தில் நாம் பெற்றுக் கொள்ளும் நன்மைகளை அட்டவணைப்படுத்துவர்.
- உண்மைக்குச் சான்று பகரும் போது நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் அவற்றை மேற்கொள்ளும் விதத்தையும் எழுதுவர்.
- உண்மையுள்ள இறைவன் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் என்பதை விளக்குவர்.
- உண்மைக்கு சான்று பகர்ந்து வாழ்ந்தவர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் பெறும் படிப்பினைகளைப் பட்டியற்படுத்துவர்.

**இணைப்பு 3.5.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவங்களை நன்றாக வாசியுங்கள்.
- அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்தைக் குறித்துக்கொள்ளுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : உண்மைக்குச் சான்று பகரும் போது நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் அவற்றை மேற்கொள்ளும் விதத்தினையும் எழுதுங்கள்.

குழு - 2 : கிறிஸ்து உண்மைக்குச் சான்று பகர்ந்த விதத்தினை நற்செய்தி உதாரணங்களை முன்வைத்து பட்டியற்படுத்துங்கள்.

குழு - 3 : உண்மையைக் கடைப்பிடித்து வாழ்வதன் வழியாக நீங்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு - 4 : உண்மையுள்ள இறைவன் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் என்பதை விளக்குங்கள்.

குழு - 5 : உண்மைக்குச் சான்று பகர்ந்து வாழ்ந்தவர்களில் நீங்கள் அறிந்த ஒருவரைப் பற்றி கட்டுரை வரையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு 3.5.2

நகரத்தில் படித்துக் கொண்டிருந்த சிறுவன் விடுமுறையைக் கழிப்பதற்கு தன் பாட்டனாரின் கிராமத்துக்கு வந்தார். பூஞ்செடிகளும், கனி மரங்களும் நிறைந்த பாட்டனாரின் தோட்டத்தை மகிழ்ச்சியோடு சுற்றிப்பார்த்து மகிழ்ந்தான். கனிகள் தொங்கும் திராட்சைக் கொடியையும் கண்டான். கத்தியை எடுத்து திராட்சைக் கனிகளைக் கத்தரித்து உண்டு மகிழ்ந்தான். அப்போது விளையாட்டாக கொடியையும் கத்தரித்து விட்டான். நாட்கள் சில கழிந்தன. தோட்டத்துக்கு வந்த பாட்டனார் வெட்டுண்ட திராட்சைச் செடி கருகி, அழிந்து கிடப்பதைக் கண்டார். கோபம் கொண்டார். தோட்டத்தைக் காவல் புரியும் வேலையாளை அழைத்தார். காலையும் மாலையும் காவல் செய்யும் மடையா! கண்டாயா! இந்தக் கொடி அழிந்த நிலையை எனக் கோபமாகக் கத்தினார். இனி உனக்கு இங்கே வேலை இல்லை. வெளியே போ என்று துரத்தினார். அந்த வேலைக்காரன் பயந்து நடுங்கி அழுதான்.

அங்கு வந்த சிறுவன் இக்காட்சியைக் கண்டான். நான் தான் இக்குற்றத்தைப் புரிந்தவன் எனப் பாட்டனிடம் உண்மையைச் சொன்னான். பாவம் வேலைக்காரன், அவனைத் தண்டிக்காதீர்கள், தண்டனையை எனக்குக் கொடுங்கள் என்று பாட்டனை வேண்டினான். உண்மையைக் கூறிய பேரனைக் கண்டு பாட்டனார் உள்ளம் மகிழ்ந்தார். கட்டியணைத்துப் பாராட்டினார். பிஞ்சு வயதில் உண்மை பேசிய அந்த சிறுவன், பிற்காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்வடைந்த ஜோர்ஜ் வாஷிங்டன் ஆவார்.

## இணைப்பு 3.5.3

### மகாத்மா காந்தி அடிகள்

இவர் இந்தியாவில் போபன்தார் எனுமிடத்தில் 1869ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை தாழ்ந்த சாதியைச் சேர்ந்த இந்தியாவின் பல பிராந்தியங்களின் இந்து பிரதமராவார். காந்தியடிகள் இந்திய கலாச்சாரத்துக்கமைய குறைந்த வயதில் திருமணம் செய்தார். இவரது 18வது வயதில் இங்கிலாந்துக்குச் சென்று சட்டத்தைக் கற்றார். 1894இல் தென்னாபிரிக்காவுக்குச் சென்று அங்கு சட்டத்தரணியாகப் பணியாற்றினார். அங்கு ஆசியாவைச் சேர்ந்தவர்களுக்கு நேர்ந்த அநீதிகளை எதிர்த்தமையால் சிறையில் இடப்பட்டார்.

1915இல் மீண்டும் இந்தியாவுக்கு வந்தார். அக்காலத்தில் பிரித்தானிய ஆளுனர்களுடன் சேர்ந்து இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது செயற்பட்டார். பின்னர் இந்திய சுதந்திரத்தில் ஈடுபட்டார். இவர் 1925இல் இந்தியாவின் தேசிய காங்கிரசின் தலைவராக இந்தியாவின் தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்தார். பல்வேறு எதிர்ப்பு இயக்கங்களைத் தொடங்கினார். பிரித்தானியருடைய வரிகளுக்கு எதிராகச் செயற்பட்டமையால் மீண்டும் சிறைத் தண்டனை பெற்றார். இந்திய மக்களுக்காகக் குரல் கொடுக்கவும் அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் உண்ணாவிரதங்களை மேற்கொண்டார்.

இறுதியில் இவரது சுதந்திரப் போராட்டங்கள் வெற்றியளித்ததோடு 1947இல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது. இவர் இளைஞராக இருந்தது முதல் 1948வரை இந்தியாவின் அரசியல் சமயத் தலைவராக மக்களுக்குப் பணியாற்றினார். இவர் 1948 ஜனவரி 30இல் இறைவனடி சேர்ந்தார். சுதந்திரம் கிடைத்த பின் காந்தியடிகள் எதிர்பாராத விதமாக இந்தியா இரண்டாகப் பிரிந்து இந்தியா, பாக்கிஸ்தான் என இரு இராச்சியங்கள் உருவாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு 3.5.4

## புனித தோமஸ் மூர்

1478ம் ஆண்டு இலண்டனில் பிறந்த தோமஸ் மூர், அரச நீதிபதியாக இருந்த ஜோண் மூருக்கும் அக்னெஸ் மூருக்கும் மகனாவார்.

தோமஸ் மூர் தனது பதினெட்டாவது வயதில் ஒக்ஸ்வோட் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார். பின் வழக்கறிஞர் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இவர் ஆழ்ந்த பக்தியுடையவராக இருந்தார். தனது துறவற வாழ்வு பற்றிச் சிந்திப்பதற்கு இலண்டனிலுள்ள கார்த்தூசியன் மடத்தில் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்து வேத நூல்களை அதிகம் கற்றதோடு திருச்சபைத் தந்தையர்களின் செயற்பாடுகளையும் பற்றி நன்கு அறிந்தார். சட்டத்தையும் நுணுக்கமாகக் கற்றுத் தேர்ந்தார். 1505இல் ஜேன் கோல்ட் என்பவரை திருமணம் செய்து 3 பெண்களும் ஒரு ஆணுமாக நான்கு குழந்தைகளின் தந்தையானார். பின்னர் அவரது மனைவி இறந்ததும் தனது குழந்தைகளை வளர்த்தெடுப்பதற்காக ஆலிஸ் மிடில்டன் என்ற விதவையை மறுமணம் செய்தார்.

மூர் தனது வாழ்விலே விரைவாக உயர்வு பெற்றார். 26வது வயதில் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். பின்னர் மாவட்ட அதிகாரியாகி இங்கிலாந்தின் மிக உயர்ந்த அரச அதிகாரியாக விளங்கினார். அதே வேளை பிள்ளைகளை அக்கறையுடன் கவனிப்பதிலும் ஞான அறிவை ஊட்டுவதிலும் அவர் பின்னிற்கவில்லை. தினமும் 4 தொடக்கம் 5மணி நேரமே தூங்குவார். நாள்தோறும் திருப்பலியில் உதவத் தவறமாட்டார். ஆலயப்பணிகளிலும் திருயாத்திரை என்பவற்றிலும் ஆர்வத்தோடு பங்குபற்றுவார். தனக்கென்று பணம் எதுவும் சேமித்து வைத்ததில்லை. ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் தாராளமாகப் பகிர்ந்து கொடுப்பார். இவ்வுலகத்திலுள்ள புகழ், பெருமை, தற்காலிகக் கைம்மாறு என்பவற்றை விட உண்மை, நீதி, நேர்மை போன்ற கிறிஸ்தவ மதிப்பீடுகளே உயர்ந்தவை என்பதில் உறுதியாய் இருந்தார்.

தோமஸ் மூர் காலத்தில் அரசராக இருந்த 8வது ஹென்றி அரசருக்கு அரசு வாரிசு ஒருவர் இல்லாதிருந்தது மூருடைய வாழ்க்கையில் மிக வேதனையைத் தரும் விடயமாக அமைந்தது. ஹென்றி அரசன் திருமணம் செய்திருந்த கத்தரீன் என்பவருக்கு ஆண்குழந்தை இல்லாததால் அவரை விவாகரத்துச் செய்து ஆன்பொலின் என்ற பெண்ணைத் திருமணம் செய்ய திருத்தந்தையிடம் அனுமதி கோரினான். திருத்தந்தை 7வது கிளமென்ற் அந்த வேண்டுகோளை மறுத்துவிட்டார். திருச்சபைக்கு எதிரான இந்தச் செயலை திருத்தந்தை மறுத்ததால் மூரின் உதவியை நாடினான். திருச்சபையில் கிறிஸ்தவனாக இருந்து கிறிஸ்தவ மதிப்பீடுகளின் படி வாழ்வதே நிரந்தர மகிழ்ச்சியைத் தரும் என தனது மனச்சான்றின் மூலம் ஊகித்தறிந்து மூரும் மறுப்புத் தெரிவித்ததோடு தனது சகல பதவிகளிலிருந்தும் விலகிவிட்டார். அதுமட்டுமல்லாது அதன் பின்னர் வந்த எல்லாக் கஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டார்.

தனது சுய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஹென்றி அரசன் திருத்தந்தையின் அதிகாரத்திலிருந்து விலகியதோடு, இங்கிலாந்து சபையை ஸ்தாபித்து தன்னைத் தலைவராகப் பிரகடனப்படுத்தினான். தனது திருமண அழைப்பிதழையும் மூருக்கு அனுப்பி வைத்தான். மூர் அதனையும் நிராகரித்தார். இருவரது வைராக்கியமும் வளர்ந்து இறுதியில் மூர் சிறையிலிடப்பட்டார். சிறை வாசத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். குடும்பத்தினர் அரசனுடன் பேச்சுவார்த்தை நடாத்தி விடுதலை செய்ய முன்வந்த போதும் அதனை நிராகரித்துவிட்டார். இதனால் சிறைக்கூடசட்ட திட்டங்கள் கடுமையாக்கப்பட்டு, இவரைச் சந்திப்பதற்குக் கூட எவரும் அனுமதிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"DIALOGUE FOR COMFORT AGAINST TRIBULATION" என்ற மிகச் சிறந்த ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஒரு நூலை சிறையிலிருந்தே எழுதினார். விடுதலை பெற வாய்ப்பிருந்தும் அரச ஆட்சியினால் மரண தண்டனை விதிக்கப்பட்டார். **இறைவனுக்காக மரிப்பதற்கு நல்ல மனச்சான்றின்படி வாழ சக்தியைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறி மரணதண்டனையை ஏற்றுக்கொண்டார்.**

1535 ஜுலை 6 செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று அறிவிக்க வந்தவரிடம் தான் அரசருக்காக இறைவனிடம் மன்றாடுவதாகக் கூறினார்.

மூர் அழகான ஆடை அணிந்து மரண தண்டனை நிறைவேற்றப் போகும் வழியின் இருமருங்கிலும் உள்ள மக்களோடு மகிழ்ச்சியாக உரையாடினார். மரண தண்டனை நிறைவேற்றுபவரை அணைத்து முத்தமிட்டுத் தைரியப்படுத்தினார்.

**இணைப்பு 3.5.5**

## அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ

''சந்தர்ப்பம் வரும்போது மக்களுக்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும்''
''நாம் அநீதி இளைக்காவிடினும் அநீதியைப் பார்த்து அமைதியாக இருப்போமாயின் நாமும் குற்றம் செய்தவர்களாவோம்......................
பிறருக்காக எம்மை அர்ப்பணிக்க முன் எம்மிடமுள்ள மமதையை அழித்து விட வேண்டும். மனிதன் பலவீனமாகும் போது இறைவனின் பலம் மிகுதியாகும்."

இத்தகைய மேற்கோள்களை தனது வாழ்க்கையின் முன்மாதிரியாகக் கொண்டு, எப்பொழுதும் செபமாலையை உச்சரித்து தேவ அன்னையிடம் தன்னை ஒப்படைத்த அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ 1927.06.30 அன்று தெஹிவளையில் பிறந்தார். பௌத்த, மெதடிஸ்த சூழலில் வாழ்ந்த றிச்சர்ட் றொட்றிகோ, ஜோர்ஜினியா றொட்றிகோ தம்பதிகளின் புதல்வராவார்.

தெஹிவளை புனித மரியாள் வித்தியாலயத்திலும், பம்பலப்பிட்டி புனித பேதுரு கல்லூரியிலும் கல்வி கற்று 1946-1947 காலப்பகுதியில் புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியப் பணி புரிந்தார். 1948இல் குருத்துவப் பயிற்சிக்காக அமல மரி தியாகிகள் துறவற சபையிலும், உரோமையில் பிரசித்தி பெற்ற கிரகோரி கலாசாலையிலும் முறையாகப் பயிற்சி பெற்று பட்டதாரியானார். 1954.07.07 அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் அம்பிட்டிய குருத்துக் கல்லூரியில் 1955-1971 வரை விரிவுரையாளராகப் பணி புரிந்தார். அத்துடன் அயல் கிராமங்களுக்கும் பங்குகளுக்கும் சென்று, விசுவாச வாழ்வை நடைமுறையில் அனுபவிக்கவும், திருவழிபாட்டை அர்த்தமுள்ள முறையில் நிறைவேற்றவும் மக்களை ஊக்குவித்தார். 1971இல் பாரீஸ் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்தார்.

1974-1978 காலப்பகுதியில் கொழும்பு மருதானையில் சமூக சமய தொடர்பு நிலையம் ஒன்றை ஆரம்பித்து, கொழும்புச் சேரிகளில் வாழும் மக்களின் தேவைகளை தீர்க்கும் பணிகளில் ஈடுபட்டார். இத்தருணத்தில் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிவதற்குக் கிடைத்த வாய்ப்பை நிராகரித்து பண்டாரவளையில் நிறுவப்பட்ட சேவக செவன என்ற புதிய குருமடத்தில் பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவ மாணவர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட இவர், பொது மக்களின் தேவைகள், விருப்பு வெறுப்பு, சமூகத்தின் உயிர்த்துடிப்பு என்பவற்றை விளங்கி அவர்களோடு ஒருவராக வாழப்பழகிக் கொண்டார். மலை நாட்டில் தேயிலைத் தோட்டங்களிலும், நெல் வயல்களிலும் போராடும் விவசாய மக்களின் அபிவிருத்திக்காகவும், கொழும்பு சேரிகளிலும், தொழிற்சாலைகளிலும் கஷ்டப்படும் மக்களின் உரிமைக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க அயராது உழைத்தார்.

1980ல் புத்தள என்ற கிராமத்தை தனது இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்து கிறிஸ்தவ உறவை வாழ்க்கையுடன் கட்டியெழுப்ப அர்ப்பணித்ததுடன் அதற்காக பற்பல செய்திகளை எழுதி வெளியிட்டார். அவை உலகெங்கும் பரவின. கிராமத்தில் அனைவரினதும் மதிப்பிற்கு பாத்திரமான இவர் தனது வெள்ளை நிற அங்கிக்குப் பதிலாக, வெள்ளை நிற சாரத்தையும் வெள்ளை நிற பெனியனையும் தனது சீருடையாக்கிக் கொண்டார். வைத்தியர், விவசாயி, தொழிலாளி ஆகியோருடன் சமூக உறவை வளர்க்கும் நிலையமாக தனது இல்லத்தைத் தெரிந்து கொண்டார்.

1987.11.10 அன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கும் தருணத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறைவனடி சேர்ந்தார். திருவழிபாடு, மறைத் தூதுப்பணி, நீதி என்பவற்றிற்காக மக்களுடன் சேர்ந்து உழைத்த மைக்கல் றொட்றிகோ வேதசாட்சி என அறிமுகப்படுத்தப்படுகின்றார்.

## இணைப்பு 3.5.6

### மேதகு ஆயர் லியோ நாணயக்கார

இலங்கையில் பொல்காவலை எனுமிடத்தில் 1917இல் பிறந்த இவர் தாய் தந்தையர் மாத்தளையில் இடம் மாறிச் சென்றதால் இளமைக் கல்வியை மாத்தளையில் கற்றார். குடும்பக் கஷ்டங்கள் காரணமாக கண்டி கச்சேரியில் எழுதுவினைஞராக தொழில் புரிந்தார். அவரது குருமடத்தில் சேரும் ஆர்வத்தை உணர்ந்து கொண்ட சில்வெஸ்ரியன் பெனடிக்டயின் சபையைச் சேர்ந்த பங்கு குருவானவர் உதவியுடன் குருமடத்தில் சேர்த்தார். 1941இல் தனது 24வது வயதில் குருமடத்தில் இணைந்து 1950இல் தனது 33வது வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பப் பிரிவு தலைமை ஆசிரியராகவும் மாணவர் விடுதிப் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றினார். 1958இல் கண்டி மறைமாவட்ட ஆயர் கலாநிதி பெணாட் றொட்ரிகோ ஓய்வு பெற்றதை தொடர்ந்து 1959இல் கண்டி மறைமாவட்ட ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1962இல் இரண்டாம் வத்திக்கான் சபையில் கலந்துகொள்ள 23ஆம் அருளப்பர் பாப்பரசரால் அழைப்புபெற்ற மேதகு லியோ நாணயக்கார, உரோம் சென்றார். தீவிர அடிப்படைவாத சிந்தனை கொண்டவராக சென்ற அவர் வத்திக்கான் சங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட புதிய மாற்றங்களால் முழுதும் மனமாற்றம் பெற்ற நவீன சிந்தனைகளுடன் திரும்பினார். இவர் செய்த பரிந்துரைப்பின் படி 1971இல் இலங்கை மத்திய மாகாணமும், ஊவா மாகாணமும் தனி மறைமாவட்டங்களாக்கப்பட்டன.

பதுளை ஆயராக, பணியேற்றபோது பதுளையில் வறுமையில் வாடி பிச்சைக்காரராகத் தெருவில் திரிந்த தோட்டத் தொழிலாளர்களைக் காப்பதற்காக 1974இல் பிச்சைக்காரர் மறுவாழ்வு இயக்கத்தை (BRC) தோற்றுவித்தார். வளர்ந்தோர் கல்விக்கான வகுப்புகளை ஆரம்பித்தார். பாடசாலை விட்டு இடையில் விலகியோருக்காக தொழில் நுட்ப நிலையத்தை பதுளையில் உருவாக்கினார். பெருந்தோட்டத் தொழிலாளரது கல்வி விருத்திக்காக நீண்ட காலத் திட்டங்களை வகுத்தார். கண்டியில் SETIK நிறுவனத்தை உருவாக்கி ஏழைகளுக்கு உதவும் திட்டங்களை முன்னெடுத்தார். இதனால் ''கூலிகளின் ஆயர்'' என இவர் அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 3.5.7**

## மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை

மேதகு ஆயர் தியோகுபிள்ளை இலங்கையின் வட பகுதியிலுள்ள கரம்பொன் என்னும் கிராமத்தில் ஏப்ரல் மாதம் 9ஆம் நாள் 1917 ஆம் ஆண்டு பாரம்பரியக் கத்தோலிக்கக் குடும்பத்தில் பதினொராவது பிள்ளையாகப் பிறந்தார். கரம்பொன் திருக்குடும்பக்கன்னியர் பாடசாலை, ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி என்பவற்றில் பெற்ற பாடசாலைக்கல்வியைத் தொடர்ந்து குருத்துவக் கல்வியை உரோமாபுரி ஊர்பான் பல்கலைக்கழகத்திலும் பயின்றார். டிசம்பர் மாதம் 22ஆம் நாள் 1941 ஆம் ஆண்டு உரோமபுரியிலேயே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர், மேலும், மெய்யியல், இறையியல், துறைகளில் உயர் கல்வியை அதே பல்கலைக்கழகத்தில் கற்று பெப்ரவரி மாதம் 1945ஆம் ஆண்டு நாடு திரும்பினார். இவர் மாணவப்பருவத்தில் கல்வி, ஒழுக்கம், விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்கினார்.

இவர் குருவாகவும் ஆயராகவும் பணியாற்றிய காலங்களில் மிகவும் கண்ணியத் துடனும், பொறுப்புடனும் செயற்பட்டு தமக்கு வழங்கப்பட்ட கடமைகளைச் செவ்வனே செயற்படுத்தியவர். சேவையாற்றிய பங்குத்தளங்களிலும், அதிபராகக்கடமையாற்றிய பாடசாலைகளிலும், ஆசிரியர்களையும் உருவாக்குவதே கத்தோலிக்க மறை அறிவை அளிப்பதற்குச் சிறந்த வழி என்பது இவரது உறுதியான நம்பிக்கை.

திருமறை பற்றிய அறிவை அளிப்பதற்கு இவர் கையாண்ட மற்றுமோர் வழி, மறைசார் உண்மைகளை விளக்கும் சிறிய நூல்களை ஆக்கியமையாகும். பாடசாலை மாணவர்களுக்கும் பெரியோருக்கும் பயன்படும் வண்ணம் சிறிய குறிப்பிடம், பெரிய குறிப்பிடம், மூன்று பாகங்களைக் கொண்ட கத்தோலிக்கத் திருமறை விளக்கம், மாணவர் கிறிஸ்தவ போதகம் என்னும் பாடநூல்களயும் வெளியிட்டு மறைக்கல்விப்பணிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்.

மே மாதம் 11ஆம் திகதி 1967ஆம் ஆண்டு திருமலை - மட்டு நகர் துணை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் சில காலம் அங்கு பணியாற்றிய பின் 1972இல் யாழ்ப்பாண ஆயராக நியமனம் பெற்றார். ஆயர் அவர்கள் பணியாற்றிய காலம் ஈழத்தமிழ் மக்கள் வாழ்வில் பல துன்பங்களும் துயரங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்ற காலமாகும். பல்வேறு உரிமை மீறல்கள், அநீதிகள் இடம்பெற்ற வேளையில் அஞ்சா நெஞ்சத்துடன் துணிந்து தவறுகளைச் சுட்டிக்காட்டி உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகர்ந்த இவருக்குப் பல எதிர்ப்புக்களும் இருந்தன. வன்செயல்களால் மக்கள் பாதிக்கப்பட்ட வேளையில் நிவாரணம், புனருத்தாரணம், மீள்குடியேற்றப் பணிகளை மேற்கொண்டதோடு, தொழிற்பயிற்சி, சிறுகடனுதவி போன்ற திட்டங்களினால் வறிய மக்களின் வாழ்வில் விடிவை ஏற்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டார்.

இரண்டாம் வத்திக்கான் சங்க அமர்வுகளின் போது முன்வைக்கப்பட்ட பல செயற்திட்டங்களுக்கு யாழ் மறைமாவட்டத்தில் செயல்வடிவமளித்த சிறப்பு இவரையே சாரும். மறைக்கல்வி நிலையம், மனித முன்னேற்ற நிலையம், திருவழிபாட்டு நிலையம், குடும்ப நல நிலையம் என்பவற்றை நிறுவியதுடன், ஆணைக்குழுக்களையும் ஏற்படுத்தி மறைப்பணியைத் தம் மறை மாவட்டத்தில் செவ்வனே செயற்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் அவர்கள் உருவாக்கற் பணிக்கும் அதிக முக்கியத்துவம் அளித்திருந்தார். கத்தோலிக்க பிள்ளைகள் கத்தோலிக்க விசுவாசத்திலும், பாரம்பரியத்திலும் வளர்க்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகச் செயற்பட்டவர். அதே போன்று மறை மாவட்டத்திற்கு வேண்டிய குருமார் தமிழ் மக்களின் கலசாரச்சூழலில் உருவாக்கம் பெறுதல் வேண்டும் என்னும் உயரிய நோக்குடன் யாழ்ப்பாணத்தில் பெரிய குருமடத்தை நிறுவினார்.

கத்தோலிக்க கலை இலக்கிய ஊடகங்களை ஊக்குவித்து அவற்றின் வழியாகவும் மறைப்பணியை மேற்கொள்ள ஆயர் வழிவகுத்தார். பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் தோற்றம் பெற்ற கத்தோலிக்க இலக்கியங்கள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மேலும், கத்தோலிக்கத்தை வளர்த்த நாட்டுக் கூத்துக்கலையின் வளர்ச்சியை ஊக்குவித்ததோடு, கத்தோலிக்கக் கலை இலக்கிய மேம்பாட்டிற்கு திருமறைக்கலாமன்றத்தினர் ஆற்றிவருகின்ற பணியை ஊக்குவித்து அப்பணிகளை பன்முகப்படுத்தி பரவலாக்கியமை இவரது முக்கிய கலைப்பங்களிப்பாகும்.

அன்னாரிடம் விளங்கிய உயர் பண்புகள், இவர் ஆற்றிய சமய, சமூக, கல்வி, கலை, இலக்கிய பணிகள் காரணமாகக் கத்தோலிக்கர் மத்தியிலும், ஏனைய மதத்தவர்கள் மத்தியிலும் பெரிதும் மதிக்கப்பட்டார். இவர் ஆற்றிய அனைத்துப் பணிகளையும் கருத்திற்கொண்டு, யாழ் பல்கலைக்கழகம் 1999இல் இவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | அன்பின் கட்டளைகளை தமது வாழ்வில் செயற்படுத்துவர். |
| தேர்ச்சிமட்டம் | 3.6 | : | திருவிவலியத்தின் படிப்பினைகளுக்கிணங்க முழுமையான மனிதத்துவத்தை நோக்கிச் செல்வர். |
| செயற்பாடு | 3.6 | : | முழுமையான மனிதத்துவத்தை நோக்கிச் செல்வதற்கு திருவிவியத்தின் படி வாழ்வோம். |
| பாடவேளைகள் | | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடு -

- ❖ திருவிவிலியம், மத். 22:37-39 யோவா. 15:9-10, 1கொரி. 13:1-13, மத். 5:43-48, லூக். 23:34 ஆகிய திருவிவிலிய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள்,
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ மனிதத்துவம் பேணப்படும் சில செய்திகள், படங்கள், மனிதத்துவம் பேணப்படாத சில செய்திகள், படங்கள் அடங்கிய சுவரொட்டி ஒன்று.
- ❖ இணைப்புகள் 3.6.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 3.6.1

- ✸ படங்கள் அடங்கிய சுவரொட்டியை வகுப்பில் மாணவர் பார்க்கக் கூடியதாகக் காட்சிப்படுத்துங்கள்.
- ✸ அதில் அடங்கியுள்ள படங்கள், செய்திகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ✸ பின்வரும் கருத்துகள் வெளிக்கொணர மாணவர் களைக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

> - ♦ இறைவனே அன்பின் ஊற்றாவர்.
> - ♦ அன்பு அனைத்தையும் விட நித்தியமானதும் உன்னதமானதுமாகும்.
> - ♦ இறைவனை மட்டும் முழு உள்ளத்தோடு அன்பு செய்ய வேண்டுமென்பது இறைவனின் முதன்மையான கட்டளையாகும்.
> - ♦ மனிதத்துவத்தின் அடிப்படையான அன்பின் கட்டளையை கிறிஸ்து வெளிப்படுத்தினார்.
>
> (12 நிமிடங்கள்)

படி 3.6.2

- ✸ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✸ இணைப்பு 3.6.1 லுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- ✸ செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- ✸ எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 3.2.3

- ஒவ்வொரு குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள். அதே குழுவினரை ஊக்கு வியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக் களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- கிறிஸ்து தான் வாழ்ந்த சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோருக்கு விசேடவிதமாக அன்பு காட்டினார்.
- கிறிஸ்தவ அன்பு தனித்துவம் வாய்ந்ததாகும்.
- பகைவரையும் அன்பு செய்ய எமக்கு அழைப்பு விடுக்கிறது.
- அன்பின் நிமித்தம் கிறிஸ்து தன்னை சிலுவை யில் அறைந்தவர்களுக்காக தந்தையிடம் மன்னிப்பு வேண்டினார்.
- முழுமையான மனிதத்துவத்தை நோக்கிச் செல்ல எம்மையும் கிறிஸ்து அழைக்கிறார்.
- அன்பிற்காக ஏங்கித் தவிப்பவர்களை நாம் அன்பு செய்ய வேண்டும்.
- அன்பின் சிறப்பான பண்புகளைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்.
- 1கொரி. 13:1-13இல் குறிப்பிடப்பட்டுள்ள படி பராபட்சம் பாராமலும், பிரதிபலன் எதிர்பாராம லும் எமது அன்பு மிளிர வேண்டும்.
- முழுமையான மனிதத்துவத்தை அடைவதற்குத் தேவையான வழிமுறைகளைத் திருவிவிலியத்தி லிருந்து பெற்றுக் கொள்ளுகிறோம்.
- இறைவார்த்தை எம்மை அன்பின் அடிப்படையில் வாழ அழைக்கிறது.
- முழுமையான மனிதத்துவத்தை நோக்கி நாம் செல்லும் போது தந்தையின் நிறைவில் நிறை வுள்ளவர்களாவோம்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ''பகைவரையும் அன்பு செய்தல்'' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைவர்.
- இறைவனை மட்டும் முழு உள்ளத்தோடு அன்பு செய்தல் இறைவனின் முதன்மையான கட்டளை என்பதை விளக்குவர்.
- கிறிஸ்து ஒடுக்கப்பட்டவர்களையும் அன்பு செய்தார் என்பதை நற்செய்தியிலிருந்து உதாரணங்களோடு எழுதுவர்.
- புனித பவுல் கூறும் அன்பின் சிறப்பும் பண்புகளை அட்டவணைப் படுத்துவார்.
- கிறிஸ்து இறைத் தந்தைக்குத் தனது அன்பை வெளிப்படுத்திய விதத்தை விபரிப்பர்.

**இணைப்பு 3.6.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- செயற்பாட்டுப் படிவங்களை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : கிறிஸ்து இறைதந்தைக்கு தனது அன்பை வெளிப்படுத்திய விதத்தினை விளக்குங்கள்.

குழு - 2 : ''பகைவரையும் அன்பு செய்தல்'' எனும் தலைப்பில் நாடகம் ஒன்று எழுதுங்கள்.

குழு - 3 : புனித பவுல் கூறும் அன்பின் சிறப்புப் பண்புகளை அட்டவணைப் படுத்துங்கள்.

குழு - 4 : கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் இறையன்பாகும். உங்களது அனுபவங்களை சுவரொட்டியாக முன் வையுங்கள்.

குழு - 5 : கிறிஸ்து ஒடுக்கப்பட்டவர்களையும் அன்பு செய்த ஒரு சம்பவத்தை சிறு நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : அன்பின் கட்டளைகளை தமது வாழ்வில் செயற்படுத்துவர். |
| தேர்ச்சிமட்டம் | 3.7 | : கிறிஸ்துவின் முன்மாதிரியான பண்புகளைத் தமதாக்கிக் கொள்வதன் வழியாக தமது வாழ்வில் அன்பை அனுபவிப்பர். |
| செயற்பாடு | 3.7 | : கிறிஸ்துவின் பண்புகளின் வழியாக எமது வாழ்வில் அன்பை அனுபவிப்போம். |
| பாடவேளைகள் | | : 120 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடு** -

- ❖ திருவிவிலியம், பிலி. 2:5-11, கொலோ. 1:19-20, கொலோ. 2:6-7, கொலோ. 3:12-15 ஆகிய திருவிவிலிய வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள்,
- ❖ டிமைன் பேப்பர், மாக்கர் பேனா
- ❖ நடிக, நடிகைகளின் படங்கள், அரசியல் தலைவர், பாடகர், இசையமைப்பாளர் ஆகியோரின் படங்கள் ஒட்டப்பட்ட சுவரொட்டி
- ❖ இணைப்புகள் 3.7.1

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

**படி 3.7.1**

- ❋ சுவரொட்டியை வகுப்பில் மாணவர் பார்க்கக் கூடியதாகக் காட்சிப்படுத்துங்கள்.
- ❋ அதில் அடங்கியுள்ள படங்கள், செய்திகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ❋ பின்வரும் கருத்துகளைக் வெளிக்கொணர மாணவர் களைக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

> - ♦ கிறிஸ்துவே எமது ஏக முன்மாதிரியாவார்.
> - ♦ கிறிஸ்து இறைத்திட்டத்தை நிறைவேற்ற விருப்பத்தோடு தன்னைத் தாழ்த்தினார்.
> - ♦ கிறிஸ்து தன்னைப் பணியாளனாகவே அடையாளப் படுத்தினார்.
> - ♦ கிறிஸ்து தன்னைத் தாழ்த்தியதனால் இறைவன் அவரை உயர்த்தினார்.
> - ♦ கிறிஸ்து தலைமைத்துவத்தின் உண்மைப் பண்புகளை வெளிப்படுத்தினார்.

(12 நிமிடங்கள்)

**படி 3.7.2**

- ❋ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ❋ இணைப்பு 3.7.1 லுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செயற்பாடுகளைக் கொடுத்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 3.2.3

* ஒவ்வொரு குழுக்களும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமளியுங்கள். அதே குழுவினரை ஊக்குவியுங்கள்.
* ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக் களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

- தலைமைத்துவம் வகிப்பவர்கள் தம்மைப் பணியாளர்களாகவே கருதிச் செயற்பட வேண்டும்.
- தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுபவர்கள் அன்புறவோடும், விருப்பத்தோடும் தமது கடமை களையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றிச் செயற்பட வேண்டும்.
- கிறிஸ்து திருச்சபையின் மறையுடலின் தலை யாகவும், நாம் அதன் உறுப்புகளாகவும் இருக்கிறோம்.
- நாம் கிறிஸ்துவோடு மிக நெருக்கமாக இணைந்து அவரது பண்புகளைப் பிரதிபலிக்க வேண்டும்.
- கிறிஸ்துவோடு இணையும் போது நிறைவாழ்வைப் பெறுவதோடு, விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றப்படுகிறோம்.
- கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொள்ளும் எம்மில் மிளிர்கின்ற பண்புகளாவன.
  - பரிவு
  - இரக்கம்
  - நல்லெண்ணம்
  - மனத்தாழ்மை
  - கனிவு
  - பொறுமை (கொலோசேயர் 3:12-15)
- கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொள்ளும் போது எமது அனைத்துச் செயற்பாடுகளையும் கிறிஸ்துவின் பெயரால் செய்வோம்.
- நாம் கிறிஸ்துவோடு செயற்படுகையில் இறைத் தந்தையைப் போற்றிப் புகழ்கின்றோம்.
- இறைத் தந்தைக்கு நன்றி உள்ளவர்களாக வாழ்வோம்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- கிறிஸ்து இறைத்திட்டத்தை நிறைவேற்றிய வித‌த்தினை விளக்குவர்.
- கிறிஸ்துவின் தலைமைத்துவப் பண்புகளை முன்மாதிரியாகக் கொண்டு ஒரு தலைவர் எவ்வாறு ஒழுக வேண்டுமென்பதை எழுதுவர்.
- வயோதிபர் இல்லம், அனாதை இல்லம், வைத்திய சாலை போன்ற இடங்களில் பணியாற்ற நேரிடும் போது அன்புறவோடும் விருப்பத்தோடும் தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறை வேற்றும் விதத்தினை விளக்குவர்.
- நிறை வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும், விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றவும் இறையருள் வேண்டி செபம் ஒன்று ஆக்குவர்.

**இணைப்பு 3.7.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- செயற்பாட்டுப் படிவங்களை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : கிறிஸ்து இறைத்திட்டத்தை நிறைவேற்றிய விதத்தினை உதாரணங்களோடு விளக்குங்கள்.

குழு - 2 : தலைமைத்துவம் வகிக்கும் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்புகளைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு - 3 : இயற்கை அனர்த்தங்களால் அகதிகளாக்கப்பட்டவர்கள் மத்தியில் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைக்கும் போது அன்புறவோடும், விருப்பத் தோடும் செயலாற்றும் விதத்தினைப் பற்றி ஒரு கட்டுரை வரையுங்கள்.

குழு - 4 : நிறை வாழ்வைப் பெற்றுக்கொள்ளவும், விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றவும் இறையருள் வேண்டி செபம் ஒன்று ஆக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 4.0 | : திருவழிபாட்டின் வழியாக இறைமக்கள் இறைவனைப் புகழ்வர். |
| தேர்ச்சிமட்டம் | 4.1 | : பழைய ஏற்பாட்டுப் பலிகள் பற்றி ஆழமாகக் கற்பர். |
| செயற்பாடு | 4.1 | : பழைய ஏற்பாட்டுப் பலிகள் பற்றி ஆழமாக அறிவோம். |
| பாடவேளைகள் | | : 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடு

- ❖ தொ.நூ. 14:17-20 வி.ப. 29:10-18, 30: 1-6 வி.ப. 29:38-44 லேவி. 16:20-22, மலா. 3:10-12, இ.ச. 14:22-23, லூக். 1:8-10
- ❖ இத்திருவிவிலிய வசனங்கள் எழுதப்பட்ட பிரிஸ்டல் போட்கள்,
- ❖ பழைய ஏற்பாட்டு பலிகள் பற்றிய படங்கள்.
- ❖ இணைப்பு 4.1.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 4.1.1

- ✹ திருவிவிலிய வசனங்கள் எழுதப்பட்ட பிரிஸ்டல் போட்கள், பலிகள் பற்றிய படங்கள் இவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- ✹ அதில் அடங்கியுள்ள கருத்துக்களை சிந்திப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- ✹ இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து பொதுக்கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- ♦ பலி ஒப்புக்கொடுத்தல் பழைய ஏற்பாட்டில் ஆரம்ப காலத்திலிருந்து நடைபெறும் ஒரு செயற்பாடாகும்.
- ♦ காலக் கிரமத்தில் மனிதனின் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்றாற்போல் பலிகள் பல அமைப்பு முறைகளைப் பெற்றன.
- ♦ பலி ஒப்புக்கொடுத்தல் வழியாக இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்கு தங்கள் அன்பையும், நன்றியையும் தெரிவித்தனர்.

(12 நிமிடங்கள்)

படி 4.1.2

- ✹ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✹ இணைப்பு 4.1.1 லுள்ள கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 4.1.3

* ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தா்ப்பம் வழங்குங்கள்.
* ஏனைய குழுக்களிலிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

- பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்தே பலிகள் பல்வேறுவிதமாக ஒப்புக்கொடுக்கப்பட்டன.
- உன்னத கடவுளின் குருவான மெல்கிசெதெக் ஆசீர்வதித்தார், ஆபிரகாமை பாதுகாத்த இறைவனை போற்றிப் புகழ்ந்தார். ஆபிரகாம் பத்திலொரு பங்கை காணிக்கையாக கொடுத்தார்.
- மோசேயின் காலத்தில் ஆரோனும் அவனது புதல்வர்களும் காளைகளைப் பாவப்பரிகாரப்பலி யாகவும் செம்மறிகிடாய்களை நறுமணம் வீசும் எரிபலியாகவும் ஒப்புக் கொடுத்தனர்.
- இறைவனுடைய கட்டளைப்படி இஸ்ரயேலர் ஒரு வயதுடைய ஆட்டு குட்டிகள் இரண்டு, எண்ணெயில் பிசைந்த மா திராட்சை இரசம் என்பவற்றை காலையிலும் மாலையிலும் தினமும் பலியாக ஒப்புக்கொடுத்தனர்.
- பாவப்பரிகாரப்பலி முறையும் இஸ்ரயேல் மக்களிடம் இருந்தது. ஆரோன் வெள்ளாட்டு கிடாயின் தலையின் மேல் கைகளை வைத்து மக்களின் பாவங்களை அதன்மேல் சுமத்தி பாலைநிலத்திற்கு அனுப்பிவைத்தார். பாலைநிலம் தீய ஆவிகளின் இருப்பிடமாக அன்று கருதப்பட்டது. இச் செயலினால் மக்கள் தூய்மையடைந்தனர் என்று நம்பினர்.
- உழைப்பின் பத்திலொரு பகுதி இறைவனுக்கும், தேவை ஏற்படுவோருக்கும் காணிக்கையாகக் கொடுப்பது இஸ்ராயேல் மக்களின் பலிகளில் ஒன்றாக இருந்தது. பத்திலொரு பங்கை வழங்கு வோருக்கு ஆசி வழங்குவதாக இறைவன் வாக்களித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ தூபக்காணிக்கை செலுத்துவது இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டு மரபுகளில் ஒன்றாகும். உடன்படிக்கைப் பேழைக்கு முன்னால் நறுமணப் பொருள் எரிக்கும்படி இறைவன் ஆரோனுக்கு கட்டளையிட்டார்.
- ♦ புதிய உடன்படிக்கையில் குருவாகிய சக்கரியாவும் ஆலயத்தில் தூபக் காணிக்கை ஒப்புக் கொடுத்தார். நறுமணம் எரிந்து புகையாக மேலேழும்புவது போல் மக்களின் வாழ்க்கையும் இறைவன் பால் மேலெழும்புகிறது என்பதற்கு அடையாளமாகும்.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ✸ பழைய உடன்படிக்கையின் காலத்தில் பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டதன் காரணத்தை அறிந்து எழுதுவர்.
- ✸ பழைய உடன்படிக்கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பலிகளின் வகைகளைத் திருவிவிலியத்திலிருந்து தொகுத்து கூறுவர்.
- ✸ பாவப்பரிகாரப் பலியையும் தினந்தோறும் ஒப்புக்கொடுக்கும் பலியையும் ஒப்பிட்டுக் காட்டுவர்.
- ✸ பத்திலோரு பங்கு ஒப்புக் கொடுத்தல் இறைவனின் ஆசியைப் பெறுவதற்கான செயல் என்பதை ஏற்று செயற்படுவர்.
- ✸ இறைவனுக்கு பலிகள் செலுத்த வேண்டுமா? வேண்டாமா? என்ற தலைப்புக்களில் விவாதம் ஒன்றை ஆயத்தம் செய்வர்.

**இணைப்பு 4.1.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ♦ குழுச் செயற்பாட்டுக்கான படிவத்தை நன்றாக வாசித்து அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ♦ செயற்பாடுகளை முன்வைக்க மாணவர்களைத் தயார்படுத்துங்கள்.

குழு - 1 : வி.ப. 29:38-44 பகுதியை வாசித்து விபரங்களை கோவைப்படுத்துக.

குழு - 2 : வி.ப. 29:10-18, லேவி. 16:20-23 இவ்விவிலிய வசனங்களை வாசித்து பாவப்பரிகாரப் பலியின் தன்மையை விபரித்து எழுதுக.

குழு - 3 : தொ.நூ. 14:17-20, மலா. 3:6-12, இ.ச. 14:22-23 பகுதியில் காணப்படும் பலிமுறையை விபரிக்குக.

குழு - 4 : வி.ப. 30:1-10, லூக். 1:1-10 இப்பகுதியை வாசித்து பழைய புதிய உடன்படிக்கைகளில் இடம் பெற்ற தூபக் காணிக்கையை ஒப்பிட்டுக் காட்டுக.

குழு - 5 : இறைவன் உமக்கு கொடுத்த திறமைகளாலும், ஆற்றல்களாலும் பாடசாலையில் இறைவனின் மகிமையை எவ்வாறு வெளிப்படுத்துவீர் என்பதற்கு 5 காரணங்களை எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 4.0 | : | திருவழிபாட்டின் வழியாக இறைமக்கள் இறைவனைப் புகழ்வர். |
| தேர்ச்சிமட்டம் | 4.2 | : | கிறிஸ்துவின் பலி வழியாக மீட்புப் பணி முழுமையடைந்ததை ஆராய்வர். |
| செயற்பாடு | 4.2 | : | மீட்புப் பணி கிறிஸ்துவின் பலியில் முழுமையடைந்ததை ஏற்று வாழ்வோம். |
| பாடவேளைகள் | | : | 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடு -

- ❖ யோவான் 1:29, 13:1-15, லூக். 22:14-20, 23:34-49, எபி. 9:11-15, 10:11-14 எழுதப்பட்ட அட்டைகள்
- ❖ இறுதி இராவுணவுப் படம்
- ❖ கிறிஸ்து சிலுவையில் தொங்கும் படம்
- ❖ கிறிஸ்துவுக்காக தமது உயிரைத் தியாகம் செய்த வேதசாட்சிகளின் படம்.
- ❖ இணைப்பு 4.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.2.1**

- ✹ சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவின் படம் ஒன்றைக் காட்சிப்படுத்துங்கள்
- ✹ அப்படத்தை பார்க்கும் போது ஏற்படும் உணர்ச்சிகள், செய்திகளை பற்றி கலந்துரையாடி பின்வரும் விடையங்களை வெளிக்கொணருங்கள்.

> - ♦ கிறிஸ்துவின் பலி எல்லாப் பலிகளிலும் உன்னதமானது.
> - ♦ நம்மை பாவங்களிலிருந்து மீட்பதற்காக கிறிஸ்து தமது உயிரைப் பலியாக்கினார்.
> - ♦ சிலுவைப்பீடத்தில் கிறிஸ்து குருவாகவும் பலிப்பொருளாகவும் இருந்து தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தார்.
> - ♦ கல்வாரியின் சிலுவைப்பலி திருப்பலியில் நிறைவடைகிறது.
> - ♦ அந்த உன்னத பலியில் நாமும் கிறிஸ்துவோடு இணைய வேண்டுமெனில் திருப்பலிப் பூசையில் பங்கு கொள்ள வேண்டும்.

(12 நிமிடங்கள்)

**படி 4.2.2**

- ✹ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✹ இணைப்பு 4.2.1 லுள்ள கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 4.2.3

* குழுக்களைக் கலைத்து வகுப்பை மீள் ஒழுங்கு செய்து ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
* ஏனைய குழுக்களிலிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

- முழு உலகையும் மீட்ட கிறிஸ்துவின் பலி பழைய ஏற்பாட்டு பலிகள் அனைத்தையும் நிறைவடையச் செய்கிறது.
- தன்மேல் பாவத்தை சுமந்துகொண்ட கடவுளின் ஆட்டுக்குட்டியாக கிறிஸ்துவை யோவான் அறிமுகம் செய்கிறார்.
- போதகரும் ஆண்டவருமாகிய கிறிஸ்து தம்மை அடிமை நிலைக்குத் தாழ்த்தி தன் சீடர்களின் காலடிகளைக் கழுவினார். கிறிஸ்துவின் இவ்வாறான மாதிரிச் செயல் தன்னை முற்றிலும் வெறுமையாக்கி சிலுவையில் உயிர் நீத்ததன் முன்னடையாளமாக இருக்கிறது.
- பாஸ்கா விருந்தின் போது கிறிஸ்து அப்பத்தை யும் இரசத்தையும் தன் உடலாகவும் இரத்த மாகவும் மாற்றினார். இதைத் தமது பாடுகள் மரணம் உயிர்ப்பின் நினைவாக ஏற்படுத்தினார்.
- உன்னத குருவாகிய கிறிஸ்து தமது இரத்தத்தி னால் புதிய நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.
- கிறிஸ்து இறைவனுக்கும் மனிதனுக்கும் மத்தியில் இடைநிலையினராகி நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கிறார்.
- சிலுவை மரணத்தினால் கிறிஸ்து எமக்கு புதுவாழ்வை பெற்றுத் தந்தார்.
- சிலுவையில் தொங்கிய கிறிஸ்து தமது பகைவரையும் மன்னிக்க வேண்டுமென்று முன்மாதிரிகை காட்டினார்.
- புதிய உடன்படிக்கையின் ஒரே நித்திய பலியாகிய திருப்பலி வழியாகவே நமக்கு முடிவில்லா வாழ்வு உறுதியாகிறது.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ✸ கிறிஸ்துவின் பலி எல்லாப் பலிகளிலும் உன்னத மானது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- ✸ கிறிஸ்துவின் கல்வாரிப் பலிக்கும் திருப்பலிக்குமுள்ள தொடர்பை ஒப்பிட்டுக் காட்டுவர்.
- ✸ சிலுவையில் தொங்கிய கிறிஸ்து தனது பகைவரை யும் அன்பு செய்கிறார் என்பதற்கேற்ப சமூக ஒருமைப்பாடுக்கு நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்து எழுதிக் காட்டுவர்.
- ✸ யோவான் 13:1-15 வசனத்தின்படி எனது தியாக வாழ்வு என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுவர்.

**இணைப்பு 4.2.2**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ♦ செயற்பாட்டுப் படிவங்களை வாசித்து கலந்துரையாடுங்கள்.
- ♦ குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : காலடிகளைக் கழுவுவதன் வழியாக ஊழியர் தலைவர் தொடர்பு பற்றி கிறிஸ்து முன்வைத்த புதிய மனப்பாங்கை வெளிப்படுத்தும் ஐந்து செயற்பாடுகளை எழுதிக்காட்டுவர்.

குழு - 2 : சிலுவைப் பலியினால் கிறிஸ்து எமக்குப் பெற்றும் தந்த மீட்பும் புதுவாழ்வும் பற்றி கவிதை ஒன்று தயாரிப்பர்.

குழு - 3 : லூக்கா 23:34-49 பகுதியை நடித்துக் காட்டுவர்.

குழு - 4 : எபி. 9:11-15 பகுதியின்படி இடைநிலையினரான கிறிஸ்துவைப் பின்பற்றி இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே நீர் இடைநிலையினராக செயற்பட்ட சந்தர்ப்பங்களை சுவரொட்டி மூலம் வெளிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | : | திருவழிபாட்டின் வழியாக இறைமக்கள் இறைவனைப் புகழ்வர். |
| **தேர்ச்சிமட்டம்** | **4.3** | : | ஆரம்ப திருச்சபையில் திருவழிபாடு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட (முறை) விதம் பற்றிய காரணிகளை முன்வைப்பர். |
| **செயற்பாடு** | **4.3** | : | ஆரம்ப திருச்சபையில் திருவழிபாடு பற்றி அறிவோம். |
| **பாடவேளைகள்** | | : | 120 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடு** | | - | ❖ லூக். 24:30-31, தி.ப. 2:42-46, 20:7, 1கொரி. 11:23-26, 1பேதுரு 2:5, க.தி.ம. 1066, 1330, 1350, 1355<br>❖ இறைமக்கள் குடும்பமாக திருப்பலியில் பங்கு கொள்ளும் படம்.<br>❖ டிமைத்தாள், மாக்கர் பேனா.<br>❖ இணைப்புகள் 4.3.1, 4.3.2 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.3.1**

- இறை மக்கள் ஒரு குடும்பமாக திருப்பலியில் பங்கு கொள்ளும் படத்தை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- படத்தில் அவதானித்தவற்றை மாணவரிடம் கேட்டு அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- இவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

> ♦ இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனுக்குச் செலுத்தும் அதி உன்னத ஆராதனை திருவழிபாடாகும்.
> ♦ ஆரம்ப திருச்சபையின் திருவழிபாட்டில் இறைவார்த்தைப் பகிர்வும் அப்பம் பிடுதலும் முக்கிய நிகழ்வாக இடம் பெற்றன.
> ♦ திருவழிபாட்டில் பங்கு கொள்ளும் இறைமக்கள் சகோதர அன்பு, பகிர்வு, ஒற்றுமை போன்ற நற்பண்புகளினாலும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளினாலும் நல்ல உறுதியான குடும்பமாகவும் சமுதாயமாகவும் கட்டியெழுப்பப்படுகின்றனர்.
> ♦ திருவழிபாட்டையும், நற்கருணையையும், அடிப்படையாகவும் மையமாகவும் கொண்டிருந்தாலன்றி கிறிஸ்தவ சமுதாயம் வளர்ச்சிபெற முடியாது.

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4.3.2

* பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
* இணைப்பு 4.3.1 லுள்ள கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
* செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 4.3.3

* குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
* ஏனைய குழுக்களிலிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

- ♦ இறை மக்கள் இறைமகன் யேசுவோடு இணைந்து தந்தையாம் இறைவனுக்கு தங்கள் சொல்லாலும் செயலாலும் செய்யும் வழிபாடே திருவழிபாடாகும்.
- ♦ அப்பம் பிட்கும் சடங்கின் போது இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்ற கிறிஸ்துவின் பணிப்புரை தொடக்க திருச்சபையில் அப்பம் பிடும் சடங்காக நிறைவேற்றப்பட்டது.
- ♦ இயேசு தங்கள் வாழ்வில் ஏற்படுத்திய பன்முக மாற்றங்களையும் அவர் தங்களிடம் செய்யச் சொல்லி ஒப்படைத்த மாபெரும் மறைபொருளாம் நற்கருணையையும் பிறரோடு அனுபவ ரீதியாகப் பகிர்ந்தனர். பின் இயேசுவின் பிரசன்னத்தை உலகிற்கு அறிவிக்கத் தொடங்கினர்.
- ♦ தொடக்க திருச்சபையில் மக்கள் ஒரே மனத்தினராய் ஒன்றுகூடி திருத்தூதர் கற்பிப்பதைக் கேட்டு அப்பம் பிடுதலில் பங்கு கொண்ட வழிபாட்டு முறை பிற்கால கிறிஸ்தவ வழிபாட்டு முறைக்கு அடிப்படையாக அமைந்தது.
- ♦ எம்மாவு சென்ற சீடர்களுக்கு உயிர்த்த கிறிஸ்து இறைவார்த்தையை விளக்கி அப்பத்தைப்பிட்டு தம்மை வெளிப்படுத்தினார். அப்பம் பிடும் சம்பவத்தின் மூலம் சீடர்கள் உயிர்த்த கிறிஸ் துவை அறிந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ கிறிஸ்து நிறைவேற்றிய கடைசி இராவுணவு நிகழ்வு திருத்தூதரிடமிருந்து தொடர்ச்சியாக திருச்சபைக்கு கையளிக்கப்பட்டது.
- ♦ திருச்சபை ஆரம்ப நாட்களிலிருந்தே கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்ப்பையும் நினைவு கூர்ந்து கொண்டாடி வந்தது.
- ♦ தொடக்கத் திருச்சபையில் திருத்தூதர்களின் தலைமையில் இறைவார்த்தையை கேட்பதும் அப்பத்தை பிடுதலும் வீடுகளில் தினந்தோறும் நடைபெற்று வந்தது.
- ♦ வழிபாட்டிற்கென்று பிரத்தியேக இடமின்றி விசுவாசிகள் கூடும் இடங்களிலும் வீடுகளிலும் வசதியான வேறு இடங்களிலும் தங்கள் வழிபாட்டை நடத்தினர்.
- ♦ இந்த செயற்பாடானது இறைவார்த்தை வழிபாடாகவும் அப்பம்பிடும் வழிபாடாகவும் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ✸ திருவழிபாடு படிப்படியாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையை விபரிப்பர்.
- ✸ தொடக்க திருச்சபையில் முதல் கிறிஸ்தவர்களின் வழிபாட்டு முறையை எழுதுவர்.
- ✸ எம்மாவு சென்ற சீடர்களுக்கும் கிறிஸ்துவுக்குமிடையில் நடந்த உரையாடலை நாடகமாக நடித்துக் காட்டுவர்.
- ✸ 1கொரி. 11:23-26 பகுதியை வாசித்து கிறிஸ்துவைப் போல் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க மேற்கொள்ளும் செயற்பாடுகளை சுவரொட்டி மூலம் வெளிப்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு 4.3.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவத்தை நன்றாக வாசியுங்கள்.
- எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : எம்மாவுஸ் நிகழ்ச்சிக்கும் திருப்பலிக்குமுள்ள தொடர்பை கலந்துரையாடி முன்வையுங்கள்.

குழு - 2 : தி.ப. 2:42-46 முதல் கிறிஸ்தவ சபையின் பண்புகளை இன்றைய கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி விளக்குங்கள்.

குழு - 3 : 1கொரி. 11:25-26 வாசித்து கிறிஸ்துவின் மரணத்தை ஞாபகப்படுத்தி பிறருக்காக தம்மை அர்ப்பணிக்க தியாகம் செய்ய செய்யக்கூடிய செயல்களை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு - 4 : திருவழிபாடு படிப்படியாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பியுங்கள்.

**இணைப்பு 4.3.2**

## முதல் மூன்று நூற்றாண்டுகள் - மலர்ச்சியின் காலம்

திருத்தூதர் காலத்து வழிபாட்டுமுறை, நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள் பற்றி இன்று நமக்குக் கிடைக்கும் ஆதாரங்கள் மிகச்சொற்பமே. இக்காலத்தில் யூத வழிபாட்டு முறைகளே பெரிதும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. காலப்போக்கில் அவை மாற்றம் கண்டன.

தொடக்ககால கிறிஸ்தவ மக்களின் வாழ்வில் மிக முக்கியமாக இடம் பெற்றிருந்தது திருமுழுக்கும் நற்கருணையுமே..... திருப்பலி யூதாகளின் பாஸ்கா விழாவின் அடிப்படையிலே, திராட்சைக் கிண்ணத்தை ஏந்தி நன்றிப்புகழ் பாடும் யூத மரபின் அடிப்படையிலே கொண்டாடப்பட்டது. (தி.ப. 2:42-46, 1கொரி. 11:28-29)

இத்தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் யூதர்களைப் போன்றே தங்கள் இறைவார்த்தை வழிப்பாட்டை தேவாலயத்திலும், செபக்கூடத்திலும் பின்பு ஒன்று கூடும் வீடுகளிலும் நிகழ்த்தினர். அப்பத்தை பிட்கும் (திருப்பலி) நன்றிப்பலியை வீடுகளில் நிறைவேற்றினர்.

இவ்வழிபாடுகளில் இறைவார்த்தை வழிபாடும் நற்கருணை வழிபாடும் ஒரே வழிபாட்டின் கூறுகளாயிருந்தன. ஆயரோ குருவோ தலைமை ஏற்க, வழிபாடும் மக்களைப்பார்த்தே நடைபெற்றது.

வரையறுக்கப்பட்ட செபங்கள் இன்னும் ஆக்கப்பட்டிருக்கவில்லை, தாய்மொழியிலேயே (அரமெயிக், கிரேக்கம்) வழிபாடு நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 - 6 நூற்றாண்டுகள் - பொற்காலம்

இக்காலத்தை திருவழிபாட்டின் பொற்காலம் என்று அழைக்கலாம். கி.பி. 313இல் உரோமைப் பேரரசர் கொண்ஸ்டன்ரைன் கிறிஸ்தவ மறையைத் தன் பேரரசு முழுவதும் அரச மதமாக அறிவித்தார். இந்த மிலான் சாசனத்தின் வழியாக கிறிஸ்தவ மதத்தின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் தேவையான எல்லா உதவிகளும் ஆதரவும் தாராளமாய் கிடைத்தன. ஆலயங்கள் எழுந்தன. இக்காலத்தில் பல்வேறு இடங்களிலும் பல்வேறு விதமான வழிபாட்டு முறைகள் தோன்றின. இலத்தீன், பைசாந்தியன், ஆர்மேனியன், மார்தோமைட், கால்தேயன், கோப்டிக், எகிப்தியன், சீரோ மலபார், சீரோ மலங்கரா, கல்லிக்கன், மொசராபிக், செல்டிக் போன்ற பல்வேறு வகையான கிறிஸ்தவ வழிபாட்டு மரபுகள் தோன்றின.

இக்காலத்தில் வழிபாட்டில் பயன்படுத்தவென எழுதப்பட்ட செபங்கள் தொகுக்கப்பட்ட வழிபாட்டு நூல்கள் தோன்றின.

## 7 - 12 நூற்றாண்டுகள் - தளர்ச்சியின் காலம்

அரசை ஒன்றிணைக்க ஒரே மொழியே வழிபாட்டுமொழியாக வேண்டும் என பிரெஞ்சு அரசர்கள் விரும்பினர். இலத்தீன் மாத்திரமே வழிபாட்டு மொழியாகியது.

இலத்தீன் மொழி மக்களுக்கு விளங்காதபடியால் வழிபாட்டில் விளங்கிப் பங்கு கொள்ளும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து போனது. குருக்கள் தாழ்ந்த குரலில் செபங்களைச் சொன்னார்கள். மக்களை நோக்காமல் தூயகத்தை நோக்கியவாறு குருக்கள் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள்.

## 13 - 16 ஆம் நூற்றாண்டுகள்

13ஆம் நூற்றாண்டில் இலத்தீன் முறை (உரோமை) வழிபாடு நிலையான இடம்பெற்றதாக மாறியது. திருப்பலிப் புத்தகம் ஆக்கப்பட்டது. இவ்வாறு 1747இல் முதல் உரோமை திருப்பலிப்புத்தகம் இத்தாலி மிலானில் அச்சிடப்பட்டது. இவ்வாறு உரோமை வழிபாட்டு முறை ஐரோப்பா முழுவதும் பரவியது. வழிபாடுகளில் மக்களின் ஆர்வம் குன்றியது. திரிதெந்தீன் பொதுச்சங்கம் (1561-1563) திருவழிபாட்டு நூல்களை திருத்தியமைக்கும் பணியை மேற்கொண்டது.

சட்ட ஒழுங்கு முறைப்படி செபங்களை, வழிபாட்டு நியமங்களை நிறைவேற்றினால் போதும் என்ற மனநிலை உருவாகியது. திருவழிபாடு குருக்களின் தனிச் சொத்தாக மாறியது. மக்கள் தமது தனிப்பட்ட பக்தி முயற்சிகளில் நிறைவு தேடினர்.

## மறுமலர்ச்சியின் காலம்

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே வழிபாட்டை அர்த்தமுள்ளதாக மாற்றும் முயற்சிகள் பிரான்ஸ் நாட்டில் தோன்றத் தொடங்கின. 20ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை 10ஆம் பத்திநாதர் வழிபாட்டில் சீர்சிருத்தங்களை கொண்டுவர முயன்றார். அடுத்துவந்த திருத்தந்தை 11ஆம், பத்திநாதர் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் ஆகியோரும் திருவழிபாட்டை சீரமைக்க உழைத்தனர். அடுத்து வந்த திருந்தந்தை 23ஆம் யோவான் 1962இல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி திருவழிபாட்டை திருத்தியமைக்கவும் அர்த்தமுள்ளதாக்கவும் முயற்சிகளை முடுக்கி விட்டார். தாய்மொழியில் திருவழிபாடு, பங்கேற்கும் இறைமக்கள் போன்ற பல வழிபாட்டுச் சீர்த்திருத்தங்களுக்கு வழிவகுத்தது.

ஆதாரம் : திருவழிபாடு ஓர் அறிமுகம்
அருட்திரு. எஸ் ஆரோக்கியராஜ், திண்டிவனம், 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 4.0 : திருவழிபாட்டின் வழியாக இறைமக்கள் இறைவனைப் புகழ்வர்.

தேர்ச்சிமட்டம் 4.4 : திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டின் முக்கியத்துவத்தை விளங்கி வாழ்வை அமைத்துக் கொள்வர்.

செயற்பாடு 4.4 : திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டை அர்த்தமுள்ளதாக்குவோம்.

பாடவேளைகள் : 120 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடு

- ❖ லூக். 4:16-21, க.தி.ம. 1346 - 1349, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு - ''திருவழிபாடு'' இல. 24-35
- ❖ திருவிவிலியம்
- ❖ டிமைத்தாள், மாக்கர் பேனா.
- ❖ கிறிஸ்து போதிக்கும் படம்
- ❖ இணைப்புகள் 4.4.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 4.4.1

- ✸ திருவிவிலியத்தை பவனியாக கொண்டு வந்து பீடத்தில் வைத்து வணக்கம் செலுத்துவர்.
- ✸ இது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- ✸ லூக். 4:16-21 பகுதியை சத்தமாக வாசியுங்கள்.
- ✸ பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

> ♦ ஆண்டவரின் வார்த்தைகள் உயிருள்ளவை. இறைவார்த்தை வழியாக இறைவன் நம்மோடு பேசுகிறார்.
> ♦ எல்லா வழிபாடுகளிலும் இறைவார்த்தை முக்கிய இடம் பெறுகிறது.
> ♦ இறைவார்த்தை இறைமக்களின் விசுவாசத்தை ஆழப்படுத்தி வாழ்வளிக்கிறது.
> ♦ திருப்பலியில் நற்செய்தி வாசிக்கும் போது எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும்.
> ♦ இறைவார்த்தை வழிபாடும் நற்கருணை வழிபாடும் திருப்பலியின் பகுதிகளாகும்.

(12 நிமிடங்கள்)

படி 4.4.2

- ✸ பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✸ இணைப்பு 4.4.1 லுள்ள கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
* எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 4.4.3

* குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
* விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
* ஏனைய குழுக்களிலிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

- திருவழிபாட்டின் உச்சமாக இருப்பது திருப்பலி யாகும். திருப்பலியில் இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என இரும்பெரும் முக்கிய பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன.
- எல்லா வழிபாடுகளிலும் இறைவார்த்தை முக்கிய இடம் பெறுகிறது.

  **இறைவார்த்தை,**
  - மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கின்றது.
  - மக்களுக்கு தேவையான போதனையை வழங்குகிறது.
  - திருச்சபைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது.
  - குணமளிக்கும் வல்லமையை அளிக்கின்றது.
  - இறை மக்களை விசுவாசத்தில் உறுதிப்படுத் துகிறது.
  - ஆன்மாவிற்கு உணவளிக்கிறது.
  - ஞான வாழ்விற்கு ஊற்றாக உள்ளது.
- இயேசுவின் காலத்திலும் செபக்கூட வழிபாடு களில் இறைவார்த்தை வாசிக்கப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது.
- தொடக்க திருச்சபையிலும் திருத்தூதர்கள் செபக்கூடங்களில் இறைவார்த்தை ஒன்று கூடல்களுக்கு சமூகமளித்தனர்.
- திருத்தூதர்காலத்திலும் முதல் கிறிஸ்தவர்கள் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அந்தப் பாரம்பரியம் இன்று திருப்பலியிலும் தொடர்ந்து இடம் பெற்றுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருப்பலியில் இறைவார்த்தை வழிபாடு பின்வரும் உப பிரிவுகளைக் கொண்டுள்ளது.
    - வாழ்த்துரை
    - மனத்துயர் வழிபாடு
    - உன்னத கீதம்
    - சபை மன்றாட்டு
    - வாசகம்
    - மறையுரை
    - விசுவாசிகளின் மன்றாட்டு
- இறைவார்த்தை வழிபாட்டில் முதல் வாசகத்தி லிருந்து மறையுரைவரையுள்ள பகுதி முக்கிய இடம் பெறுகிறது.
- இறைமக்களின் பொது வழிபாட்டில் நற்செய்தி முக்கிய இடம் பெறுகிறது.
- ஞாயிறு வாசகங்கள் 3 ஆண்டு கால வட்டத்திலும், வாரநாள் வாசகங்கள் 2 ஆண்டு கால வட்டத்திலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ஞாயிறு திருப்பலியிலும் பெருவிழா திருப்பலி யிலும் 3 வாசகங்களும், வாரநாட் திருப்பலியில் 2 வாசகங்களும் இடம்பெறுகின்றன.
- முதல் வாசகத்திற்குப் பின்பு திருப்பாடல்களைப் பாடி செபிக்கிறோம். இது வாசகத்தை தியானிக்க, இறைவார்த்தையை செபிக்க தூண்டுகிறது.
- வாசகங்களுள் நற்செய்தி வாசகம் முக்கிய இடம் பெறுகிறது.
- நற்செய்தி வாசிக்கும் போது எழுந்து நிற்றல், வாசிக்கும் முன் தூபம் காட்டுதல், வேதாக மத்தைப் பவனியாகக் கொண்டுவருதல் என்பன நற்செய்தியின் மகிமையை வெளிப்படுத்துகிறன.
- பொதுவாகத் திருப்பலியில் நற்செய்தியைக் குருவே வாசிப்பார் அல்லது திருத்தொண்டர் இருந்தால் அவர் வாசிப்பார். ஆனால் பொது நிலையினர் யாரும் இதை வாசிக்கக் கூடாது.
- குருவானவர் திருப்பலியில் வாசகங்களை விளக்கி விசுவாசத்தை ஆழப்படுத்தி, அன்றாடப் பிரச்சினைகளோடு, சமூகத்தோடு, வாழ்வோடு தொடர்புபடுத்தி அதற்கு பொருளும் தீர்வும் காண உதவிபுரிகிறார். திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டில் முழுமையாக பங்குபற்ற வேண்டும்.

(60 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ✸ திருப்பலியில் மறையுரை உமது வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்கள் இரண்டு எழுதுக.
- ✸ விசுவாசிகளின் மன்றாட்டு இரண்டை எழுதிக் காட்டுவர்.
- ✸ திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டை ஆயத்தம் செய்யும் முறையை எழுதிக்காட்டுவர்.
- ✸ உரிய நேரத்திற்கு திருப்பலியில் பங்கு கொண்டு இறைவார்த்தை வழிபாட்டுக்கு முழுமையாக பங்குபெற வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- ✸ இறைவார்த்தை அடங்கிய கையேடு ஒன்றை தயாரிப்பர்.
- ✸ ஆசிரியரின் உதவியுடன் வேதாகம வழிபாடு ஒன்றை ஆயத்தம் செய்வர்.

**இணைப்பு 4.4.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ♦ உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவத்தை நன்றாக வாசியுங்கள்.
- ♦ எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.
- ♦ கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- ♦ குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : திருப்பலியில் இறைவார்த்தை முக்கிய இடம் பெறுவதற்கான காரணங்களை ஆராயுங்கள்.

குழு - 2 : இறைவார்த்தை வழிபாட்டின் உப பிரிவுகளை எழுதிக் காட்டுங்கள்.

குழு - 3 : திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டில் பங்குபற்றாத மாணவருக்கு நீர் வழங்க கூடிய அறிவுரைகளைக் குறிப்பிட்டு அறிவுத்தல் பட்டியல் ஒன்றை தயாரியுங்கள்.

குழு - 4 : திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்யும் முறையைத் திட்டமிட்டு முன்வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 4.0 | : திருவழிபாட்டின் வழியாக இறைமக்கள் இறைவனைப் புகழ்வர். |
| தேர்ச்சிமட்டம் | 4.5 | : திருப்பலியில் நற்கருணை வழிபாட்டின் முக்கியத் துவத்தை விளங்கி பக்தியாக பங்குபற்றுவர். |
| செயற்பாடு | 4.5 | : திருப்பலியில் நற்கருணை வழிபாட்டை விளங்கிக் கொள்வோம். |
| பாடவேளைகள் | | : 120 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடு -

- ❖ லூக். 22:19, க.தி.ம. 1350 - 1355 க.தி.ம. 1391 - 1401
- ❖ டிமைத்தாள், மாக்கர் பேனா.
- ❖ கடைசி இராபோசன படம்
- ❖ அப்பமும் இரசமும், அப்பம், மீன் படங்கள், ஒளி
- ❖ இணைப்புகள் 4.5.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.5.1**

- ✸ படங்களை வகுப்பிலே காட்சிப்படுத்துதல் அல்லது நற்கருணை படத்தின் முன் ஒளியேற்றுதல்.
- ✸ அதில் அடங்கியுள்ள கருத்துக்களை சிந்திப்பதற்கு மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- ✸ இக்கருத்துக்களை அடிப்படையாக வைத்து பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

- ♦ காணிக்கையில் தொடங்கி திருவிருந்து வரையுள்ள பகுதியே நற்கருணை வழிபாடு.
- ♦ காணிக்கைப் பொருட்களில் மிக இன்றியமையாதவை அப்பமும், இரசமாகும்.
- ♦ நற்கருணையில் கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் நித்திய வாழ்வின் உணவாகப் பெறுகிறோம்.
- ♦ நற்கருணையில் கிறிஸ்து நம்மோடு மிக நெருங்கிய முறையில் ஒன்றிக்கிறார்.
- ♦ நற்கருணை உட்கொள்வதால் திருப்பலியில் பங்குபெறுவது பூரணமடைகிறது.
- ♦ நற்கருணையில் கிறிஸ்து பிரசன்னமாக இருக்கிறார்.
- ♦ நற்கருணை வைக்கப்பட்டுள்ள இடங்களில் நாம் பக்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

(12 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 4.5.2

- பொருத்தமான முறையில் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 4.5.1 இலுள்ள கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பிரதிகளையும் டிமைன்தாள், மாக்கர் பேனா என்பவற்றை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாடுகளைக் பகிர்ந்து குழு ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லாக் குழுக்களும் தமது செயற்பாடுகளை முன் வைக்கத் தயார்படுத்துங்கள்.

(48 நிமிடங்கள்)

படி 4.5.3

- குழுக்கள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளை முன்வைக்கும்படி செய்யுங்கள்.
- விளக்கமளிக்க முன்வரும் குழுவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களிலிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து பொதுக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

♦ நற்கருணை வழிபாடு காணிக்கைப் பவனியோடு ஆரம்பமாகிறது.

♦ நற்கருணை வழிபாட்டில்
  - ♦ காணிக்கைப் பவனி
  - ♦ காணிக்கைகளை ஒப்புக்கொடுத்தலும் காணிக்கை மன்றாட்டும்.
  - ♦ தொடக்கவுரை
  - ♦ நற்கருணை மன்றாட்டு
  - ♦ திருவிருந்துப் பந்தியமர்வு ஆகியன இடம் பெறுகின்றன.

♦ **காணிக்கைப் பவனி :-**
காணிக்கைகளில் முதலிடம் பெறுவது திருப்பலிக்குத் தேவையான அப்பமும் இரசமுமே. அதையடுத்து பீடப்பணிக்குத் தேவையான பொருள்கள், எண்ணெய், மெழுவர்த்தி, மலர்கள், மற்றும் ஏழைகளுக்குப் பகிர்தளிக்கும் பொருள்கள் காணிக்கையாகத் தரப்படுகின்றன.

♦ **காணிக்கை மீது மன்றாட்டு :-**
காணிக்கைகளைச் சேகரித்த பின் குரு அமைதியான குரலில் அப்பத்தையும் இரசத்தையும் ஒப்புக் கொடுக்கிறார். பின்னர் காணிக்கைப் பொருட்கள் மீது காணிக்கை மன்றாட்டைச் சொல்லி செபிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **தொடக்கவுரை :-**

  தொடக்கவுரை வானதூதரின் வாழ்த்தொலியும் இயேசு ஜெருசலேமுக்குள் நுழைந்தபோது மக்கள் கூட்டம் எழுப்பிய ஆர்ப்பரிப்பும் இணைந்ததாகும். இறைவனின் வியத்தகு செயல்களுக்கு இறைமக்களின் இயல்பான நன்றி பாடலாகவும் புகழ்ச்சி பாடலாகவும் அமைந்துள்ளது.

- **நற்கருணை மன்றாட்டு :-**

  நற்கருணை வழிபாட்டில் நற்கருணை மன்றாட்டு சிறப்பு அம்சமாகும். நற்கருணை மன்றாட்டின் முதல் பகுதியில் காணிக்கைப் பொருட்கள் மீது பரிசுத்த ஆவி இறங்கி வந்து அவற்றைப் புனிதப்படுத்த வேண்டுமென்று குரு செபிக்கிறார். பின் வசீகர வார்த்தைகளைச் சொல்லி அப்பத் தைக் கிறிஸ்துவின் உடலாகவும் இரசத்தைக் கிறிஸ்துவின் இரத்தமாகவும் மாற்றுகிறார். இந் நற்கருணையை உட்கொள்ளும் அனைவரும் பரிசுத்த ஆவியால் குடும்பமாக ஒன்று சேர்க்கப்பட வேண்டுமென்று செபிக்கிறார். பின்னர் திருச்சபைக்காகவும், பணியாளர்களுக் காகவும், இறைமக்கள் அனைவருக்காகவும் இறந்தோருக்காகவும் மன்றாடுகிறார். இறுதியில் புனிதர்களின் தோழமையில் வானகப் பேரின் பத்தில் நாம் பங்குகொள்ள மன்றாடுகிறார்.

  நற்கருணை மன்றாட்டின் முடிவாகவும் உச்ச கட்டமாகவும் உள்ள இவர் வழியாக இவரோடு .... என்ற புகழ்ச்சிக் கீதத்தை குரு செபிக்க மக்கள் அனைவரும் ''ஆமென்'' என்ற பதிலு ரைத்து தந்தையாம் இறைவனை கிறிஸ்துவோடு சேர்ந்து புகழ்சின்றனர்.

  சில இடங்களில் இந்த இறுதிப் புகழுரையை மக்களும் சேர்ந்து பாடுகின்றனர். இது சரியன்று. இது நற்கருணை மன்றாட்டின் இறுதிப்பகுதி யாகும். குருவுக்கே உரியது.

- **திருவிருந்துப் பகிர்வு :-**

  இது கர்த்தர் கற்பித்த செபத்தோடு ஆரம்பமாகிறது. இறுதியில் நாம் கிறிஸ்துவின் திருவுடலை அப்ப வடிவில் ஆமென் என்று சொல்லி உட்கொள்கிறோம். இதை நாம் பாஸ்கா விருந்து, நினைவுத் திருவிருந்து, நற்கருணை விருந்து, செம்மறியின் திருவிருந்து, திருப்பலி விருந்து, பலி உணவு எனப் பலவாறு அழைக்கிறோம்.

- கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் பாஸ்கா மறைநிகழ்ச்சி நினைவுகூரப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ நற்கருணை நம்மை கிறிஸ்துவின் இதயத்தோடு இணைக்கிறது. இவ் வாழ்க்கையின் நீண்ட பயணத்தில் நமக்கு உறுதியளிக்கிறது. நித்திய வாழ்வை ஆசிக்கச் செய்து கிறிஸ்தவ சமூகத்தோடு நம்மை ஒன்றுபடச் செய்கிறது.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நற்கருணை வழிபாட்டின் பகுதிகளை எழுதுவர்.
- நற்கருணையை நாம் ஏன் மிக பக்தியுடன் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தை விபரிப்பர்.
- திருப்பலியில் நற்கருணை மன்றாட்டின் முக்கியத்துவத்தை விளக்குவர்.
- நற்கருணையைப் பெற்ற பின் சொல்லக்கூடிய பெருத்தமான செபமொன்றை எழுதுவர்.
- திருவிருந்தில் பங்குகொண்டு சமுதாயத்தில் சகோதரத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ முயற்சி செய்வர்.

**இணைப்பு 4.5.1**

## குழு ஆய்வுக்கான அறிவுறுத்தல்கள்

- ♦ உங்களுக்குத் தரப்பட்ட செயற்பாட்டுப் படிவத்தை நன்றாக வாசியுங்கள்.
- ♦ எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.
- ♦ கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- ♦ குழுக்களாக முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு - 1 : லூக். 22:19 கிறிஸ்து நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்வு அவரின் அன்பையும் கீழ்படிதலையும் வெளிப்படுத்துகிறது என்பதற்குரிய காரணங்களை கலந்துரையாடி கருத்துக்களை முன்வைப்பர்.

குழு - 2 : திருப்பலியில் காணிக்கை கொடுப்பது அவசியம் என்பதை வலியுறுத்த உதாரணங்கள் திருவிவலியத்திலிருந்து தருக.

குழு - 3 : நற்கருணையில் உண்மையாகவே கிறிஸ்து பிரசன்னமாக இருக்கிறார் என்பதை ஆராய்வர்.

குழு - 4 : நற்கருணையைப் பெறுவதால் எமக்குக் கிடைக்கும் நன்மைகளைத் தொகுத்து கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி III

9.3.0 கணிப்பீடும் மதிப்பீடும்

9.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம்

9.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3.1. கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம்

கற்றல் - கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படும். கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்ளவதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்குப் பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி, பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின்போது, மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களைப் பெற்றோர் உள்ளிட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன் வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student Centered) தேர்ச்சி மட்ட (Competency - Based) செயற்பாடு சார்ந்த (Activity - Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை, கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகக் கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு, ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு, கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளுங்கள்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாட விடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்யுங்கள். இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் சொற்பாட்டினை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall News papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப்புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- சமயோசிதப் பேச்சு (Impromtu Speech)
- நடிபங்கு (Role plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம் (Field Books/ Nature Diaries)
- செய்முறை சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேசக் கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தற் சாதனங்களையும் அறிமுகம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால், கற்றல் - கற்பித்தல் செய்கை, மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

01. பாடசாலைத் தவணை :- முதலாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி :- 1.3, 1.4

03. விடய உள்ளடக்கம் :- புதிய கிறிஸ்தவ சமூகத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்.

04. கருவியின் தன்மை :- தூய ஆவியின் வருகையோடு ஆரம்பமான புதிய உலகு செயற்பட்ட முறை தொடர்பாக இரட்டைப் பதிவு மூலம் முன் வைப்பது.

05. கருவியின் நோக்கம்

- தொடக்க திருச்சபையின் தந்தையர்கள் செயற்பட்ட முறை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பர்.
- திருச்சபையின் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணிகளைத் தேடிப் பார்ப்பர்.
- திருச்சபையின் வளர்ச்சிக்கான நமது பொறுப்புக்களை நிறைவேற்றக் கூடிய சந்தர்ப்பங்களைத் தேடிப் பார்த்து, அதற்கேற்ப முன்மாதிரிகையாகப் பல்வேறு நபர்களின் வழிகாட்டல்களைப் பெற்று அதற்கமைய செயற்படுவர்.

06. கருவிச் செயற்படுத்தல் பற்றிய ஆலோசனைகள்
ஆசிரியர்களுக்கானது :

- ஆசிரியர் செயற்பாட்டு வேலைகளை 1.3, 1.4 ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துங்கள்.
- குழுக்களாகக் கலந்துரையாடலில் ஈடுபடுத் துங்கள். அத்தோடு திருத்தூதர் பணி நூலின் துணையுடன் திருச்சபையின் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணிகளைத் தேடிக் கொள்ளுங்கள்.
- ''திருச்சபையின் வளர்ச்சிக்கு நாம் உதவு வோம்'' இரட்டைப் பதிவு ஏட்டுக்கு தமது பங்களிப்பு எனும் பகுதியை பூரணப்படுத்தும் முறையை மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- முன்மாதிரிகையாகப் பின்பற்றக் கூடிய நபர்கள் தொடர்பாக பரிசீலனை செய்ய வேண்டிய நூல்கள், பத்திரிகைகள் பற்றி மாணவர்களுக்கு அறிவியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பதிவு ஏட்டை அடிக்கடி மேற்பார்வை செய்து அறிக்கைகளை வைத்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடப்பட்ட தகவல்களையும் தேர்ந்தெடுத்த கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- இறுதி ஆக்கத்தை ஒப்படைக்க வேண்டிய திகதியை அறிவியுங்கள்.

மாணவர்களுக்கானது

- ஆசிரிய ஆசிரியைகளினால் தரப்படும் குறிப்பு களை புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.
- தரப்பட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப திருச் சபையின் வளர்ச்சியும் தமது பங்களிப்பும் பற்றிய விடயங்களை ஆராய்ந்து சமர்ப்பி யுங்கள்.
- உங்கள் கருத்துக்களை கலந்துரையாடலின் வழியாக முன்வைத்து பதிவு ஏட்டைத் தயாரி யுங்கள்.

07. தகவல்கள் பிரசுரம்

- பெந்தகோஸ்து தினத்தில் தூய ஆவியின் செயற்பாடுகள்.
- புதிய திருச்சபையின் வளர்ச்சிக்கு அடிப்படையான கிறிஸ்தவர்களின் பங்களிப்பு
- திருச்சபையின் வளர்ச்சிக்காக உயிர்த்தியாகம் செய்த முன்மாதிரிகையான ஆட்கள்.
- திருச்சபையின் வளர்ச்சிக்கு எனது பங்களிப்பு.

- நீங்கள் தேர்ந்தெடுத்த தலைப்பு யாது?
- குறிப்பிடப்பட்ட அலகு தொடர்பாக நீங்கள் தேர்ந்தெடுத்த விடயங்கள் எவை?
- இவ்விடங்களுக்கேற்ப நீங்கள் எவ்வாறு ஒழுகுவீர்கள்?
- திருச்சபையின் வளர்ச்சிக்கு தொடக்க கிறிஸ்தவ தலைவர்களின் வாழ்வின் வழியாக நீங்கள் மிகவும் விரும்பும் முன்மாதிரிகைகள்.
- திருச்சபையின் புதிய உதயத்தில் தூய ஆவியின் செயற்பாடு.
- ஒற்றுமையோடும், ஒரேமனத்தோராகவும் செயற்படுவதற்கு செபம் உதவிய விதம்.
- திருச்சபையைப் பாதுகாப்பதில் பொறுப்புக்களை நிறைவேற்றும் விதம்.

**இரட்டைப் பதிவு ஏடு**

| தேர்ந்தெடுத்த கருத்துக்கள் | தமது துலங்கல் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளி வழங்கும் நியதிகள்

| நியதிகள் / குழு இலக்கம் | நோக்கங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளல். | செற்பாட்டில் ஈடுபடுதலும் பொறுப்பேற்றலும். | இரட்டைப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள். | கொடுக்கப்பட்ட நேரத்தில் நிறைவு செய்தல். | ஆக்கத்தின் கவர்ச்சிகரமான தன்மை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

## புள்ளிவழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| மேலும் விருத்தியடைய வேண்டும் | - | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

01. பாடசாலைத் தவணை :- இரண்டாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி :- 3:2, 3:3

03. விடய உள்ளடக்கம் :- எமக்குள் இறைவனின் குரல் - இறைவனோடு இணைந்த வாழ்வு

04. கருவியின் தன்மை :- இறைவனோடு இணைந்து வாழ்வதற்கு இறைவனின் குரலுக்குச் செவிமடுத்து தமது வாழ்வைக் கட்டியெழுப்புவது பற்றி உடனடிப் பேச்சுக்களை (Spontaneous Speech) முன்வைப்பர்.

05. கருவியின் நோக்கம் :-
- திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இறைவனின் குரலுக்குச் செவிமடுத்து அழைப்புப் பெற்றவர்களின் வாழ்க்கை பற்றித் தேடிப் பார்ப்பர்.
- இறைவனோடு இணைந்து வாழ்ந்த புனிதர்களின் வாழ்க்கை பற்றித் தேடிப்பார்ப்பர்.
- இவர்களது வாழ்க்கை வழியாக தாம் பெறக்கூடிய முன்மாதிரிகைகளை அறிந்து கொள்வர்.
- இறைவனோடு இணைந்து வாழ்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவர்.

06. கருவிச் செயற்படுத்தல் பற்றிய ஆலோசனைள்
ஆசிரியர்களுக்கானது :

- ஆசிரியர் செயற்பாடுகளை வேலைகளை 3:2, 3:3 ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துங்கள்.
- குழுக்களாகக் தகவல்களைச் சேகரிப்பதில் ஆரம்பித்து தனித்தனியாக உடனடி பேச்சை முன்வைக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தமக்குக்கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளை குறிப்புப் புத்தகத்தில் குறிக்கும் படி மாணவருக்கு ஆலோசனை வழங்குங்கள்.
- தகவல்களைச் சேகரிப்பதற்காகப் பரிசீலனை செய்ய வேண்டிய நூல்கள், பத்திரிகைகள் பற்றி மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
- சேகரிக்கப்பட்ட தகவல்களை எல்லாக் குழுக்களுடனும் கலந்துரையாட சந்தர்ப்பம் அளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | • குழுக்களுக்கிடையில் தலைவரொருவரைத் தேர்ந்தெடுத்து உடனடி பேச்சை முன்வைக்கும் விதத்தினை நடாத்தும்படி ஒப்படையுங்கள். |
| மாணவர்களுக்கானது | • தகவல்களைச் சேகரிப்பதற்காக உங்கள் குழுவிடம் தரப்பட்ட மாதிரியை குறித்துக் கொள்ளுங்கள்.<br>• பொருத்தமான நூல்களைப் பரிசீலிப்பதன் வழியாக சரியான தகவல்களை கோவைப் படுத்துங்கள்.<br>• குழுக்களாகச் சேகரித்த தகவல்களுக்கேற்ப உடனடிப் பேச்சை குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் நடாத்துங்கள். |
| 07. முதலாவது குழு | • திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறைவனின் குரலுக்கு நன்முறையில் செவிமடுத்த, கீழ்ப்படிந்தவர்களை தேடிக் கொள்ளல்.<br>• இவர்களின் ஒருவரது அழைத்தலைத் தேர்ந்தெடுத்து தகவல்களைச் சேகரித்தல்.<br>• அதன் வழியாகத் தமது அழைப்பைத் தெரிவு செய்யவும், இறைவனின் குரலுக்குச் செவி மடுக்கவும் உதவியாகக் கொள்ளல்.<br>• அவ்வழைத்தல் தமது பணிக்கு உதவும் விதம். |
| 08. இரண்டாவது குழு | • இறைவனோடு இணைந்த சில புனிதர்களின் பெயர்களைக் கூறுதல்.<br>• இவர்களில் ஒரு புனிதரைத் தெரிவு செய்து அவரது வாழ்க்கை தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.<br>• இவை பிற்காலப் பணிக்கு உதவும் விதத்தினைத் தேடிப்பார்த்தல்.<br>• இறைவனோடு இணைந்து வாழ்வதனால் வாழ்வை வெற்றி பெறச் செய்யக்கூடிய விதத்தினை அனுபவங்கள் மூலம் தேடிப் பார்த்தல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளி வழங்கும் நியதிகள்

| நியதிகள் / குழு இலக்கம் | நோக்கங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளல். | செற்பாட்டில் ஈடுபடுதலும் பொறுப்பேற்றலும். | விசேட செபங்கள், ஆட்களின் வெளிப்பாடு என்பவற்றை ஈடுபடுத்துவதும் ஆக்கத் திறனும். | கொடுக்கப்பட்ட நேரத்தில் நிறைவு செய்தல். | ஆக்கத்தின் கவர்ச்சிகரமான தன்மை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

புள்ளிவழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| மேலும் விருத்தியடைய வேண்டும் | - | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

01. பாடசாலைத் தவணை :- மூன்றாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி :- 4:4, 4:5

03. விடய உள்ளடக்கம் :- திருப்பலியில் இறைவார்த்தை வழிபாடும், நற்கருணை வழிபாடும்.

04. கருவியின் தன்மை :- திருப்பலியில் பக்தியுடன் பங்குபற்றி கிறிஸ்துவுக்குள் செயற்படுவதோடு நடைமுறை செயற்பாடொன்றைத் தயாரிப்பர்.

05. கருவியின் நோக்கம் :-
- இறைவார்த்தை வழிபாட்டோடு தொடர்புடைய வரலாற்றுத் தகவல்களைத் தேடிப்பார்ப்பர்.
- திருப்பலியின் பிரதான சந்தர்ப்பமான நற்கருணை வழிபாடு என்பதைத் தேடிப்பார்ப்பர்.
- திருப்பலியில் பொது நிலையினரின் பங்களிப்பு பற்றிய விடயங்களை விமர்சிப்பர்.
- திருப்பலியில் நேரடியாகப் பங்கு பற்றுவர்.

06. கருவிச் செயற்படுத்தல் பற்றிய ஆலோசனைகள்
ஆசிரியர்களுக்கானது :

- ஆசிரியர் செயற்பாடுகளை வேலைகளை 4.4, 4.5 ஆரம்பிப்பதற்கு முன் இக்கருவிகளை வகுப்பில் அறிமுகப்படுத்துங்கள்.
- தனித்தனியே ஆயத்தப்படுத்திய திருப்பலி ஒழுங்கினை குழுக்களாக குறிப்பிடப்பட்ட பகுதிகளை பூரணப்படுத்துங்கள்.
- திருப்பலி நடைபெறும் குறிப்பிட்ட நாளுக்கான வாசகங்கள், அறிமுகம், அலகு என்பவற்றை மாணவர்களுக்கு கொடுங்கள்.
- நடைமுறைச் செயற்பாட்டுக்குப் பொருத்தமான பாடல்கள், விசுவாசிகளின் மன்றாட்டு பற்றிப் பரிசீலிப்பதற்காகத் தேவையான நூல்கள், பத்திரிகைகள் என்பனவற்றை மாணவருக்குக் கொடுங்கள்.
- தமது குழுவுக்குரிய விசேட விடயங்களையும் பொறுப்புக்களையும் ஒப்படைத்து மாணவர்களது பெயர்ப்பட்டியலொன்றை முன் வைப்பதற்கு ஆலோசனை வழங்குங்கள்.
- எடுத்து வரவேண்டிய பொருட்களையும் ஆலயத்தைச் சுத்தம் செய்வதற்கான பொறுப்பையும் மாணவர்களிடம் ஒப்படையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | • தயாரிக்கப்பட்ட திருப்பலியின் ஒழுங்குகளை குறிக்கப்பட்ட தினத்துக்கு முன் பெற்றுக் கொள்ளக் கூடிய தினத்தை அறிவியுங்கள். |
| மாணவர்களுக்கானது | • திருப்பலிக்கு வரும்போது சுத்தமாக வாருங்கள்.<br>• கொண்டு வர வேண்டிய பொருட்களையும் எடுத்து வாருங்கள்.<br>• திருப்பலியின் போது பண்புள்ள முறையில் ஒழுகுங்கள்.<br>• திருப்பலியில் முழுமையாகப் பங்குபற்றுங்கள். |
| 07. தகவல்கள் பிரசுரம் | • திருப்பலியின் ஒழுங்கு முறைகளை கீழ்க் காணும் விடயங்களின் துணையுடன் பூரணப்படுத்துங்கள்.<br>1. தரம்<br>2. திகதி<br>3. அறிமுகம்<br>4. வாசகங்களுக்காக நியமிக்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள்<br>5. விசுவாசிகளின் மன்றாட்டுகள்.<br>6. விசுவாசிகளின் மன்றாட்டுகளை வாசிக்கும் மாணவர்கள்.<br>7. காணிக்கைப் பவனியில் பங்குப்பற்றும் மாணவர்கள்.<br>8. இறுதியில் நன்றி கூறும் மாணவர்கள்.<br>9. பாடல்கள் - ஆரம்பப் பாடல்<br>- பாவமன்னிப்பு<br>- தியானப் பாடல்<br>- காணிக்கைப் பாடல்<br>- திருவிருந்துப் பாடல்<br>- இறுதிப்பாடல்<br>10. இசைக் கருவிகள், பாடகர் குழுவில் பங்கு பற்றும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல்<br>11. திருப்பலியில் செயற்பாட்டோடு பங்குப் பற்றிய மாணவர்களின் கருத்துகளும் முறைப்பாடுகளும்.<br>12. நேரடிப் பங்குபற்றுதல், செயற்படுதல் பற்றிய உங்கள் அனுபவங்கள் எவை? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளி வழங்கும் நியதிகள்

| நியதிகள் / குழு இலக்கம் | நோக்கங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளல். | செயற்பாட்டுக்கான உபகரணங்களைச் சரியாகப் பாவித்தல். | நுட்ப முறைகளை அவதானமாகக் கையாளுதல் | முன்வைத்தல், பங்குபற்றுதல் அனைத்தையும் கட்டியெழுப்புதல் | முடிவுகளை அண்மித்தல், நிறைவு செய்தல், நடத்தை பொறுப்பை நிறைவேற்றுதல். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |

புள்ளிவழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| மேலும் விருத்தியடைய வேண்டும் | - | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කතෝලික ධර්මය (දෙ) 9

ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010/T/9/TIM/2750

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org